www.tamilarangam.net


# களத்தில்

(29.02.2000) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (203)




ஆட்பலம், ஆயுதபலம், ஆன்மபலம், மக்கள்பலம் என்ற ரீதியில் சகலபலத்தோடும் நாம் வலுப்பெற்று நின்றபோதும், எமது தாயகத்தை மீட்டெடுக்கும் போரியல் சக்தி எமக்கிருந்தபோதும், நாம் சமாதானப்பாதையைக் கைவிடவில்லை. உயிரழிவையும் இரத்தக்களரியையும் தவிர்த்து, சமாதானவழியில் நாகரீகமான முறையில் தமிழரின் சிக்கலைத் தீர்க்கவே விரும்புகிறோம். சமாதானப் பேச்சுக்கள் ஒரு சமாதான நல்லெண்ணப் புறநிலையில் மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடன் நடைபெற வேண்டும் என்பதையே நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*





## இனப்பிரச்சினை சமாதான வழிமுறைகள்மூலமே தீர்த்துவைக்கப்படமுடியும்!

*–நோர்வே வெளிவிவகார அமைச்சர் திரு. குனூட் வோல்பேக்*

## அமைதிப் பேச்சுக்களை ஆரம்பித்துவைக்க அதற்கான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும்!

*–விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம்*

**இலங்கை இனப்பிரச்சினையில், மேற்குலக நாடொன்று, முதல்முதலில் தலையிட்டு, அதனைத்தீர்த்துவைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கின்றது. இலங்கைத்தீவில், தமிழ்மக்கள் அனுபவித்துவரும் துன்பங்கள், இனஅழிப்பில் இருந்து தம்மைக் காக்க அவர்கள் நடத்திவரும் போராட்டம் என்பன மேற்குலகின் இதயக்கதவுகளைத் தட்ட ஆரம்பித்திருப்பதற்கான அடையாளமாக இதனைக் கொள்ளலாம்**

வெறுமனே, இது உள்நாட்டுப் பிரச்சினை எனவும், விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் எனவும், தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை குறுக்கி சிறுமைப்படுத்தி, சிங்கள அரசுகள் செய்துவந்த பிரச்சாரங்கள் பொய்த்துப்போனதன் அடையாளமாக இந்த சமாதான முயற்சியைக் கொள்ளலாம்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் திரு. குனூட் வோல்பேக் அவர்கள், விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கத்தை இந்த மாதம் 12ம் திகதி, இலண்டனில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியதில் இருந்து, இந்த சமாதான முயற்சி குறித்த செய்திகள் உண்மைத்தன்மை பெறத்தொடங்கின. பின்னர் கடந்த 16ம் திகதி நோர்வே வெளிவிவகார அமைச்சர் கொழும்பு சென்று, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, அதன் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர், மற்றும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரைச் சந்தித்து பேச்சுக்களை நடத்திவிட்டுத் திரும்பியிருக்கின்றார்.

திரு. அன்ரன் பாலசிங்கத்தை மீண்டும் சந்தித்த திரு. குனூட் வோல்பேக் அவர்கள், சிறீலங்கா தரப்பு நிலைப்பாடுகள் குறித்துத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தரப்பு நிலைப்பாடுகளை எடுத்துவிளக்கிய திரு. அன்ரன் பாலசிங்கம், சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பித்து தொடர்ந்து நடைபெறவேண்டுமாயின் அதற்கான சூழ்நிலை ஒன்று தோற்றுவிக்கப்படவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூறியுள்ளார்.

இராணுவ பொருளாதார அழுத்தங்கள் தமிழ்மக்கள்மீது பிரயோகிக்கப்பட்டுக்கொண்டிருக்கையில், சமாதானப்பேச்சுக்கள் நடைபெறுவதிலுள்ள முட்டுக்கட்டைகளை அவர் எடுத்துவிளக்கினார்.

போர்நிறுத்தம் ஒன்றின் அவசியமும், படையினர் வாபஸ்பெற்று தமது பழைய நிலைகளுக்குச் சென்று, ஒரு இயல்பான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதன் அவசியமும், பொருளாதாரத்தடைகள் விலக்கப்பட்டு மக்களின் இயல்புவாழ்க்கைக்கு வழிசெய்யவேண்டியதன் அவசியமும், சமாதானப் பேச்சுவார்த்தையொன்றின் ஆரம்பத் தளமாக இருப்பதை திரு. அன்ரன் பாலசிங்கம் எடுத்துவிளக்கியுள்ளார்.

எல்லாவற்றிற்கும் மேலாக பரஸ்பரம் இரு சாராரும் நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டு, பேச்சுவார்த்தையை நம்பிக்கையுடன் ஆரம்பிக்க, இந்த அடிப்படைகளின் அவசியத்தை திரு. பாலசிங்கம் எடுத்துவிளக்கியுள்ளார்.

சிறீலங்கா அரசினால் படைப்பலப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும், இதன்பின்னணியில் தமிழ் மக்கள்மேல் மேற்கொள்ளப்பட்டு வரும் துன்பங்களும் ஒடுக்குமுறைகளும் தீவிரம் பெறும் எனவும் சுட்டிக்காட்டிய திரு. அன்ரன் பாலசிங்கம், சிறீலங்கா அரசு யுத்தத்தை தீவிரப்படுத்த முனைப்புக்கொண்டுள்ளதையும் இது காட்டுவதாக, திரு. குனூட் வோல்பேக்குடனான பிந்திய சந்திப்பில் தெரிவித்துள்ளார். ■

## நிபந்தனை எதுவுமின்றி யுத்தக்கைதிகள் நால்வர் விடுதலை

- **தமிழீழத் தேசியத் தலைவரின் மனிதாபிமானம்!**
- **நோர்வேயின் பேச்சுவார்த்தை முயற்சிக்கு விடுதலைப் புலிகளின் நல்லெண்ண சமிக்ஞை.!**

விடுதலைப் புலிகளின் பாதுகாவலில் இருந்த யுத்தக் கைதிகள் நால்வர், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனின் விசேட பணிப்பின்பேரில் கடந்த இருபத்தெட்டாம் திகதி விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எதுவித நிபந்தனைகளுமின்றி, மனிதாபிமான நோக்கோடு இக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். யுத்தக்கைதிகளின் விடுதலை குறித்து எந்தவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ள சந்திரிகாஅரசு மறுத்துவருகின்றபோதும், அவர்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தி வருகின்றபோதும், தமிழீழத் தேசியத் தலைவர் யுத்தக்கைதிகளின் விடுதலைக்கு பணிப்புரை வழங்கியிருந்தார்.

எதிர்ப்படையினராக இருந்தபோதும், வன்னி சென்ற அவர்களின் மனைவியர், பிள்ளைகள், பெற்றாரின் உருக்கமான வேண்டுகோளை கருத்தில்கொண்டு, தமிழீழத் தேசியத் தலைவர் யுத்தக்கைதிகள் நால்வரை மனிதாபிமான அடிப்படையில் விடுவித்திருக்கின்றார்.

நோர்வேயின் சமாதான முயற்சிக்கு விடுதலைப் புலிகள் ஆதரவு சமிக்ஞை காண்பித்ததுபோன்று அமைந்திருக்கும் இந்நடவடிக்கை, சிறீலங்கா அரசை சமாதானம் நோக்கிய பாதைக்கு இட்டு வருமா? தமது படையினரின் விடுதலைக்கே கரிசனை காட்டாத சந்திரிகா அரசு, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் கரிசனை கொள்ளுமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பேச்சுவார்த்தை நோக்கிய நீண்டதும் கடினமானதுமான பணியில் முதலடி!

நோர்வே அரசு, இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதான பேச்சுவார்த்தை மூலமாக தீர்வொன்றை கொண்டு வருவதில் ஆர்வம்காட்டி, அதற்கான முதற் கட்ட நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றது. இலங்கை இனப்பிரச்சினை, யுத்தத்தால் தீர்த்துவைக்க முடியாததொன்று என்பதை நோர்வே அரசு சிறீலங்கா அரசிற்கும், இன்னும் யுத்தத்தை வலியுறுத்துகின்ற சக்திகளுக்கும் வலியுறுத்திக் கூறியிருக்கின்றது. இனப்பிரச்சினையானது பேச்சுவார்த்தை மூலமே தீர்த்துவைக்கப்பட முடியும் என்ற யதார்த்தத்தை நோர்வே வெளிவிவகார அமைச்சர், திரு. குனூட் வோல்பேக் (Knut Vollebaek) அவர்கள், கொழும்பு சென்று, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், மற்றும் சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடாத்திவிட்டு, நாடுதிரும்பும்வேளை வலியுறுத்திக் கூறியிருந்தார்.

சமாதானத்துக்காகவே போரை நடத்துவதாகக் கூறிக்கொண்டிருக்கும் சந்திரிகா குமாரதுங்காவிற்கும், விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கமே என, உலக நாடுகளெல்லாம் அலைந்து பொய்யான கருத்துரையைப் பரப்பிவருவதுடன், விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டபடாதபாடுபடும் கதிர்காமருக்கும் நோர்வே வெளிவிவகார அமைச்சரின் கருத்து கசப்பாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

'இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை மூலமே தீர்த்துவைக்கப்பட முடியும்' என்ற கருத்தானது, சமாதானத்துக்கான யுத்தம் என்று கூறிக்கொண்டு, இனஅழிப்பு யுத்தத்தை தீவிரமாக நடத்த முனைபவர்களுக்கு இனிப்பாக இருக்கப் போவதில்லை.

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிக்கும் யுத்தத்திற்கு பொருளாதார இராணுவ உதவிகளையும், வெளிநாடுகளின் இராணுவ விற்பனர்களின் அறிவுரை ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் கோரும் சிறீலங்கா அரசு, தற்போது, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நோர்வே அரசின் தலையீட்டை விருப்புடன் எற்றுக்கொண்டிருப்பதாக அறிவித்திருக்கின்றது.

இந்தப் புதிய சமாதான முயற்சி, தமிழ்மக்கள் மத்தியில் அபாரமிதமான நம்பிக்கையை உடன் தோற்றுவிக்காது என்றபோதும், சமாதானத்துக்கான எந்த முயற்சிகளையும் தமிழ்மக்கள் விருப்புடன் வரவேற்கவே செய்கின்றனர். இந்த எச்சரிக்கை உணர்வுக்குக் கடந்தகால கசப்பான அனுபவங்கள் காரணமாகின்றன. எனினும்...

தமிழ்மக்கள் நிம்மதியான நிரந்தரமான சுதந்திரமான வாழ்வை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். அவர்களே சமாதான சகவாழ்விற்காகத் தவிக்கின்றனர். அடிமை வாழ்வு அகன்று, ஏனைய தேசிய இனங்களைப் போல் அச்சமின்றி, தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கின்ற சுயநிர்ணய உரிமை பெற்று, தமது நாட்டில், சிறப்புடனும் வளத்துடனும் வாழும் சீரிய நாட்களுக்காக ஏங்குகின்றனர்.

எனவே.. நீதியான சமாதானத் தீர்வு முயற்சி ஒன்றை உளப்பூர்வமாக தமிழ்மக்கள் ஆதரிப்பர் என்பதில் சந்தேகமில்லை.

இந்தத் தேசிய அபிலாசைகளுக்காகவே, நீண்ட நெடிய பெரும் போராட்டம் ஒன்றைத் தமிழ் மக்கள் நடத்திவருகின்றனர். பெரும் உயிர் விலைகொடுத்தும், இரத்தம் சிந்தியும், கொடும் துன்பம் சுமந்தும், அளப்பரிய அர்ப்பணிப்புக்களைப் புரிந்தும், புனிதமான தேசியத் தாகத்திற்காக அவர்கள் போராடிவருகின்றனர்.

ஆனால்... தமிழ்மக்களை அடிமைப்படுத்தி.. சிறுமைப்படுத்தி... தமிழ்மக்களின் தாயகநிலப் பரப்பை அபகரித்து... அவர்களின் சிறப்புக்களை பொருளாதார வாழ்வை அழித்து... கலைபண்பாட்டு விழுமியங்களை சிதைத்து, வரலாற்றை மறைத்து, இலங்கைத் தீவை பௌத்தசிங்கள நாடாக பிரகடனப்படுத்தும், சிங்களப்பேரினவாதம் இந்த சமாதான முயற்சியை எதிர்க்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இதற்கான கூப்பாடுகள் தென்பகுதியில் கேட்க ஆரம்பித்துள்ளன.

'இனப்பிரச்சினையில் வெளியார் தலையிட வேண்டியதில்லை. இது உள்நாட்டுப்பிரச்சினை' என, சிறீலங்கா அரசாங்கம் நேற்றுவரையும் கூறிவந்த கருத்தை, தற்போது இனவாதிகள் காவியும் கூவியும் வருகின்றனர். சமாதானத்துக்கெதிரான அதன் தீவிரம் அதிகரிக்கும் சாத்தியக்கூறுகளே தென்படுகின்றன.

நோர்வே அரசு, இலங்கை இனப்பிரச்சினையில் தீர்வுநோக்கிய பாதையில் முதலடியை நம்பிக்கையுடன் வைத்திருக்கின்றது. இந்த முயற்சி ஒரு நீதியான நிலையான தீர்வை எட்டவேண்டும் என்பது தமிழ்மக்களின் விருப்பாக இருக்கின்றது. ■

## அறப்போருக்கு சிங்கள அரசு எப்போதும் தலைவணங்காது. அது தன்னவராய் இருந்தாலும்.

கடந்த சில வருடங்களாக, விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் பதினைந்து யுத்தக் கைதிகள், தமது விடுதலைக்கு ஆவன செய்யுமாறு சந்திரிகா அரசை வலியுறுத்தி உண்ணாவிரதப்போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருந்தனர். கடந்த பத்தாம் திகதி ஒருவிதமான எதிர்பார்ப்புடன் உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்த யுத்தக்கைதிகள், தமது கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில், தமது போராட்டம் கொச்சைப்படுத்தப்பட்ட நிலையில் மனமும் உடலும் சோர்வுற்ற நிலையில் பதினைந்து நாட்களின்பின்னர், கடந்த இருபத்தைந்தாம் திகதி, தமது போராட்டத்தை கைவிட்டுள்ளனர்.

இவர்கள், புதுக்குடியிருப்பில், விடுதலைப் புலிகளின் பாதுகாவலில் இருந்தபடி போராட்டத்தை ஆரம்பித்தபோதே, உண்ணாவிரதிகளின் பெற்றோர் குடும்பத்தார் உறவினர்கள் வன்னிக்கு விஜயம் செய்து உண்ணாவிரதிகளை பார்வையிடலாம் என விடுதலைப் புலிகள் மனிதாபிமான உணர்வுடன் அறிவித்திருந்தனர்.

எதிரிப்படைவீரர்களாய் இருந்தபோதும் அவர்களின் உள்ளுணர்வை மதித்து, அவர்களின் குடும்பத்தவர் வன்னி வந்து அவர்களைப் பார்வையிட விடுதலைப் புலிகள் அனுமதிவழங்கி அதற்கான அறிவித்தலை விடுத்தனர். என்றபோதும், சிறீலங்காஅரசோ உண்ணாவிரதிகளின் உறவினர்களின் வன்னி விஜயத்திற்கான அனுமதியை, சற்று இழுத்தடித்தே வழங்கியதுடன், நிபந்தனைகளையும் விதித்தது. ஒரு குடும்பத்தில் இருந்து ஒருவரே செல்லமுடியும் எனவும், வன்னியில் இரண்டு நாட்கள் மாத்திரமே தங்கியிருக்கமுடியும் எனவும், சிறீலங்கா அரசு நிபந்தனை விதித்தது.

விடுதலைப் புலிகளோ உண்ணாவிரதிகளின் உறவினர்கள் விடயத்தில் எந்த நிபந்தனையையும் விதிக்கவில்லை. இருபத்தியிரண்டாம் திகதி வன்னி சென்ற இருபத்தெட்டுப் பேரை விருப்புடன் வரவேற்ற விடுதலைப் புலிகள், உண்ணாவிரதிகள் போராட்டம் நடத்தும் மண்டபத்திற்கு அன்று மாலையே அழைத்தும் சென்றனர். அவர்கள் அவ்வளாகத்திலேயே தங்கவைக்கப்பட்டனர்.

நாட்டின் தேசிய வீரர்கள் எனவும், மண்ணைக் காக்கவந்த தேச புத்திரர்கள் எனவும் வானளாவப் புகழ்ந்து படையினரை யுத்தமுனைக்கு அனுப்பும் சிங்கள அரசோ, தனது படையினரை வெறும் கூலிப்பட்டாளங்களாகவே பாவித்துவருகின்றது என்பது இவர்கள் விடயத்தில் நன்கு புலனாகின்றது. யுத்தக்கைதிகளாகியுள்ள படையினரின் விடுதலைக்கு கொஞ்சமேனும் முயற்சிக்காத சந்திரிகா அரசோ, அவர்களின் போராட்டம் குறித்தும் கிஞ்சித்தும் அலட்டிக்கொள்ளவில்லை.

இதை உணர்ந்துகொண்டோ என்னவோ, தமது உறவினர்களின் வேண்டுகோளுக்கிணங்க தமது போராட்டத்தை கைவிடுவதாக யுத்தக்கைதிகள் அறிவித்துள்ளனர். இரண்டு வார கால அவகாசத்தை சந்திரிகா அரசாங்கத்திற்கு வழங்குவதாகவும், அதற்கிடையில் தமது விடுதலைக்கு ஆவன செய்யாவிட்டால் மீண்டும் போராட்டத்தில் குதிக்கப்போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

உண்ணாவிரதிகளில் நால்வரின் உடல்நிலை பாதிப்படைந்திருந்த நிலையிலும், ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலும் தனது படையினருக்கு இரக்கம் காட்டாததுடன் அவர்களின் அகிம்சைப் போராட்டத்திற்கு மதிப்பளிக்காத சிங்கள அரசு, 'நாட்டைக்காக்க இளைஞர்களே வந்து படையில் சேருங்கள்' என அழைப்பு விடுத்திருக்கின்றது. படையினருக்கு மேலும் பதினையாயிரம் பேரைச் சேர்க்க சிங்கள அரசு பெரும்பாடுபடுகின்றது.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| **AUSTRALIA**<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | **CANADA**<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | **DENMARK**<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | **FRANCE**<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | **GERMANY**<br>TCC<br>Postfach 101613,<br>46016 Oberhaousen. | **ITALY**<br>TCC<br>Via Paolo Balsamo-11<br>90100 Palermo. |
| **NETHERLANDS**<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | **NORWAY**<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | **SWITZERLAND**<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | **SWEDEN**<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | **UNITED KINGDOM**<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | **U.S.A**<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப் புலிகளின் தலைவர் நல்லஉள்ளம் படைத்த மனிதாபிமானி!
## -சிறீலங்கா இராணுவத்தினரின் குடும்பத்தினர்.

வன்னியில் உண்ணாவிரதம் இருந்த யுத்தக்கைதிகளை பார்வையிட, அவர்களின் பெற்றோர் குடும்பத்தினருக்கு விடுதலைப் புலிகள் அனுமதித்திருந்தனர். வன்னி வந்து தமது உறவுகளை நேரில் பார்த்த ஆனந்தத்தில் அவர்கள் நெகிழ்ந்தே போனார்கள். விடுதலைப் புலிகள் கொடூரமானவர்கள், கொடுமைக்காரர்கள் என்று தென்பகுதியில் அரசாலும் சிங்களப்பேரினவாத செய்தி ஊடகங்களாலும் பரப்பபட்டுவரும் பொய்யான பரப்புரைகளை இத்தனைகாலமும் நம்பிக்கொண்டிருந்த அவர்கள், வன்னியில் முற்றிலும் மாறுபட்ட விடுதலைப் புலிகளையே சந்தித்தனர். அவர்களின் மனக்கண்முன் வியாபித்திருந்த கொடூரமான விடுதலைப் புலிகளுக்கும், நிஜத்தில் தாய் பிள்ளைகள் போல தம்மை அன்புடன் வரவேற்று, தமது உறவுகளிடம் கொண்டுபோய்ச் சேர்ந்த விடுதலைப் புலிகளின் உண்மைத் தன்மைக்கும் இடையே அவர்களால் எந்தவித ஒற்றுமையையும் காணமுடியவில்லை.

இந்த அனுபவம் குறித்து அவர்கள் என்ன சொல்கின்றார்கள்...?

வன்னியில் அவர்களே நேரடியாக செய்தியாளர்களிடம் தெரிவித்த விடயங்கள் இவை.

தென்பகுதிகளில் உள்ள செய்தி ஊடகங்களும், அரசாங்கத் தரப்பினரும் விடுதலைப் புலிகள் சம்பந்தமாக உண்மைக்கு மாறானதும், தவறானதுமான செய்திகளையும் தகவல்களையுமே சிங்கள மக்களுக்கு வழங்கிவருகின்றார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் எமது பிள்ளைகளை அன்புடன் அரவணைத்து ஆதரித்துப் பராமரித்து வருவதைப் பார்க்கின்றபோது, விடுதலைப் புலிகள் எவ்வளவு மென்மையானவர்கள், அன்பான மனிதர்கள் என்னும் உண்மை துல்லியமாகத் தெரிகின்றது.

நாங்கள் நீண்டகாலமாக எமது உறவுகளை விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென, சிறீலங்கா அரசிற்கு பலதடவைகள் கோரிக்கை வைத்தோம். விடுதலைப் புலிகளின் நிபந்தனைகளைக் கவனத்தில் எடுத்து, அவர்களுடன் பேசவேண்டும் எனக் கோரி, பல வழிகளிலும் முயற்சிகளையும் மேற்கொண்டோம். அவற்றையெல்லாம் அரசாங்கம் கருத்தில் கொள்ளாமல், மௌனம் சாதித்து வருகின்றது.

ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மனிதாபிமானத்துடன், எமது துயரினைப் புரிந்து கொண்டு எமது உறவுகளைப் பார்ப்பதற்கு அனுமதித்ததானது, எமக்கு பெருமகிழ்ச்சி அளிக்கின்றது.

அதேவேளை, அவருடைய நல்ல உள்ளத்தை புரிந்துகொள்ளவும் வைத்துள்ளது.

தென்னிலங்கைச் சிறைகளில், அப்பாவித் தமிழ்க்கைதிகள் படும் வேதனைகளை நாங்கள் கண்டும், கேட்டும் இருக்கின்றோம். ஆனால், யுத்தக்கைதிகளாகியுள்ள எமது உறவுகளை, விடுதலைப் புலிகள் பண்பாகவும் அன்பாகவும் மதிப்புடனும் பராமரித்துவருவதைப் பார்த்து நாங்கள் வியப்படைகின்றோம்.

வன்னி வந்து எமது உறவுகளைப் பார்வையிட விடுதலைப் புலிகள் எந்த விதமான கட்டப்பாடுகளையும் எமக்கு விதிக்கவில்லை. ஆனால் அரசோ எமது பயணத்திற்கு கட்டுப்பாடுகளை விதித்தது. எமது உறவுகளைப் பார்வையிட ஒரு குடும்பத்தில் இருந்து இருவர் மாத்திரமே வன்னி செல்ல முடியும் எனவும், குறிப்பிட்ட தினங்கள் மாத்திரமே வன்னியில் தங்கியிருக்கமுடியும் எனவும் அரசாங்கம் எமக்கு கட்டுப்பாடுகளை விதித்தது. ஆனால், விடுதலைப் புலிகளோ எமது உறவுகளைப் பார்க்க எமக்கு கட்டுப்பாடுகள் எதனையும் விதிக்கவில்லை. இது அவர்களது நல்ல உள்ளத்தையே காட்டுகின்றது.

எமது துயரினைப் புரிந்துகொண்டு, எமது உறவுகளைப் பார்க்க மனிதாபிமான அடிப்படையில் அனுமதி வழங்கிய விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நாம் எமது மேலான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். ■

# தமிழரின் மதவழிபாட்டுக்கு வேட்டு வைக்கும் சிங்களம்... பௌத்தத்தை ஊட்டிவளர்க்கின்றது

*'பௌத்த சாசனப் பாரம்பரீயத்தைப் பேணவும், புத்தனின் போதனையைப் பரப்பவும், மாத்திரம் எமது அரசால் 2200 மில்லியன் ரூபாய்கள் செலவிட்டுள்ளது.'*

இது சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சனவரி முப்பத்தோராம் திகதி பெருமிதத்துடன் தமது நாட்டு மக்களுக்குக் கூறியது. அவரது எதிர்கால கனவு என்ன...? அதனையும் அவரே கூறுகின்றார்.

*'சிறீலங்கா பௌத்தத்தை பராமரிப்பதில் சிறந்த நாடாக இருக்க வேண்டும். உலகிலேயே பௌத்தம் தழைத்தோங்கும் நாடுகளில் சிறீலங்கா முதன்மையானதாக இருக்க வேண்டும். அதற்கான வேலைகளில் அரசு தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளது. மல்வத்தை பீடம் பௌத்தத்தை போதித்து வருவதில் பெரும்பங்கு வகித்து வருகிறது.'*

சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வந்த ஆரம்பத்தில் பல்லின மக்கள் வாழும் தேசம் சிறீலங்கா என்று பல்லவி பாடினார். சமாதானத் தேவதையாக நடித்தார். ஆனால் அவர் வேடமெல்லாம் கலைந்துபோன நிலையில் மேற்கண்டவாறு வெளிப்படையாக கூறியுள்ளார்.

சிறீலங்காவின் பகுதி எனக்கூறிக் கொண்டு, தமிழீழத்தில் அவரது படைகள் செய்துவரும் அநியாயங்கள் எத்தனை. சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் மாத்திரம் ஏறக்குறைய 1800 இந்து, கிறீஸ்தவ ஆலயங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. பிக்குமாருக்கு விசேட சலுகைகள் நிலவும் சிறீலங்காவில், பல நூற்றுக்கணக்கான கிறீஸ்தவ, இந்துக்குருமார் சிறைகளில் அடைக்கப்பட்டும், கொல்லப்பட்டும் உள்ளனர். இந்து, கிறீஸ்தவ ஆலயங்களில் ஏதிலிகளாய்த் தங்கியிருக்கும் தமிழ் மக்களைக்கூட சந்திரிகாபடை விட்டுவைப்பதில்லை. தமிழர்களின் குருதியில் அவையும் சிகப்பேறிப்போய்க்கிடக்கின்றன.





# வேருக்கு நீர்பாச்சுவோம்!

உலகப் பரப்பில் விரிந்துளான் தமிழன்... அவன்
வேர்களும் விழுதுகளும் தெருத்தெருவாக...
வீணில் இருப்போமா...? வேருக்கு நீர்பாச்சுவோம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கூக்குரல் எழுப்பும் சிங்களப் பேரினவாதம்

## எவரையும் சமாதானப்படுத்த சமாதானப் பேச்சுக்கள் வேண்டாம்

### – பாராளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்தினா –

'யுத்தத்துக்கான செலவின் அரைவாசியை, யுத்தவரிமூலம் மக்களே செலுத்துகின்றனர். அதனால், அரசாங்கம் யுத்தத்தை முன்னெடுத்துச் சென்று பகைவரை அழிக்கவேண்டும். அதனை விடுத்து சமாதானப் பேச்சவார்த்தையில் ஈடுபடுவதில் எனக்கு நம்பிக்கையில்லை.' இப்படித் தெரிவித்தது, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்தினா. கடந்த 18ம் திகதி பாராளுமன்றத்தில் சமாதானத்துக்கெதிரான விருப்பை அவர் இப்படிக்கக்கினார்.

பிரபாகரனையும் அவரது புலிகள் இயக்கத்தையும் அழிப்பதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துங்கள்... என, தனது பேரினவாதக்கனவை பட்டப்பகலில் பாராளுமன்றத்தில் பிதற்றிய அவர், எவரையேனும் சாந்தப்படுத்துவதற்காக பேச்சுவார்த்தை நடத்த வேண்டாம் என, நோர்வேயின் சமாதான முயற்சியை சீண்டியுள்ளார்.

யுத்தத்தை முன்னெடுத்துச் சென்று, பகைவரை அழியுங்கள். அதன் பின்னர் வடக்கு கிழக்கு பிரச்சினை இருந்தால் கொழும்பிலுள்ள தமிழ்கட்சிகளுடன் பேசுங்கள் என்றார்.



## ஐ.நா சபையோ, உலகின் எந்தவொரு அரசோ தலையிட அனுமதியோம்

### -பேரினவாத அமைப்புக்களின் சபதம்-

ஐந்து பௌத்த சங்கங்களும் பத்து பௌத்த சிங்கள அமைப்புக்களும் இணைந்து, நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டன. கடந்த பதினெட்டாம் திகதி, மேற்படி பதினைந்து சிங்களப் பேரினவாத அமைப்புக்கள் ஒன்றிணைந்து வெளியிட்ட அறிக்கை, நோர்வேயை கடுமையாக சாடும் வகையில் அமைந்திருந்தது. இங்கு நடைபெறும் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையே எனவும், இலங்கையில் உள்நாட்டு விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலகின் எந்தவொரு நாடும் தலையிடுவதை பெரும்பான்மைச் சிங்கள மக்கள் விரும்பவில்லை என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நோர்வே தூதரகத்தில் கையளிக்கப்பட்ட அவ்வறிக்கையில், நோர்வே அரசு தற்போது மேற்கொண்டிருக்கும் சமாதான முயற்சிகளில் இருந்து தனது, வெளிவிவகார அமைச்சர் மற்றும் அதிகாரிகளை தமது முயற்சிகளில் இருந்து பின்வாங்கச் செய்யவேண்டும் என வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

இது உள்நாட்டுப் பிரச்சினை எனவும், இது பயங்கரவாதப் பிரச்சினை எனவும் தமது அறிக்கையில் இனப்பிரச்சினையை வகைப்படுத்திய பேரினவாத அமைப்புக்கள், கூடவே நோர்வே அரசிடம் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளன.

அதாவது, அமெரிக்கா போன்று நோர்வே அரசும் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக பிரகடனம் செய்யவேண்டும் என்பதே.

## சிங்களத்திற்கு தனிச் சிங்கக்கொடி!

சமாதான முயற்சிகள் குறித்த செய்திகள் பரபரப்பாக பரவ ஆரம்பித்ததில் இருந்து, சிங்களப்பேரினவாதம் உசார் அடைந்துள்ளது. தீர்வு முயற்சியானது தமது கனவுகளுக்கும் நலன்களுக்கும் ஆபத்தாய் அமைந்துவிடுமோ என அவை அச்சப்படுகின்றன. இந்த அச்சம் இந்தப் பேரினவாதத்தை என்ன வெல்லாமோ செய்யத் தூண்டுகின்றது. சிறிலங்காவின் தேசியக்கொடியை மாற்றியமைக்கவேண்டும் என, சிங்களப்பேரினவாத அமைப்புக்கள் கூட்டாக குரலெழுப்பி வருகின்றன. அதற்கான போராட்டத்தை தீவிரப்படுத்தப்போவதாக அவை அறிவித்துள்ளன. பௌத்த மதத்துறவிகளின் ஆசியுடன் இந்த பிரச்சாரப்பணி தென்பகுதியில் மேற்கொள்ளப்படும் என அறிவித்ததுடன், இதற்கான முதல் முயற்சிகளில் அவை இறங்கியுள்ளன. சிறீலங்காவின் தேசியக் கொடியில் ஏனைய இனங்களை குறிக்கும் குறியீடுகள் யாவும் அகற்றப்பட்டு, வாளேந்திய தனிச் சிங்கம் இருக்கக்கூடியதாய் தேசியக்கொடி அமைக்கப்படவேண்டும் என, அவை வலியுறுத்துகின்றன. சிங்களப்பேரினவாதிகளின் சித்தத்தில் உருவான, புதிய சிங்களத் தேசியக்கொடியின் மாதிரி உரு சுவரொட்டிகளாகி, தென் பகுதியில் அலங்கரிக்கத் தொடங்கியுள்ளன.

## இனப்பிரச்சனைக்கு தீர்வேற்படும் வரை புலிகளிற்குகெதிரான யுத்தம் தொடரப்படவேண்டும்

### –முன்னாள் அமைச்சர் சிறிமானி அத்துலத் முதலி–



இனப்பிரச்சனை தொடர்பாக புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முற்படும் அரசு மிக்க அவதானத்துடன் செயற்படவேண்டும். இப்படி சந்திரிகா அரசிற்கு புத்திபுகட்டிய சிறிமானி, புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தை நடத்துவது காலத்தைக் கடத்துவதற்கே. என்ற தனது கண்டுபிடிப்பையும் தெரிவித்துள்ளார்.

அந்தமுறையில் மீண்டும் அரசு ஏமாந்து விடக்கூடாது. புலிகள் இயக்கம் சமரச இணக்கத்தை ஏற்றுக் கொள்ளும் வரை, அதற்கெதிரான இராணுவ நடவடிக்கை தொடரப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

நோர்வேயின் மத்தியத்துவம் தொடர்பாக, பெப்ரவரி 1ம்திகதி சிறீமானி அம்மையாரின் கட்சி நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டின் போதே, அவர் இந்த அரிய கருத்துக்களையும், புதிய கண்டுபிடிப்புக்களையும் பகிரங்கப்படுத்தியுள்ளார்.




**சிங்களத்தால் நன்கு அறியப்பட்ட நளின் டி சில்வா என்ற பேரினவாதப் எழுத்தாளர் THE ISLAND என்ற சிங்களப் பேரினவாத பத்திரிகையில் வரைந்த கட்டுரையிலிருந்து சில பகுதிகள்**

■ ஏன் நோர்வே எமது பிரச்சனையில் கவனமெடுக்கிறது? எதற்காக அவர்கள் சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள். பிரித்தானியாவின் பிரபுக்கள் சபையின் சில அங்கத்தவர்களே பிரபாகரன் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டுமெனக் கோருகிறார்கள். மேற்குலகானது சிறீலங்கா அரசிற்கு விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கு உதவுவதற்கு பதிலாக அவை அரசை பிரபாகரனின் நிபந்தனைக்கு பணிய வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றனர்.

■ வடகிழக்கு மாகாணசபை தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம், தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதை பேச்சுவார்த்தை மேசைக்கு வரும் அரசு ஏற்றுகொள்ள வேண்டும். சிறீலங்கா அரசு பிரபாகரனின் நிபந்தனைகளுக்கெல்லாம் வெறுமையாக அடிபணியத் தயாராகிறது.

■ தற்போது இலங்கையில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அனைவரும் தகவல் காவிகளாகவே உள்ளனர். இவர்கள் மேற்குலகிலுள்ள தங்களுடைய பொறுப்பாளர்களினால் மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளனர். அடிமைகளாக மாற்றப்பட்டுள்ளனர்.

■ நோர்வேயின் அபிப்பிராயப்படி அரசும் எல்ரீரீயும் போர்நிறுத்தத்தை மேற்கொண்டு வடக்கு கிழக்கில் ஐ.நா அமைதிப்படையை அனுப்பப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை அரசு அங்கீகரிக்கிறதா? எங்களுக்கு அமைதிப்படை சம்பந்தமாக சில அனுபவங்கள் உள்ளன. சிறீலங்காவையே இல்லாமல் செய்துவிடக்கூடியவை அமைதிப்படைகள்.

■ திரு.குனூட் வொல்பேக் அவர்கள் ஏற்கனவே திரு.அன்ரன் பாலசிங்கம் அவர்களை இலண்டனில் சந்தித்து பேச்சுவார்த்தை சம்பந்தமாக உரையாடியதாக தமிழ்நெற் தெரிவித்துள்ளது. இது நடுநிலையான நடவடிக்கையா என்பது கேள்விக்குரியது.

■ மேற்குலகும் அரசசார்பற்ற நிறுவனங்களும் சிங்கள மக்கள் அரசியல் தீர்வுத் திட்டத்திற்கு எதிரானவர்கள் அல்ல என்றே கூறுகின்றன. அரசு அரசியல் தீர்வுத்திட்ட வரைபை பாராளுமன்றத்திலே நான்கு வருடங்கள் எடுத்ததற்கு அவர்களின் கணிப்பு என்ன? மேற்குலக அரசசார்பற்ற நிறுவனங்களின் அறிவாளிகள் கற்பனையானதும் மிகையானதுமான முடிவுகளைத்தரக்கூடிய ஆய்வுகளை மேற்கொண்டு சிங்கள மக்கள் அரசியல்த்தீர்வை ஆதரிக்கின்றார்கள் என்று கூறுகின்றார்கள்.

■ மேற்குலகும் அரசசார்பற்ற நிறுவனங்களும் சிங்கள மக்களின் எண்ணங்களை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நாங்கள் இதுவிடயத்தில் ரியூசன் வைக்கத்தயாராக இருக்கிறோம். 94 சதவீத சிங்கள மக்கள் ஐ.தே.க, மக்கள் முன்னணி ஆகியவற்றிற்கு ஓட்டளித்ததன் மூலம் அரசியல்த் தீர்வுத்திட்டத்தை அங்கீகரிக்கிறார்கள் என்ற வாதத்தை நான் நிராகரிக்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மரணத்திற்கு சலுகை வழங்கிய சந்திரிகா!

## - சிறீலங்காவின் 2000 ஆண்டிற்கான வரவுசெலவு அறிக்கை -


சந்திரிகா பண்டாரநாயக்கா அரசின் 6வது வரவு செலவுத் திட்ட யோசனைகள் பெப் 14ம் திகதி பாரளுமன்றத்தில் வெளியிடப்பட்டது. தனது நாட்டின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில்கூடப் பங்கேற்கப் பயந்து தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் பதுங்கிக் கொண்ட சந்திரிகா, வழமைக்கு மாறாக இம்முறை தனது சிறப்புப்படைகளின் பாதுகாவலுடன் பாராளுமன்றம் வந்ததுடன், 2000 ஆண்டிற்கான நிதி யோசனைகளை சமர்ப்பித்தார்.

- நோர்வே அரசின் சமாதான முன்முயற்சிகள், தீர்வுப் பொதி பற்றிய புதிய பரப்புரைகள், அரசமைப்பை திருத்தி எழுதி தமிழர்களுக்கு உரிமை கொடுத்தல் என்பன போன்ற செய்திகள் ஒருபுறமும், ஆட்சேர்ப்பு-ஆயதக்குவிப்பு என்பன மறுபுறமும் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் வெளியிடப்பட்டதால் இவ் வரவுசெலவு அறிக்கையின் போக்கை அறிவதற்கான எதிர்பார்ப்பு பலதரப்பிடமும் நிரம்பிக்கிடந்தது. இந்தச் சூழ்நிலையில், பாராளுமன்றத்தில் தானே சமூகமளித்து வரவு செலவு அறிக்கையை சமர்ப்பித்த சந்திரிகா, போரினால் சிங்களப் பொருளாதாரம் சிதைக்கப்படுவதாகவும் - இனச் சிக்கலைத் தீர்ப்பது தொடர்பாக அனைவரும் உழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். பின்னர், சுமார் 5243 கோடி ரூபாய்களை போரிற்கு ஒதுக்குவதாக அறிவித்தார். போரினால் தமது அரசு மிகக் குறைந்த நிதியையே பொருளாதார வளர்ச்சிக்கு ஒதுக்குவதாகக் கூறிய அம்மையார், சிங்களத்தின் முன்னைய வரவு செலவு அறிக்கைகளில் இல்லாத அளவு நிதியை போரிற்கு இம்முறை ஒதுக்குவதாக அறிவித்தார்.

இந் நிதி ஒதுக்கீடானது, நடைமுறையில் 25 முதல் 30 வீத அதிகரிப்புடன் சுமார் 6000 கோடி ரூபாய்களுக்கு மேல் சிங்களப் போர் முயற்சிகளுக்கு வழங்கப்படும் என உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்கள் தமது செய்தியறிக்கைகளில் தெரிவித்தனர்.

அமைதி வழி இணக்க முயற்சிகள் பற்றி தொடர்ச்சியாக அறிவிப்புக்களை விடுத்து வரும் அரசு, எப்போதும் போரையே தனது நோக்காகக் கொண்டுள்ளது என்பதை சந்திரிகாவினால் நேரடியாக வெளியிடப்பட்ட அறிக்கை மீள உறுதிப்படுத்தியுள்ளது.

## வரலாற்றில் உச்ச செலவீனம்




1977ம் ஆண்டு சிங்கள அரசு தமிழர்களுக்கு எதிரான போரிற்கு சுமார் 750 மில்லியன் ரூபாய்களை உத்தியோகபூர்வமாகச் செலவிட்டது. 1986ல் இது 800 மடங்கு அதிகரிக்கப்பட்டு 6 பில்லியன்கள் ஆக்கப்பட்டது. 1995ல் சிங்கள இராணுவம் 24பில்லியன் ரூபாய்களை சமாதான தேவதை சந்திரிகாவிடமிருந்து பெற்றது. இது 1986ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டிலும் 5 மடங்காகும். 1996ல் தமிழர்களுக்கு எதிரானபோரை மிக உக்கிரப்படுத்திய சந்திரிகா 46பில்லியனை ( 4600 கோடி ரூபாய்கள்) இராணுவத்திற்கு செலவிட்டார். இப்பெரும் போர்ச் செலவீன அதிகரிப்புக்கு விளக்கமளித்த சிறீலங்கா நிதி அமைச்சின் பிரதிச் செயலாளர் திரு.ஜெயசுந்தரா, போர் தீவிரமடைந்துள்ளதால் தான் தமது அரசு இவ் அதிகரிப்பை மேற்கொள்வதாகக் கூறினார். இச் செலவீன அதிகரிப்பை ஆராய்ந்த கொழும்பு நிறுவனம் ஒன்று 1996ல் உண்மையில் மொத்த போர்ச் செலவீனம் 165 பில்லியன் ( 16500 கோடி ரூபாய்கள்) எனக் கூறியது. இது வரவு செலவு அறிக்கைகளில் குறிப்பிடப்படாது போரினால் மறைமுகமாக ஏற்பட்ட செலவீனத்தையும் கணித்தே இவ் தொகை கணக்கிடப்பட்டது.

1997ல் 4400 கோடி ரூபாய்களை முதலில் போரிற்கு ஒதுக்கிய அரசு முடிவில் 4660 கோடி ரூபாய்களை ஒதுக்கியது. இதனை முற்றுமுழுதானதொரு இராணுவ நிதிஅறிக்கை என ஜெயசுந்தர வர்ணித்தார். இவ் ஒதுக்கீட்டை விபரித்த கொழும்பு வார ஏடான சண்டே டைம்ஸ், போரிற்கு தொடர்ந்தும் சிங்களம் செலவிட வேண்டும் என்பதை இது வலியுறுத்துவதாக கூறியது. 1998ல் சிங்களத்தின் ஜெயசுக்குறுய் சமர் வன்னியில் இடைநடுவில் அகப்பட்டு தொடர்ந்து கொண்டிருந்த வேளையில் 4400 கோடி ரூபாய்களை முதலில் ஒதுக்கிய அரசு பின்னர் அதனை 5620 கோடியாக அதிகரித்தது. 1999ல் மீண்டும் அதேயளவு தொகையை போரிட ஒதுக்கி சந்திரிகா அரசு தமது போரிற்கான முன்னுரிமையை தொடர்ந்து வலியுறுத்தினர். 2000ம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு முன்னைய அனைத்து உத்தியோகபூர்வ அறிவிப்புக்களையும் விட அதிகமாக இராணுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ் அதிகரித்த ஒதுக்கீட்டுக்கு விளக்கம் தந்த நிதி அமைச்சின் உயரதிகாரி திரு. ஜெயசுந்தர, சமாதானப்பாதையை துரிதப்படுத்தவே தமது அரசு இப்பெரும் தொகையை போரிற்கு செலவிடுவதாகக் கூறினார். இராணுவ தளபாடங்கள் வாங்கிக் குவிக்கப்படும் என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார். தமிழர் பகுதிகளில் சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பு தொடரவேண்டும் என்பதை அச் சிங்களப் பொருளாதார நிபுணர் பகிரங்கமாகவே கூறுகின்றார்.

சிங்களத்தின் ஏற்றுமதி 4.1 வீதம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையிலும், அன்னிய செலவாணிக் கையிருப்பு வீழ்ச்சியடைந்துள்ள நிலையிலும் போரிற்கான செலவீனத்தை அதிகரித்ததன் மூலம் சிங்கள அரசு தமது பேீார் வெறியை தெளிவாக இனம் காட்டியுள்ளனர்.

வரவுசெலவு அறிக்கை வெளியிடப்பட முன்னர், எரிபொருட்களின் விலையை உயர்த்தி அரசு அதன் சுமையை மக்கள் மீது ஏற்றி வைத்தது. வரவு செலவு அறிக்கையில் பாதுகாப்பு வரி என்ற போர்வையில் மக்கள் தமது வருவாயில் 5.5 வீதத்தை இராணுவத்திற்கு வழங்கும் திட்டத்தை மேலும் விஸ்தீரப்படுத்தியது. அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை தனியாருக்கு விற்பதன் மூலம் 411 மில்லியன் டொலர்களை சந்திரிகா திரட்டினார். காப்புறுதித்துறை போன்ற முக்கிய சர்ச்சைக்குரிய துறைகளில் அன்னியர்கள் முதலிடலாம் என அழைப்பு விடுக்கப்பட்டது. இதன் மூலம் சிங்கள இயந்திரம் தமது பற்றாக்குறையை போக்க முற்பட்டது. போரிற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை கொட்டும் அரசு மக்களின் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் மொத்தமாக ஒதுக்கிய நிதி மிக குறைவானது என சில சிங்களத் தரப்பினர் முணுமுணுத்தனர். இக்குரல் மிக அடங்கியதாகவே ஒலித்தது.

சந்திரிகா தனது உரையிலே, சிங்களப் படையினருக்கு சீருடை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவப் போவதாக அறிவித்தார். போரின் சிதைவுகளாக சிங்களப் பகுதியெங்கும் ஏற்பட்டுள்ள வன்முறைகளை கையாள 500மில்லியன்களை ஒதுக்கி பொலிஸ் துறையை பலப்படுத்தப் போவதாகவும் கூறினார். இத்தனை சுமைகளுக்கும் மத்தியில் மரணமடைந்தவர்களுக்கான இறுதிக் கிரியைகளுக்கு வரிச்சலுகை வழங்கப் போவதாக சந்திரிகா கூறியமை உலக செய்தி நிறுவனங்களைக்கூட வியக்கவைத்துள்ளது.

தனது 6வது வரவு செலவு அறிக்கை மூலம் சந்திரிகா தனது அரச இயந்திரத்தின் போர் நோக்கத்தை தெளிவாக வரையறுத்துவிட்டார். சர்வதேச இணக்க முயற்சிகளும், உள்நாட்டு இணக்க அறிவிப்புக்களும் சிங்களப் போர் நோக்கத்தின் மூர்க்கத்தை எவ்விதத்திலும் குறைக்கவில்லை என்பதை சந்திரிகாவின் தொடர்ச்சியான நிதி அதிகரிப்புக்கள் புலப்படுத்துகின்றன. தொடரும் ஓயாதஅலைகள் இராணுவ நடவடிக்கைகளே சிங்களத்தின் போர் வெறியை தடுத்து நிறுத்தி நீதியான தீர்வுக்கு வழிசமைக்கும் என்பதையும் சந்திரிகா தனது வரவு செலவு அறிவிப்புக்கள் மூலம் மீண்டும் ஒருமுறை எடுத்துக் கூறியுள்ளார். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பேரின வெறிப்பெருக்கெடுப்பிற்கு வீழ்ந்த பேரிடி, ஓயாத அலைகள் - 3




தரமாட்டோம் விடமாட்டோம், தமிழர்க்கிங்கு இடமில்லை...! எடுக்கவிடோம் கொடுக்கவிடோம் இத்தீவு சிங்களத் தீவு...!

என்ற பேரினவாத வெறித்தாளக்கட்டிற்கு அமைய கொதித்துக் கொதித்து குதிப்பு ஆட்டம் நடாத்திய பேரினவாத அரசியல் இராணுவ ஆட்சி வெறியர்க்கு உறைப்புடன் கிடைத்த பேரு தைப்பு அடியாக ஓயாத அலைகள் 3 இன் தொடர்ச்சியைச் சொல்லலாம்.

சமாதானத்திற்கான யுத்தம், பேச்சுவார்த்தைகளுக்கு இடமில்லை யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை, புலிகளை அழித்த பின்பே தமிழர்களுக்கான சமாதானத் தீர்வு நிறைவேற்றப்படும் என்ற திமிர்த்தனக் கருத்து முன் வைப்புக்களும் ஓயாத அலைகள் 3னால் பொல்லாத அடிகளைப் பெற்றுள்ளன.

ஓயாத அலைகள்-1, ஓயாத அலைகள்-2, ஜெயசிக்குறு படைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் போன்று புலிகள் தொடுத்த பாரிய தாக்குதல் நடவடிக்கைகளில் இருந்து சிறீலங்கா, விடுதலைப் புலிகளின் இராணுவ வல்லமைத்தனங்களைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் ஏனோ அது புரிந்து கொள்ளத் தவறிவிட்டது. சிறீலங்காவின் இந்த கண்மூடித்தனத்தினை முறியடித்து கண்திறக்க வைக்கும் தொடர்கதையாகவும் ஓயாத அலைகள் 3 உள்ளது.

**ஓயாத அலைகள் 3 தற்போது சற்று ஓய்வில் இருந்தாலும் அது நின்று விடவில்லை, பாய்ச்சலை மட்டும் நிறுத்தி நின்ற இடத்தில் நிறுத்திக்கொள்ளாது அடித்துக் கொண்டிருக்கும்**

ஓயாத அலைகள் 3 தற்போது சற்று ஓய்வில் இருந்தாலும் அது நின்று விடவில்லை, பாய்ச்சலை மட்டும் நிறுத்தி நின்ற இடத்தில் நிறுத்திக்கொள்ளாது அடித்துக் கொண்டிருக்கும் இவ்அலையானது, சிறீலங்கா இராணுவத்தை தான் கைப்பற்றிய பகுதிகளுக்குள் வரவிடாதும், அதற்கான முயற்சியை எடுக்காதவாறும் தடுத்துக்கொண்டிருக்கின்றது.

இத் தீவின் பூர்வீகக் குடிகளான, தமிழ் மக்களின் நீண்ட கால ஆற்றாமை, ஆதங்கத்தின் வெடிப்புடன் அவர்களது அபிலாஷை, பேரவா ஆகியவற்றின் துடிப்பும் இன்று செயல்வடிவம் பெற்றுள்ளது. அதன் தோற்றத்தை எல்லைப் படைவீரர், சிறப்புப்படைவீரர், ஊரகப்படை வீரர், (கிராமியப்படைவீரர்) என தமிழ் மக்களின் இன்றைய அணிவகுப்புக்களை கூறமுடியும்.

வீரத்திற்கு முன்னுரிமை கொடுத்து அதனைக் கட்டிக் காத்து செயற்படுத்திவந்த தமிழரின் பண்பாட்டு இயல்பு சிங்களப் பேரினவாதத்தின் வெறியர்களால் மீண்டும் தமிழினத்தினரிடையே தலைதூக்கிக் களமாடத் தொடங்கியுள்ளது.

ஐம்பது ஆண்டுகால இத்தீவின் வரலாற்றில் அரசபீடத்தில் இருந்து அரசோச்சிய அத்தனை ஆட்சியாளர்களில் எவருமே தமிழ் மக்ளின் விருப்பு, வெறுப்பு போன்றவற்றின் வேர்களை ஆராயவோ அல்லது அவற்றின் ஆழத்தைக் கண்டு கொள்ளவோ முற்பட்டது கிடையாது. மாறாகத் தமது பேரினவாத வெறிநோக்க நிறைவேற்றத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து வந்துள்ளனர்.

ஒரு தேசிய இனத்தின் ஆன்மாவையும் அதனது உயிர்த்துடிப்புக்களையும் புறக்கணித்து அவர்களை அடக்கி அடிமைப் படுத்திவிட முனைந்தமையே சிங்கள அரசாங்கங்களினதும், அதன் அடிவருடிகளினதும் முக்கிய நடவடிக்கையாக இருந்து வந்துள்ளது. இதற்கு தமது அனைத்துவித நடவடிக்கைகளையும் சிங்கள அரசுகள் பிரயோகித்து வந்துள்ளன.

நீர்ச்சிந்தில் கரைந்து போகும் உப்புக் கும்பிகளாக தமிழ் மக்கள் இருப்பார்கள் என சிங்களப் பேரினவாத வெறியர்கள் நம்பினர். அந்த நம்பிக்கையின் காரணமாகவே மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் தமிழ் மக்கள் மீது திரும்பத் திரும்ப இராணுவ முனைப்பு நடவடிக்கைகளையே மேற்கொண்டு வந்தன எனலாம். ஆனால் தமிழ்மக்கள் எந்த நிலையிலுமே கரைந்து போகாத மாறுபடாத வைரக்கற்கள் என்பதனை இக்கால அவதானிப்பு மூலம் (எல்லைப் படை, சிறப்புப்படை போன்ற) தமிழினத்தின் வரலாற்றில் பதிவு செய்துள்ளனர்.

ஒரு நியாயமான தேசிய இனத்தின் அறத்தின்பாற்பட்ட போராட்டத்தை எந்தவொரு அரச பயங்கர வாதத்தினாலும் ஒடுக்கி விடமுடியாது என்ற வரலாற்று உண்மை மீண்டும் மெய்ப்பிக்கப்படுகின்றது என்று கூறலாம்.

ஓயாத அலைகள் 3 இன் தொடர்ச்சிக்குத் தமிழ் மக்களின் இன்றைய முனைப்பு பேருதவி செய்கின்றன தென்றால், அது ஒரு போதும் மிகையாகாது.

1958ம் ஆண்டின் இன வன்செயலின் போது துன்பப்பட்டு, துவண்டு துடித்து நின்ற தமிழினத்தின் அவல நிலையை சிறிதும் கவனத்தில் எடாது தமிழர்கள் பட்டறிந்து கொள்ளட்டும் எனத் தமிழினத்திற்குப் பாடம் புகட்டும் கருத்தை முன் வைத்த பண்டாரநாயக்காவின் உதிர வாரிசிற்கு இன்று தமிழ் மக்கள் வரலாற்றுப் பாடம் புகட்டியுள்ளனர். 1997ம் ஆண்டு நடைபெற்ற இன்னொரு வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட தமிழர்களின் துயரப் படலத்தினை புள்ளி விபரீதியாக எடுத்து விளக்கி அனுதாபம் கோரவும் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் சமூகமளித்திருந்த தமிழ் மிதவாத் தலைவர்களைப் பார்த்தும் போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்கள் நாற்சந்திச் சண்டித்தனச் சூளுரைப் பொன்றை விடுத்தார். அவரின் போர்வெறி நிறைவேற்று அதிகாரங்கொண்ட இன்றைய அரசியல் வாரிசுகளுக்கு தமிழ் மக்கள் இன்று போர் என்றால் போர் என்பது எப்படியிருக்கும் என்பதைத் தமது விடுதலைக்கான யுத்தத்தின் மூலம் உணர்த்தியுள்ளனர், உணர்த்தியும் வருகின்றனர்.

தமிழ் மக்களை ஏமாற்றிவிடலாம் என்று கருதிய பேரின வெறியர்கள் அந்த ஆட்சியாளர்கள் கைவிடப்படுவது என்ற எண்ணப்பாட்டுடனேயே உண்டாக்கப்பட்ட நாற்றுப்பதியங்களாக அவ்வப்போது பாசாங்குத்தன தீர்வு முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர். (பண்டா-செல்வா, டட்லி-செல்வா, இலங்கை- இந்திய ஒப்பந்தங்கள் போன்றன) பாம்பின் வீரியத்தைப் பறித்தபின் பெட்டிப் பாம்பாகிக் கொள்ளும் பேரினவெறித் தலைவர்களின் மயக்கு வழிமகுடித்தனங்களும், பெரும் பெரும் ஆர்ப்பரிப்புடன் முன்னெடுக்கப்பட்ட பலாத்கார இராணுவ நடவடிக்கைகளும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழ் மக்களோடு இணைந்த ஓயாத அலைகளாகத் தொடுக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி வீதியால் வாகனங்களில் ஆட்களைக் கொண்டு வருவேன் எனக்கூறியும், புலிகளை அழிப்பதற்குப் பல காலக் கெடுக்களை முன்வைத்தும் வீராவேசம் வெளிப்படுத்திய ரத்வத்தையின் அதிகார வெறியும், யாழ் மாவட்டத்தினை சிறிலங்கா இராணுவம் கைப்பற்றிய பின் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்தி சமாதானத்தை ஏற்படுத்திக் கொண்டு நான் பிடித்த பிரதேசங்களில் இருந்து ஒரு அங்குலமும் இராணுவத்தை விலக்கிக் கொள்ள மாட்டேன் என்ற அந்தநாள் சிறிலங்கா இராணுவத்தளபதியின் பதவிவெறித்திமிர் வாதமும் வரலாற்றுக் கேலிகளாக ஓயாத அலைகள் மூன்றினால் ஆக்கப்பட்டுள்ளனர்.



சிறிலங்காவின் ஆட்சியாளர்களின் சலுகைகளைக் கண்டு அவர் வசப்பட்டுவிடும் தமிழ்த் தலைவர்களின் மத்தியில் நிலைகுலையாத தலைமைத்துவப் பண்பில், சகல திறமைகளுடனும் கூடிய வல்லமை மிகுந்த தலைமை தமிழினத்திற்கு கிடைத்திருப்பது பெரும் வரலாற்று வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். அத்தலைவர் மூலமாக தமிழினம் தம்மை விடுவித்துக் கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது. இந்த மாபேற்றினை தமிழினம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**ஓயாத அலைகள் மூன்றின் வழியில் தமிழ்மக்கள் அணிதிரண்டு, தமது வரலாற்றுக்கடமையை நிறைவேற்றிக் கொள்வது அவசியம்.**

ஓயாத அலைகள் மூன்றினால் ஏற்பட்ட மாபெரும் தோல்வியை தமிழர் படையின் முன்னேற்றத்தை இனித்தடுப்பதன் மூலம் சிறிலங்காஅரசும் இராணுவமும் சரிக்கட்டப் பார்க்கின்றன. புலிகளின் முன்னேற்றத்தைத் தடுத்துவிட்டோம் என்பதை பெரு வெற்றியாகக் காட்டிக்கொள்ளவும் முனைகின்றன. ஓயாத அலைகள் மூன்றின் சற்று ஆறிய நிலையினைப் பயன்படுத்தி அவர்கள் இவ்வாறு காட்ட முனைகின்றனர்.

இவ் வேளையில் தமிழ்மக்கள் தமது வரலாற்றுத் தேவையை நிறைவேற்ற வேண்டிய அவசர அவசியத்தில் உள்ளனர். இன்று அடிபடும் பேச்சுவார்த்தை என்னும் சலசலப்பு மாயமானைக் கண்டு சபலித்துப் போகாமல் இருக்க வேண்டும்.

ஓயாத அலைகள் மூன்றின் வழியில் தமிழ்மக்கள் அணிதிரண்டு. தமது வரலாற்றுக்கடமையை நிறைவேற்றிக் கொள்வது அவசியம்.

பேரினவாதப் பெருக்கெடுப்பிற்குப் பொருத்தமான பேரடிகளைக் கொடுத்து ஓயாத அலைகள் மூன்றினை திட்டமிட்டு நெறிப்படுத்திய அந்தத் தலைவரினால் விடுக்கப்படும் அழைப்பினைச் செவிமடுத்து, அவர் காட்டும் வழியில் மேலும் அணிதிரண்டு தமது வெற்றியை என்றென்றைக்குமாகப் பெற்றுக்கொள்ள தமிழ் மக்கள் தம்மை முனைப்பாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஆயினும். தமிழ் மக்கள் இன்னும் வேகமாக விரைவு படத்திக் கொள்வதே இவ்வேளையின் உடனடித்தேவையாக உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# இது எமது யுகம்...

**03.04.2000, 14.00 மணி - ஜெனீவா**

## ஓயாத அலையென எழுந்திடுவீர் ஐ.நா.வை நோக்கி

ஆண்டு தோறும் ஓகஸ்ட் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா.) மனித உரிமைகள் உப ஆணைக்குழு கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. அச் சமயம் புலம்பெயர் ஈழத் தமிழர் ஐ.நா. நோக்கி அணி அணியாகத் திரண்டு தமிழீழ மக்கள்படும் துயரங்களை வெளிப் படுத்துவதோடு, தமது தாயகத்தையும் விடுதலையையும் அங்கீகரிக் கக் கோரி சர்வதேச சமூகத்திடம் நியாயம் கோரி அழுத்தத்தைக் கொடுத்து வந்துள்ளனர்.

இவ் வருடம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உப ஆணைக்குழு நடைபெறும் ஓகஸ்ட் மாதத்தில் அல்லாது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு நடைபெறும் காலத்தில் ஏப்ரல் 3ம் திகதி பேரணி இடம்பெறுகிறது. ஓகஸ்ட் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் உப ஆணைக்குழு நடைபெறும்போது, மனித உரிமைகள் தொடர்பான நிபுணர்களே இவ் ஆணைக்குழுவில் கலந்துகொள்வர். நாடுகளின் பிரதிநிதிகளோ, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளோ இவ் உப ஆணைக்குழுவில் கலந்துகொள்வதில்லை. மாறாக மார்ச்-ஏப்ரல் மாதங்களில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவில், ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளினது பிரதிநிதிகளும் , ஐ.நா. சபையின் அங்கீகாரம் பெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்கின்றனர். இவ்வாறு அனைத்துலகின் மனித உரிமைகள் தொடர்பான பிரதி நிதிகள் ஒன்றுகூடும் தருணமே, தமிழீழ மக்கள்படும் துயரங்களை யும், சிறீலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையினை யும் வெளிப்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தார்மீக நியாயத்தினை அனைத்துலகம் உணர எடுத்துரைப்பதற்கு மிகப் பொருத்தமான தருணம் என உணரப்பட்டமையே இம்முறை பேரணி ஏப்ரல் 3ம் திகதி நடாத்தப்படுவதற்கு முக்கியமான காரணமாகும்.

புலம்பெயர்ந்த ஈழத் தமிழர் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக இந்த ஐ.நா. பேரணி உருப்பெற்றுவிட்டது. *'இந்த யுகம் எமது யுகம்'* என்ற எமது தமிழீழத் தேசியத் தலைவரின் கூற்றுப்படி இம்முறை நடைபெறும் பேரணி *'இது எமது யுகம்... ஓயாத அலையென எழுந்திடுவீர் ஐ.நா.வை நோக்கி'* என்ற பதாகையின் கீழ் இடம்பெறவுள்ளது. மலர்ந்து விட்ட இந்தப் புது யுகத்தில் புலம்பெயர் ஈழத் தமிழரின் முதல் மாபெரும் நிகழ்வாக இந் நிகழ்வு இடம்பெறப் போகிறது.

எமது தாயகத்தில் எமது போராளிகளும், மக்களும் *'இப் புது யுகம் எமக்கானது'* என்ற உறுதியுடன் தமது பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கின்றனர். சிறீலங்கா அரசின் கொடூரமான இரா ணுவ நடவடிக்கைகளையும், உணவு மருந்து உட்பட்ட பொருளாதா ரத் தடைகளையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு உயிர்ப்புடன் எமது தாயகத்தினை மீட்டெடுத்து வருகின்றனர். இத்தகையதொரு தருணத் தில், அனைத்துலகின் பிரதிநிதிகளும் ஜெனிவாவில் ஒன்றுகூடும் வேளையில், எமது மக்களின் நியாயங்களை, எமது தாயகத்தின் விடுதலைக் குரலை ஐக்கிய நாடுகள் சபையின் முன்னால் தமிழீழ மக்களின் பிரதிநிதிகளாய் நின்று ஓங்கி ஒலிக்கவேண்டியது புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களாகிய எமது கடமையல்லவா!

**ஏப்ரல் 3ம் திகதி ஜெனிவாவில் ஒன்றுகூடுவோம்! அனைத்துலகுக்கும் எமது தாயகத்தின் குரலை ஓங்கி ஒலிப்போம்.**

## ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்தும் போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன...


## சூரிச் புகையிரத நிலையத்திலிருந்து விசேட புகையிரத சேவை நடைபெறும்...

சுவிஸின் பல்வேறு நகரங்களிலிருந்தும் புறப்பட்டுவரவிருக்கும் மக்கள் தங்கள் பகுதிப் பணியாளர்களிடம் தங்களின் போக்குவரத்து இருக்கைகளை முன்கூட்டியே பதிவுசெய்து பதிவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவும்.

*புகையிரத கால அட்டவணை:*

| | | | |
|---|---|---|---|
| Zürich HB | 09.30 | Geneva | 19.05 |
| Dietikon | 09.54 | Lausanne | 19.44 |
| Baden | 10.03 | Fribourg | 20.39 |
| Brugg | 10.12 | Bern | 21.03 |
| Lenzburg | 10.30 | Burgdorf | 21.19 |
| Aarau | 10.40 | Herzpgenbuch. | 21.30 |
| Olten | 10.53 | Langenthal | 21.37 |
| Langenthal | 11.18 | Olten | 21.52 |
| Herzogenbuch. | 11.25 | Aarau | 22.08 |
| Burgdorf | 11.38 | Lenzburg | 22.15 |
| Bern | 11.54 | Brugg AG | 22.30 |
| Fribourg | 12.19 | Baden | 22.38 |
| Lausanne | 13.12 | Dietikon | 22.46 |
| Geneve | 13.53 | Zürich HB | 22.58 |

**பிரான்ஸ், யேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, டென்மார்க், சுவீடன், நெதர்லாந்து போன்ற நாடுகளிலிருந்து இந்த வரலாற்றுப் பேரணியில் கலந்து கொள்ளவிருக்கும் மக்களின் நலன் கருதி போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தங்கள் நாடுகளிலுள்ள எமது பணிமனைகளையோ, அல்லது அவ்வப் பகுதி பணியாளர்களையோ தொடர்புகொண்டு போக்குவரத்துக் கால அட்டவணைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# தென்னாபிரிக்காவில் பிரிட்டிசாரை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்ற போயர்கள் (1899-1902)



20ம் நூற்றாண்டின் தென் ஆபிரிக்காவிலே டச்சுமொழி பேசும் குடியரசுகளான ஒரு ஒரேஞ்பிறி மாகாணமும், றான்ஸ்வாலும், பிரிட்டிசாரின் நெருக்குதலுக்குள்ளாகின. தென் ஆபிரிக்காவில் பெரும்பகுதியை ஆண்டு வந்த ஆங்கிலேயர் கெய்ரோவிலிருந்து கேப் வரை முழு ஆபிரிக்காக் கண்டத்தையும், தமது கட்டுப்பாட்டில் வைக்கக் கனவு கண்டனர். அவர்களின் எண்ணத்துக்கு குறுக்காக டிரான்ஸ்வாலின் ஆளுனர் பவுல் குறுகர் ( Paul kruger ) முன் நின்றார். பிரிட்டிசார் உடனடியாகக் கேப் கொலனி மற்றும் நேட்டால் வடபகுதிகளுக்கூடாக உடனடியான ஆக்கிரமிப்பு நகர்வொன்றை மேற்கொண்டனர். பிரிட்டிஸ் ஏகாதிபத்தியம் தனது வல்லாதிக்கத்தில் மிகப் பெரும் நம்பிக்கை வைத்து, உலக வல்லரசான தாங்கள், * ஆபிரிக்கானர்களை (Boer) வெகு இலகுவாக குறுகிய காலத்தில் தோற்கடிக்கலாம் என நம்பியது. ஆனால் இந்த யுத்தம் 1899-1902 வரைக்குமான மூன்று வருடங்கள் நடைபெற்றது. எண்ணிறைந்தவர்கள் கொல்லப்பட்டனர். ஆபிரிகானர் கரந்தடி முறையில் (Guerilla warfare) பயங்கரமான வலிந்ததாக்குதல்களை பிரிட்டிஸ் நிலைகள் மீது மேற்கொண்டனர். இது பிரிட்டிசாரைப் பகிரங்கமாக சங்கடத்தில் ஆழ்த்தியது. மேலதிகத் துருப்புக்களை, இந்தியா, சீனா மற்றும் பிரிட்டிஸ் பிராந்தியங்களில் இருந்து கொண்டு வந்திறக்கி ஆபிரிக்கர்கள் மீது அடக்குமுறையான பயங்கரமான யுத்தத்தை நடாத்தினர்.

பிரிட்டிஸ் படைகள் தங்களுக்கு இழப்புக்கள் வரும் போதெல்லாம் ஆத்திரத்தை ஆபிரிக்கானர்களின் குழந்தைகள் பெண்கள் மீது காட்டினார்கள். ஏறத்தாள 20000 அப்பாவி ஆபிரிக்கானர்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் தோட்டங்கள் தொழிற்சாலைகள் நாசமாக்கப்பட்டன. போராடும் புரட்சியாளர்களை, அவர்களின் மனைவி குழந்தைகளைத் தடுத்து வைத்து, சரணடையுமாறு பிரிட்டிசாரால் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இறுதியில் வீரமும் உறுதியும் நிறைந்த ஆபிரிக்கானர்களை பிரிட்டிஸ் ஏகாதிபத்தியம் தன் பெரும்படைவலுவைப் பிரயோகித்து தற்காலிகத் தோல்வியை ஏற்படுத்தியது. அவர்களின் உறுதியான போராட்டம் தொடருமெனக்கண்டு பேச்சுவாத்தை மேசைக்கு அவர்களை அழைத்து நண்பர்களாக்கிக் கொண்டு சுயாட்சி டொமினியன் அந்தஸ்தை வழங்கியது. பிரிட்டிசாரால் தேடப்பட்ட ஆபிரிக்கானர்கள் சுதந்திரத் தென்னாபிரிக்க ஆட்சித் தலைவர்களானார்கள். இந்தத் தந்திரத்தையே பிரிட்டிசார் தமது குடியேற்ற நாடுகளில் கையாண்டனர். குடியேற்ற நாடுகளிலே தமக்கெதிராக ஆயுதப் போராட்டங்கள் வலுவாக வருகின்ற பொழுது அவர்களைத் திசைதிருப்பி தமது நலன்களுக்குப் பங்கம் வராமல் அந்நாடுகளை அவர்களுக்கே கொடுத்துவிடுவார்கள். இதற்கு 20ஆம் நூற்றாண்டில் தொடக்கப் புள்ளி வைத்தவர்கள் தென்னாபிரிக்க ஆபிரிக்கானர்களே. இதனை இன்னொரு வகையில் கூறுவதானால் பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்தின் அஸ்தமிப்பை ஆரம்பித்தவர்கள் என்று கூறலாம்.



ஆக்கிரமிப்பாளர்களை ஒரு போதும் மண்ணின் மைந்தர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. பெரும் படை வலுவைப் பிரயோகித்து ஆக்கிரமிப்பாளர் எப்போதும் தற்காலிகமாக மண்ணில் நிலை கொள்ளலாம். ஆனால் இறுதி வெற்றி மண்ணின் மக்களுக்கே. 250000 இற்கும் மேற்பட்ட பிரிட்டிசாரை எதிர்த்து 15000 போயர்கள் போராடி தமது உரிமைகளை நிலை நாட்டினர். இன்று இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட சிறீலங்காப் படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பாடங்கற்கின்றனர். இன்று இருபத்தைந்து வருட விடுதலைப்போராட்ட அனுபவத்தைக் கொண்ட தமிழீழம் உலக விடுதலைப் போராட்டங்களில் முக்கிய இடத்தைக் கொண்டிருக்கின்றது.

இலட்சியத்தால் ஒன்று பட்ட மக்களே வரலாற்றைப் படைப்பர்கள். அவர்களை எந்த ஒரு ஆக்கிரமிப்பு சக்தியாலும் அடக்கமுடியாது என்ற எமது தேசியத் தலைவரின் கூற்று இதனை உறுதிப் படுத்துகிறது.

* தென்னாபிரிக்காவில் கி.பி 17ஆம் நூற்றாண்டளவில் நெதர்லாந்திலிருந்து குடியேறியவர்களே ஆபிரிக்கானர் என்றழைக்கப்படுகின்றனர்.

## மாபெரும் அமைதிப் பேரணி

*நெதர்லாந்தின் பல தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து நடாத்தும் மாபெரும் அமைதிப்பேரணி ஒன்று, எதிர்வரும் 07.03.2000 ம்திகதி, செவ்வாய்கிழமை பிற்பகல் 12.30 மணியிலிருந்து 16.00 மணிவரை, நடைபெறவுள்ளது. டென்காக் மத்திய புகையிரத நிலையத்தில்இருந்து ஆரம்பமாகும் இப்பேரணி, மால்ற்வெலில்* (maltvel) *உள்ள பாராளுமன்ற முன்றலைச்* (tweede kamer plein)*சென்றடையும்.*

*சிறீலங்காவில் தமிழர்கள் பாதுகாப்பாக வாழலாம் என்று, நெதர்லாந்து நீதித்துறை அண்மையில் எடுத்த தீர்மானம் மனிதாபிமானமற்றது என்பதைச் சுட்டிக்காட்டி, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும். தமிழீழத்தில் சிறீலங்கா அரசாங்கம் தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொண்டுவரும், இனஅழிப்பு மற்றும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்தும், இப்பேரணி நடாத்தப்படவுள்ளது.*

*சிறீலங்கா அரசின் இனவாதப்போக்கு கடுமையடைந்துவரும் இந்நிலையில் நெதர்லாந்தில் வாழும் தமிழ் மக்களை, சிறீலங்காவிற்கு திருப்பியனுப்ப வேண்டாம் எனக்கோரியும் இவ்வூர்வலம் நடைபெறவுள்ளது.*
*இவ்வூர்வலத்தில் அனைவரையும் பங்கெடுக்கும்படி நெதர்லாந்து தமிழ் ஐக்கிய ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.*


வெளிவந்து விட்டது

வாழ்வின் சுவடும்—நம் சமகாலத்தின் உண்மை முகமும்

ஒளிவீச்சு ஏப்பிரல் 1999




அனைத்து தொடர்பாளர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்

வெளியீடு: நிதர்சனம் தமிழீழம்
மீள் வெளியீடு: அனைத்துலகச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்


## அநீதியான ஆக்கிரமிப்பாளரை நிராயுதபாணியாக்குவது நெறியானதும் கட்டாயமானதுமாகும்

### —புதுயுகப் பேருரையில் திருத்தந்தை—



உலக அமைதி தினமாகிய ஜனவரி 1ம் நாள், மில்லேனியத்தின் தொடக்க நாளாகிய அன்று, இறைவனில் அன்பு செய்யும் உள்ளங்களுக்கு அமைதி உண்டாகுக என்ற தலைப்பில் திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் தமது உரையை வழங்கினார். அங்கு மனித நேயத்தலையீடு என்ற பொருளில் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*'ஒரு நாட்டின் குடிமக்கள் அநீதியான ஆக்கிரமிப்பாளர்களால், நசுக்கப்படும்பொழுது, அதைக் களைவதற்கு மக்கள் ஜனநாயக அகிம்சை வழிகளை முன்னெடுத்தும், முழு நீதியை அடையாதபட்சத்தில் அநீதியான ஆக்கிரமிப்பாளர்களை நிராயுதபாணிகளாக்குவது நெறியானதும், கட்டாயமானதும் ஆகும். இவைகள் பன்னாட்டு சமூக நெறிமுறையின் ஒழுங்குகளுக்கு அமைய இருக்க வேண்டும். இன்றைய நாட்களில் இடம்பெறும் யுத்தங்களில், அரச படைகள் வெகு அதிநுட்ப பாதுகாப்பை அனுபவிக்க, சாதாரண மக்கள் பயங்கரமான ஆபத்து சூழலிலேயே வாழ்கிறார்கள். இவ்வாறான யுத்தங்களில், பொதுமக்களின் உரிமைகள் பாதுகாப்புக்குரிய தென உறுதிப்படுத்தப்பட வேண்டும். முரண்பாடுகளில் பொதுமக்களின் உரிமைகள் மீறப்படலாம் என்பதை ஒருபொழுதும் நியாயப்படுத்த முடியாது.'*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விழுதுகள்

மணிமாறன் இன்று நீ உயிருடன் இல்லை. இதை எப்படி நாம் ஜீரணப்போம்?

எனினும் ஜீரணிக்கிறோம்.

ஆறடி உயரமும், உறுதிமிகு உடலும், சிவப்பா மஞ்சளா எனக் கூறமுடியாத உடல் வர்ணமும், ஊடுருவி யாரையும் அளந்துவிடும் உன் விழிகளும், சினிமா கதாநாயகன் போல எம் மத்தியில் நீ உலா வந்த நினைவுகளும் எம் விழிகளில் நீரை வரவழைக்கின்றனவே! சர்மா என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட நீ, இன்று எம்மிடையே இல்லை!

ஆம்! பல தளபதிகளையும், தன்னிகரில்லாத போராளிகளையும், ஈழ விடுதலைப் போருக்கு அர்ப்பணித்த யாழ் இந்து அன்னை, தன்னில் பூத்த சர்மா என்ற இன்னொரு மலரை, இந்த மண்ணிற்காக ஈந்துவிட்டாள்.

இவன் க.பொ.த. (சா-த) பரீட்சை நடைபெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னர், தேசவிரோதக் கும்பல்களால் கைது செய்யப்பட்டான். காரணம் லெப். கேணல். ராதாவின் இறுதிச் சடங்கில் சாரணீயச் சீருடையுடன் கலந்து கொண்டதுதான். பரீட்சை ஆரம்பமாகும் தினத்தன்று இவன் விடுதலை செய்யப்பட்டான். இவன் நிலை கண்டு எப்படி இவன் பரீட்சை எழுதப்போகிறான் என நாம் எண்ணினோம். முகம் வீங்கியிருக்க, சித்திரவதையினால் காயங்கள் சிவந்திருக்க, எவ்வித சலனமும் இன்றி பரீட்சையை எழுதி முடித்து எம்மையெல்லாம் ஆச்சரியத்தில் ஆழ்த்தினான். ஒரு பாடத்தில் அதி விசேட சித்தியும் பெற்று, தனது உடல் உள உறுதியையும், திறமையையும் எமக்குப் புரியவைத்தான்.

இலங்கை அரசு, சிங்கள மாணவர் மத்தியில் இனத்துவேசத்தை வளர்க்கும் முறையாகச் செயல்பட்டது. அதில் ஒரு முறையாக மாணவர்களுக்கென கொடுக்கப்பட்ட மதியபோசனத்திற்குரிய பணத்தை அன்பளிப்பு என்னும் போர்வையில், மீளப்பெற்று பாதுகாப்புநிதியில் சேர்த்துக் கொண்டது. இதன் விளைவை உணர்ந்து, தனது கல்லூரி மாணவர்களுக்கு நிலைமையை விளக்கிக் கூறினான். இதன் விளைவாக பல ஆயிரம் ரூபா மதிய போசனத்திற்குரிய பணத்தைச் சேகரித்து, அகதிகளுக்காகவும், அனாதைகளுக்காகவும், அல்லற்படும் மாணவர்களுக்கும் பகிர்ந்தளிக்க வழிசெய்தான். மாணவர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணிகளுக்கெல்லாம், தனது கல்லூரி மாணவர்களைத் தானே முன்னின்று அழைத்துச் செல்வான்.

பல தடைவை போராளிகளுக்காக இரத்த தானம் செய்ருந்த இவன், தனது சக மாணவர்களுக்கு இரத்த தானம் செய்ய வேண்டியதன் அவசியம் பற்றி விளக்கிக் கூறி, ஏனையோரையும் அப்பணியில் ஈடுபட வைத்தான்.

வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஆனையிறவுச்சமரின்போது, களம் சென்று சேவை செய்யத்துடித்த இவனுக்கு வைத்திய சாலையில் காயம்பட்ட போராளிகளைப் பராமரிக்கும் பாரிய கடமை கிடைத்தது. அதற்காகக் கல்லூரி மாணவர்களை ஓர் ஒழுங்குமுறையில் ஒவ்வொருநாளும் அனுப்பிவைத்தான். பல நாட்கள் இரவில் கண்விழித்து பரீட்சைக்குப் படிக்க வேண்டியதையும் மறந்து தனது கடமையைத் தொடர்ந்தான். இப்பொழுது தான் தானும் ஒரு போராளியாக வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டான்.

இந்நாளில்தான், யாழ் நகரிலுள்ள சகல உயர்தர மாணவர்களுக்குமான, ஒரு போர்க் காலக் கருத்தரங்கை மேடையேற்று நடாத்தினான். விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் பலரும், ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர்களும் கலந்து கொண்ட, இக் கருத்தரங்கில் தலைமையுரை நிகழ்த்தும் போது, சிந்தித்தது போதும் இனி செயற்பட வாருங்கள் என அறை கூவல் விடுத்தான். எல்லோருக்கும் முன்மாதிரியாக இவன் சொல்வதைச் செயலில்காட்டுவான். அதனை நிரூபிக்கும் வகையில், தன் மாணவ நண்பர்கள் சிலருடன் வரிப்புலி சீருடை அணிய புலிப்படையில் தன்னை இணைத்துக் கொண்டான்.

அப்பொழுது இவன் பயிற்சிப்பாசறையில் புடம் போடப்பட்டுக்கொண்டிருந்தான். மிகவும் கடினமான பயிற்சிகளையெல்லாம் எதுவித சலனமும் இல்லாமல் செய்து முடிப்பான். பாசறைத் தீ வளர்த்துப் பாடல்கள் படித்தும், தாளலய நாடகங்கள் நடித்தும், சகபோராளிகளை மகிழ்விப்பான்.

இவ்வேளையில்தான், எங்கள் எல்லோரதும் பிரத்தியேக விபரங்கள் எடுக்கப்பட்டது. அப்பொழுது விபரங்கள் எடுத்துக் கொண்டிருந்த போராளி, இவனைப் பார்த்து காதல் உண்டா? எனக் கேட்க, இவனும் ஆம் எனப்பதில் அளித்தான். அதைப்பற்றி விபரம் தரும்படி கேட்கப் பட்டபோது, எத்தனைபேர் என்று விபரம் தாறது என்று இவன் கேட்க, அந்தப் போராளி திகைப்படைந்து, இவனைப் பார்த்தான். அந்தப் போராளியைப் பார்த்துச் சிரித்தபடியே, தமிழீழ மக்கள் அனைவரையுமே நான் காதலிக்கிறேன் எனப் பதில் அளித்தான்.

ஒருநாள் பயிற்சி முடிந்து நாம் ஓய்வாக இருக்கும்போது கூறினான், மச்சான் நீங்கள் யாரும் சாகிறதுக்கு முன்னால் நான் சாகவேணும் ஏனென்றால் நீங்கள் யாரும் இறந்தால், அதைத் தாங்கிக் கொண்டு இருக்கேலாது. ஆம், இவனின் அந்த வசனங்கள், எமது இதயத்தைப் பிழிந்த வண்ணம் உள்ளதுஏனோ காலம் அவன் விரும்பியபடியே இவனை அணைத்துக் கொண்டது.

நாம் இராணுவ அணிநடைக்கான பயிற்சியை எடுத்துக் கொண்டிருந்தோம். அதற்கான பாண்ட் வாத்தியங்கள் பழக வேண்டியிருந்தது. குறுகியகால இடைவெளியில், எக்கோடியன் இசைக்கருவியை இசைக்கப் பழகியிருந்தான். கடந்த ஆண்டு நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்ச்சிகளில், புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் எனும் பாடலுடன், இராணுவ அணிநடைப் பிரிவு மாவீரர்களுக்குத் தனது இராணுவ மரியாதையைச் செலுத்தியது. இது தமிழர்களின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சியாகும். ஏனெனில் தமிழில் கட்டளை ஏற்று அணிவகுத்து நின்ற இந்த இராணுவப்பிரிவு, தற்கால எதிர்கால இராணுவ பலத்தையும் அதன் உறுதியையும் உலகிற்கு உணர்த்தியது. இந்த அணிநடை சிறப்பாக அமைவதற்கு மணிமாறன் பலருக்கு அணிநடை பழக்கினான் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கால கட்டத்தில் இந்துக் கல்லூரியில் நடைபெறும் மாவீரர் தின நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதை ஏற்று நாம் அங்கு சென்றோம். அவன் மாணவசீருடையில் நின்று உரையாற்றிய அதே அரங்கத்தில் மீண்டும் வரிப்புலி சீருடையில் நின்று உரையாற்றினான். சொன்னதைச் செயலிற்காட்டியவன் அல்லவா மணிமாறன். தொடர்ந்து ஒரு வகுப்பறையில் எமக்குத் தேனீர் விருந்தளிக்கப்பட்டது. அவ்வகுப்பறையின் சுவரிலே அவன் பெயரும், அதைத் தொடர்ந்து சில மாணவர்களின் பெயரும் காணப்பட்டன. ஆம் இவர்கள் இயக்கத்துடன் தம்மை இணைத்துக் கொள்ளும் செய்தியைத் தெரியப் படுத்தும் கடிதங்களை பெற்றோருக்கும், நண்பர்களுக்கும் இவ்வறையில் வைத்தே எழுதினார்கள். இவர்களின் பெயர்களைத் தான் அச்சுவர்கள் கூறின. இப்பொழுது அவை எமக்குப் புதிய அர்த்தம் ஒன்றைப் புகட்டுகின்றன. அப்பெயர்ப்பட்டியல் நீளத் தான் போகிறது. ஆம் இது எழுதப் பட்டிருக்கும் பொழுதுதான், காஸ்ரோ வீரமரணச் செய்தி வெளிவந்தது.

திடீரென்று செய்தி வருகின்றது. புல்லாவெளிப்பக்கமாக வெளியேற முயன்ற, இராணுவத்துடன் சமர் மூண்டு விட்டதாக, யாழ் மாவட்ட விசேட அதிரடிப்படைப்பிரி

**மச்சான் நீங்கள் யாரும் சாகிறதுக்கு முன்னால் நான் சாகவேணும் ஏனென்றால் நீங்கள் யாரும் இறந்தால், அதைத் தாங்கிக் கொண்டு இருக்கேலாது. ஆம், இவனின் அந்த வசனங்கள்,**

வில் இருந்த மணிமாறனின் படைப்பிரிவு ஒன்று களம் நோக்கி விரைகின்றது. அங்கு நின்ற பதினைந்துபேர் கொண்ட குழுவொன்றின் துணைத் தலைவனாக இருந்தான். அக்களத்தில்தான் அவனது திறமைகள் பூரணமாக வெளிவருகின்றது. இருபதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைப் பலி கொண்ட அச்சண்டையில், பதினாறு இராணுவத்தினரின் உடல்களும், பல நவீனரக ஆயுதங்களும், எம்மால் கைப்பற்றப் பட்டிருந்தது. அவ்வேளை இவன் காட்டிய வீரமும் விவேகமும் எம்மைப் பிரமிக்க வைத்தன. அக்கோரக் குண்டு வீச்சு எறிகணைக்கு மத்தியில், ஒரு கையால் இராணுவத்தினரின் உடலை இழுத்தபடியும், மறுகையில் தனது துப்பாக்கியை ஏந்திய படியும், நிலையெடுத்து, நிலையெடுத்து, எமது அரணைநோக்கி ஓடிவந்த வேகமும், லாவகமும் கண்டு வியந்தோம்.

இவ்வேளை இலங்கை இராணுவம் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்த, ரி.56, ரி.85 ரக நவீன ராங்கிகளைக் கொண்டு, யாழ் மாவட்டம் மீது பாரிய தாக்குதல் ஒன்றை தொடங்கத் திட்டமிட்டது. இதற்காக அமைக்கப்பட்ட புலிகளின் விசேட ராங்கி எதிர்ப்புப் படைப்பிரிவில் இவன் சேர்த்துக் கொள்ளப்பட்டான். அப்பொழுது பெருமைப் பட்டோமா, அல்லது பொறாமைப்பட்டோமா எனக் கூறமுடியாத ஒரு உணர்விற்கு உட்பட்டிருந்தோம்.

அப்போது ஒரு சக போராளி கூறினான், 'கெவி வெப்பன்ஸ்' காரங்கள்தான் முதலில் மண்டையைப் போடுவாங்கள், நீ கவனம் எண்டு. அப்பொழுது அவன் முகத்தில் படர்ந்த புன்முறுவலை நினைக்கும்போது, உடலில் மின்சாராம் பாய்கின்ற உணர்வுதான் ஏற்படுகின்றது. அப்பொழுது இவன் கூறினான், என்னால் மச்சான் ஆர்.பீ.ஜி யையும், என்னையும் காப்பாற்ற ஏலும் என்று.

விடுதலைப் புலிகளின், களத்தில் நின்று வேங்கைகள் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு நிகழ்ச்சியின்போது, தனது பெற்றோரைச் சந்திக்கின்றான். அப்போது அவனது தாயார் வீட்டிற்கு வரும்படி அழைத்ததார். இவன் எல்லா அம்மா மாரும்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

## கணப்பொழுது



-தூயவன்-

நண்பனே!
உன் ஆயுதம்
எம் கரத்தில்!
உன் உறுதி
எம் மனத்தில்!
உன் உதிரம்
புதிய புலிகளில்!
உன் சுவடுகளில்
எம் பாதங்கள் !
இலக்குத் தெரிகிறது
பயணம் தொடர்கிறது !

-தூயவன்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மானமென்பது

**-முத்து-**



காலை வேளை சந்தி வழமைபோல் காணப் பட்டது. சந்திக்கருகில் இருந்த கிணற்றுக்கட்டில் இருந்தவாறு, பெருமூச்சுவிட்ட கந்தையர் தனக் கருகில் வந்து, சைக்கிளில் இருந் தவனைப் பார்த்து, எரிச்சலடைந்தார்.

"என்ன அப்பு பேப்பர் வரவில் லையோ" என சைக்கிளில் இருந் தபடி கேட்டான் மனோ.

"இல்லையடா கோண்டாவிலிலை செக்கிங்காம், சுணங் குமாம் வர," என்றார் அப்பு.

"அப்ப இதால சுத்திக் கொண்டு வாறன்" என்றபடி சைக்கிளை எடுத்த மனோவிடம்,

"டேய்! நான் கேக்கிறன் எண்டு கோவியாதை, நீ ஏன் உப்பிடித் திரியிறாய்? கொப்பர் பாக்குக்கூடப் போடமாட்டார் நீ சிகரட் பிடிக்கிறாய், தண்ணி அடிக்கிறாய்,....."

"அப்பு இப்ப இதுகளைச் செய்யாமல் எப்ப செய்யிறது? அண்ணை ஜேர்மனியில் இருந்து காசு அனுப்புறார். என்னோட சுத்தித்திரிய காந்தன், சுதன் இருக்கிறாங்கள், நீங்கள் ஏன் வில்லங்கப்படுறியள்'

"டேய் நீ உந்த ஆமியோட சேந்து கிலிசு கெட்ட படம் எல்லாம் பாக்கிறாய் எனக்குத் தெரியாது எண்டு நினைக் காதை ஆனால் உது நல்லதுக்கில்ல"

"அப்பு! அவன் சில்வா ஆமி எங்களோட நல்ல ஒட்டு, பன்பலாய் திரியிறம். முந்தியெண்டால், ஆரும் பேசுவினம். இப்ப எல்லோரும் எங்களைக் கண்டால் பயம். ஏன் தெரியுமே? சில்வா ஆமியிட்ட சொல்லி தங்களை மாட்டிப்போடுவம் எண்டு. நாங்கள் மூண்டு பேரும் இப்ப தனிக்காட்டு ராசாக்கள். இப்பவும் அவங்களட்டைத் தான் போறன்"

மனோ போன திசையைப் பார்த்து, "தட்டிக் கேட்க ஆட்கள் இல்லாட்டி, உப்பிடித்தான்" எனப் பெருமூச்சு விட்டார் அப்பு. "முந்தி என்ன மாதிரி அமைதியாக இருந்த பெடி பெட்டையள், சிலது இப்ப அடிக்கிற கூத்தும் கும்மாளமும், இதுகள் எப்பதான்திருந்துங்களோ" என நினைத்தபடி, கணேசின் பேப்பர் கடைக்குப் போனார் அப்பு. பேப்பரை வாங்கியவர்பின் மேலோட்டமாகச் செய்திகளைப் பார்த்தபின், கோட் றோட் பக்கமாக உள்ள தனது வீட்டை நோக்கிப் புறப் பட்டார். மனம் மனோனையும் அவன் கூட்டாளிகளையும் சுற்றி வட்டமிட்டது.

◇ ◇ ◇

படித்த மிகவும் பண்பாளரான மணியத்தின் மகன்தான் மனோ. இரண்டு தமயன்மார் வெளிநாட்டில் ஒரு அக்கா ஆசிரியை. இரு தங்கைமார் எனச்சகோதரர்களைக் கொண்ட குடும்பம். மனோ படிக்கக்கூடியவன். படிப்பை இடையில் குழப்பிவிட்டு ஊர்சுற்றுவதுதான் அவன் வேலை. படம் பார்த்தல், ஊர்வம்புகளில் தலையிடல், இவற்றில் முன் நிற்பான், வீட்டுக்காரர் இவனைத் திருத்த முடியாமல் விட்டு விட்டனர்.

இவனுடன் காந்தன், சுதன் சேர்ந்துவிட்டால் பேசத் தேவையில்லை.

இவர்கள் படம் பார்ப்பது சங்கரப்பிள்ளை வீட்டில். அவர் ஒரு சுயநலக்காரர். ஆமிக் கொமாண்டரோடு நல்ல ஒட்டுதல். ஆமியிடம் தான் கொப்பி வாங்கிப் படம் போடுவார்.

அவருக்கு மூன்று பெண்களும், ஒரு ஆண்மகனும் உண்டு. இவர்களுடன் இராணுவமும் வந்திருந்து படங்கள் பார்ப் பார்கள். இதனை சங்கரப்பிள்ளை பெருமையாக நினைப்பார். இங்கு படம் பார்க்கவரும் வேளையில்தான் மனோவிற்கு ஆமிக் கொமாண்டர் சில்வாவின் நட்புக்கிடைத்தது.

இப்படி இராணுவம் வருவதும் இரவு இரண்டு மணிவரை படம் போடுவதும், சங்கரப்பிள்ளையின் கடைசி மகள் கலாவிற்குப் பிடிப்பதில்லை. அவளின் எதிர்ப்பு அங்கு எடுபடவும்மாட்டாது. மனோ அங்கு செல்வதற்கு கலாவில் இருந்த கவர்ச்சியும் ஒரு காரணம். ஆனால் அவள் அவனைப் பொருட்படுத்துவதில்லை.

◇ ◇ ◇

அழுகைச்சத்தம் கேட்டு நிமிர்ந்து சென்றியைப் பார்த்த அப்பு எரிச்சலைடைந்தார். அங்கே வேலைக்குப் போகும் பெண் களுக்கு கீழ்த்தரமான வார்த்தைகளால் பகிடி விட்டுக்கொண்டு, சில்வா ஆமியும் மனோவும் நின்றனர். வேறோர் ஆமி செக்கிங் என்ற பெயரில் ஏதோ பார்ப்பதும், கேட்பதுமாக இருந்தான். பெண்கள் அழுது கொண்டு நின்றனர். இவர்களைத் தாண்டித் தான், இரவுவாச்சர்வேலை பார்க்கும் வி.சீ. விறாந்தையில் இருந்த கண்ணாடி விளக்கை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றார் அப்பு.

◇ ◇ ◇

வழமைபோல் படம் பார்ப்பதற்கு சில்வாவும் வேறு சில இராணுவத்தினரும் சங்கரப்பிள்ளையார் வீட்டிற்கு வந்திருந்தனர். இவர்களுக்கு முன்னால் உள்ள கதிரையில் சங்கரப்பிள்ளையின் பிள்ளைகள் இருந்தனர். மனோவும் சினேகிதர்களும் வர முன் படம் ஆரம்பமாகிவிட்டது. இது மனோவிற்குப் பிடிக்கவில்லை. படத்தைத் திருப்பிப்போடும் படி வாதாடினான். சில்வா அதற்கு உடன்படவில்லை. இருவரும் வாய்த்தகராறில் ஈடுபட்டனர். சங்ரப்பிள்ளையார் தலையிட்டு இருவரையும் சமாதானப்படுத்தினார்.

படம் தொடர்ந்து ஓடியது. சில்வா ஆமி கலாவிற்கு பகிடி விடுவதும், சிரிப்பதுமாக இருந்தான். இடைக்கிடைப் பக்கத்தில் இருந்த ஆமியிடம், கலாவைத்தான் கலியாணம் செய்யப் போவதாகக் கூறினான். இதைக் கேட்ட மனோ சில்வாவை கண்ட படி ஏசினான். அவனோ நிறை வெறியில் இருந்தான். அவனும் மனோவை ஏச அது பெரிய வாய்ச்சண்டையாக மாறியது. சங்கரப்பிள்ளையாரால் ஒன்றும் செய்ய முடியிய வில்லை. அவருக்கு இராணுவத்தைப் பகைக்க விருப்ப மில்லை. இதனால் மனோவை இடத்தை விட்டு போகச் சொன்னார். அவனும் சினேகிதரும் வெளியில் வர அவர்கள் பின்னால், சில்வாவும் வந்தான்..

"டேய் நீ கலாவைக்கட்ட நான் விடுகிறது இல்லை" என்றான் சில்வா.

"அதையும் தான் பார்ப்பம்" என்றான் மனோ.

தொடர்ந்து இருவருக்கும் வாய்ச்சண்டை மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளால் இடம் பெற்றது. நிலைமை மோசமாவதைக் கண்ட மனோவின் நண்பர்கள் மனோவை இழுத்துக்கொண்டு றோட்டிற்கு வந்தனர்.

"இரு உனக்கு நல்லபாடம் படிப்பிக்கிறேன்" என முணு முணுத்தபடி, றோட்டில் நடந்தான் மனோ.

"தமிழ் பண்டி என்னட்டே வாலாட்டுறது" என நெருமியபடி தனது வாக்கிடோக்கியை உயிர்ப்பித்தான் சில்வா. பின்பு உள்ளே வந்து வழமைபோல் படம் பார்க்கத் தொடங்கினான் சில்வா. சங்கரப்பிள்ளை குடும்பமும் எதுவிதக் குழப்பமும் இன்றிப் படம் பார்த்துக் கொண்டிருந்தது.

◇ ◇ ◇

இரவு இரண்டு மணிக்கு ஏதோ சத்தம் கேட்டு, விறாந் தையில் இருந்த விளக்கைத் தூண்டிவிட்டுக் காதைக் கூர்மையாக்கினார் அப்பு.

"அடோ நாங்கள் சொன்னால் நீங்கள் கேக்கிறது" இது

**"டேய் மனோ! நீங்கள் ஆமியோட சேர்ந்து படம் பாக் கத்தொடங்கினியளோ அப்பவே தொடக்கம், அம்மணமாய்த்தான் நிக் கிறியள். உது இண்டைக்குத் தான் புதுசு எண்டு நினைக்காதேங்கோ. நீங்கள் நினைச் சீங்களாக்கும், ரீசேட்டும் 'காற்சட்டையும் போட்டால், மானம் வந்திடும் எண்டு,"**

சிங்கள ஆமியின் குரல்.

"சேர்! சேர்! இனிமேல் இல்லை இண்டைக்கு மட்டும் விடுங்கோ சேர்" இது இரண்டு மூன்று இளைஞர்களின் குரல்.

"கதை வேண்டாம் நாங்கள் சொல்லுறபடி செய்..ம். கெதியாய்..."

"சேர், சில்வா கொமாண்டருக்கு எங்களத் தெரியும் சேர்"

"அடோ நாங்கள் சொல்லுற படி செய்! இல்லாட்டி சுட்டுப் போடுவன்"

"இல்லை இல்லை சார் நாங்கள் செய்யுறம் சார்,"

"சரி... சரி" கெதியாய் கழட்டுறது... கையை மேலே உயத்துறது... திரும்பிப்பாராமல் ஓடுறது... தொடர்ந்து சில கெட்ட வார்த்தைகள்.

அவர்கள் ஆடைகள் அற்ற நிலையில் போவதைப் பார்த் தபடி சென்றியில் நின்ற இராணுவம், தனது வாக்கியை எடுத்து, "மாத்தையா நீங்கள் சொன்னபடி செய்திட்டம்" என்றான் சிங்களத்தில். அதைக் கேட்டு அங்கே கெக்கட்ட மிட்ட சில்வாவிடம், "சேர் ஏன் சிரிக்கிறியள்?" என்றார் சங்கரப்பிள்ளை. அந்த மூன்று "பொடியளும் எப்படிப் போறது தெரியுமா?" சொல்லிவிட்டு சிரிப்புடன் படம் பார்த்துக் கொண்டு இருந்தான் சில்வா.

"அப்பு, அப்பு எங்களுக்கு அவசரம், நீங்கள் பாயில் வைச் சிருக்கிற சாரத்தைத்தாங்கோ"

◇ ◇ ◇

அப்பு விளக்கைத்தூக்கி மூவரையும் பார்த்தார். பின் அமைதியாக, "ஏன் உங்களுக்கு சாரம்?" என்றார். "என்ன அப்பு விசர் கேள்வி கேக்கிறியள்? நாங்கள் உடுப்பில்லாமல் நிக்கிறம்" என்றான் மனோ.

"டேய் மனோ, காந்தன், சுதன் நீங்கள் எப்பதான் உடுப்போட நிண்டநியள்?"

அப்பு இண்டைக்கு சில்வா ஆமி எங்களோட படம் முடிஞ்சு வர இல்லை. தெரியாத ஆமி சென்றியில நிண்டு, எங்கட உடுப்புக்களைக் கழத்திப்போட்டு விட்டுட்டான்" இது காந்தன்.

"அப்பு நாங்கள் அம்மணமாய் நிக்கிறம். மானக்கேடு! தாணை சாரத்தைக்" கெஞ்சினான் மனோ.

"டேய் மனோ! நீங்கள் ஆமியோட சேர்ந்து படம் பாக் கத்தொடங்கினியளோ அப்பவே தொடக்கம், அம்மணமாய்த்தான் நிக்கிறியள். உது இண்டைக்குத் தான் புதுசு எண்டு நினைக்காதேங்கோ. நீங்கள் நினைச்சீங்களாக்கும், ரீசேட்டும் காற்சட்டையும் போட்டால், மானம் வந்திடும் எண்டு."

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*அன்புச் சகோதரமே...*

*வணக்கம்!*

*நித்திரை வராமல் தடுக்கும் சத்திராதி மாத்திரைபோல சந்திரிகா ஒரு மாத்திரை குடுத்திருக்கின்றார்.*

*இது ஒரு குழப்பமான விசயம்.*

*நம்மை குழப்புகின்ற விசயமல்ல. இது, சிங்கள மக்களை... அப்பாவிச் சிங்கள மக்களை குழப்புகின்ற விசயம். இன்னும்.. சிறீலங்கா அரசின் மீது அபிப்பிராயம் கொண்டுள்ள அரசுகளைக் குழப்புகின்ற விசயம்.*

*என்னது... என்கிறீர்கள்..?*

*மண்ணைப் பிளந்து.. பண்படுத்திவிட்டு ஒருவன் விதைநெல்லும், உரமும் வாங்கிச் சேர்க்கின்றான் என்றால்...*

*அதன் அர்த்தம் என்ன..? அவன் விதைக்கப்போகின்றான் என்பதுதானே.*

*சரி...*

*கொட்டனும் தடியும் கோடாலிப் பிடியுமாய் ஒருவன் திரிகின்றான் என்றால்...*

*யாரையோ உதைக்கப்போகின்றான் என்பது அர்த்தம்.*

*கத்தி அலவாங்கு... கூரான ஆயுதங்களுடன்... கூடவே மண்வெட்டியும் காவி ஒருவன் அலைகின்றான் என்றால்... யாரையோ கொன்று புதைக்கப்போகின்றான் என்று அர்த்தம். சரிதானே.*

*ஆனால்... சிறீலங்காவின் சனாதிபதி சந்திரிகாவோ... செப்படிவித்தை காட்டுபவர்போல முற்றிலும் மாறுபட்டவர்.*

*இஸ்ரேலில் இருந்து யுத்தக்கப்பல்களை தருவித்திருக்கின்றார். அமெரிக்காவில் இருந்து உலங்குவானூர்திகளை கொள்வனவு செய்கின்றார். இன்னும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய ஆயுதத் தரகர்களுக்கு அழைப்புவிடுக்கின்றார்.*

*கூடவே... படையினருக்கு மேலும் பதினையாயிரம் பேரைத் திரட்டும் முயற்சில் தீவிரமாய் இறங்கவும் செய்கின்றார்.*

*இந்த ஆண்டு யுத்தத்திற்கு கடந்த ஆண்டைவிட பதினொருவீதம் நிதியை அதிகரிக்கவும் செய்கின்றார்.*

*ஆனால்... சந்திரிகா சொல்கின்றார்... சமாதானம் காணப்போகின்றேன் என்று.*

*நிதியமைச்சின் செயலாளரோ... யுத்தச் செலவினங்களை அதிகரித்திருப்பது... சமாதான முன்னெடுப்புக்களைத் தீவிரப்படுத்தவே என்கின்றார். எப்படி இருக்கிறது?*

*சந்திரிகாவின் சமாதானத்துக்கான யுத்தத்தை நன்கு பார்த்தவர்கள் நாம் என்பதால்.. எமக்கு இதுவிடயத்தில் குழப்பம் எதுவும் கிடையாது.*


*ஆனால்... இது விடயம் தெளிவையும் தீவிரத்தையும் நமக்கு தோற்றுவித்திருக்கின்றது.*

*அவர்கள் பாணியில், சமாதானத்தைத் தீவிரப்படுத்த இராணுவச் செலவினத்தை அதிகரித்திருப்பதுபோல, அவர்கள் விரும்பும் சமாதானத்தை அவர்கள் விரும்பும் பாணியில் சந்திக்கவும்... சாதிக்கவும்... நாமும் தயாராகவேண்டாமா...?*

*ஆகவே... நமக்குண்டான பணியும் கடமையும் அதிகரித்திருக்கின்றது.*

*அன்புடன்..*

*ஆசிரியர்.*




(09–ம் பக்கத் தொடர்ச்சி)

## விழுதுகள்...

இப்படியே, கூப்பிட்டால் பின்னால் ஆமி தான் வந்து நிப்பான் என்று கூறினான். அதற்கு அவன் அன்னை, உன்னை இயக்கத்தைவிட்டு வரச்சொல்லி கூப்பிட்டால் நீ வரமாட்டாய் என்று தெரியும். எதற்கும் இரண்டொரு நாள் வந்து விட்டுப் போ என்று கூறினார். இப்படிக் கதைத்துக் கொண்டிருக்கும்போது, மாவீரர்களை மாவீரர் துயிலும் இல்லத்தில் அடக்கம் செய்வது பற்றிய பேச்சு எழுகின்றது. அப்போது என்னம்மா யோசிக்கிறீங்கள்? எரிக்கும் மரபில் வந்த எங்களை எப்படிப் புதைப்பது என்றா? அந்தப் பிரச்சனை உங்களுக்கு வராது, ஏனென்றால் நான் கரும்புலிகள் மாதிரித்தான் சாவேன். ஆம்! காலன் இவன் கூறியபடியே கவனித்துச் சென்றுவிட்டான்.

ஒப்பிரேசன் தண்டமாருதம், என்னும் இராணுவ நட்வடிக்கை மூலம், தெல்லிப் பழைப்பக்கமாக இராணுவம் முன்னேறத் தொடங்கியது. வழமைபோலவே, பாரிய குண்டு வீச்சுக்களுடனும், எறிகணை வீச்சுக்களுடனும், முன்னேறும் இராணுவத்திற்கு, ரி.85 ரக ராங்கி பெரும் துணையாக இருந்தது. இராணுவத்தின் முன்னேற்றம் முறியடிக்கப்படவேண்டுமானால், அந்தத் தாங்கிகள் தகர்க்கப்பட வேண்டும், அல்லது செயலிழக்கப்பட வேண்டும். இவ்வேளை இவனுக்கு அந்தத் தாங்கியைத் தகர்க்கும்படி கட்டளை பிறப்பிக்கப்படுகின்றது.

இவன் தான் தாங்கி எதிர்ப்பிற்குத் தலைமை தாங்கி வந்திருந்தான். அந்தத் தாங்கியைத் தாக்குவது அவ்வளவு இலகுவானதல்ல. தலையைத் தூக்கினால் தலை உனக்குச் சொந்தமல்ல என்றநிலை. சுடு குழல் இன்னும் திரும்பினால், அது இவன் பக்கம், குண்டுமாரி பொழியும் நிலை. கரணம் தப்பினால் மரணம் என்ற சூழ்நிலை. உடனே வில்லில் இருந்து புறப்படும் அம்பு போல், இரையை நோக்கிப் பாயும் வேங்கையைப் போல், எழுந்து ஓடிச் சென்று அந்தத் தாங்கியின் முன் நிலை எடுத்துத் தனது ஆர்.பி.ஜி யின், முதலாவது உந்துகணையைச் செலுத்தினான். குறி இம்மியும் பிசகாமல் தாங்கியில் பட்டு வெடிக்கின்றது. ஆயினும் தாங்கி முற்றாகச் சேதம் அடையவில்லை. உடனே தனது நிலைகளை மாற்றிய வண்ணம், அடுத்தடுத்து இரண்டு உந்துகணைகளையும் செலுத்தி அந்தத் தாங்கியை நிர்மூலமாக்கினான். அத்துடன் இராணுவத்தின் முன்னேற்றம் தடைப்படுகின்றது. இவன் வெற்றி வீரனாக வெளிவருகின்றான். அன்று தளபதிகள் தொடக்கம் சாதாரண போராளிகள் வரை, இவனுடைய பெயர் அடிபடுகின்றது.

மீண்டும் கட்டைக்காடு புல்லா வெளிப் பக்கமாக, ஒபிரேசன் பலவேகய 2 இராணுவ நடவடிக்கை, ஆரம்பிக்கப்படுகின்றது. இராணுவத்தளக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த, இந்த நடவடிக்கை முறியடிக்கப்பட வேண்டியதொன்று. மீண்டும், மணிமாறன் களத்தில் இறங்கினான். ஆனால் களத்தில் குண்டடிபட்டு விழுப்புண்ஏற்று, களத்தில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்படுகின்றான். இரத்தப் பெருக்கு நிறுத்தப்பட்டு, ஓய்வெடுக்கும் படி கூறப்படுகின்றது. ஆனால் இவனோ எனக்கு ஓய்வு தமிழீழம் கிடைத்த பின்னர்தான், என்று கூறி விடாப்பிடியாக நின்று மீண்டும் களம்நோக்கி விரைகிறான்.ஆம் நவீன தாங்கிகளைத் தகர்த்த இவன். 30.05.92 அன்று ஈழ மண்ணிற்கு உரமானான்.கட்டைக்காட்டில் வீசும் காற்றில் கரைந்தான்.

மாவீரர் பட்டியல்லில் இணைந்தான். எம் நெஞ்சமதில் நிலைத்தான். ■

(10–ம் பக்கத் தொடர்ச்சி)

## மானமென்பது...

*"அப்பு வெளியில சொல்லாத வெக்கக் கேடு" இது சுதன்.*

*"இஞ்சை கேள் உங்களுக்கும் வெக்கம் எண்டது தெரியுமோடா? அது, தெரிஞ்சால் இஞ்சை இப்பிடி இருக்கமாட்டியள்."*

*"மனோ! அப்புவோட கதைச்சுக் கொண்டு நிண்டு பிரியோசனமில்லை, சின்னராசாண்ணை வீட்டில சாரம் கேட்பம் வாங்கோடா என அழைத்தான் சுதன்.*

*"உதுகளும் ஒரு சூடு சுரணையில்லாத பிறப்புக்கள் தூ!" என்று துப்பிவிட்டு பாயில் படுத்தார் அப்பு.*

*அவர்கள் நிர்வாணமாய்ப் போய் கொண்டு இருக்கின்றார்கள்.*

◆ ◆ ◆

*மாலை ரியூசன் முடிந்து வந்து கொண்டிருந்த கலாவை இடையில் மறித்தான் மனோ,*

*"கலா, உங்கட வீட்டில படம் போடுறதை நிப்பாட்டுங்கோ" என்றான் மனோ.*

*ஏன் நிப்பாட்ட வேணும்? போட்டால் என்ன? என்று கேட்டாள், கலா.*

*"கலா உங்கட வீட்ட சில்வா ஆமி வாறத நிப்பாட்ட வேணும், படம் போடாமல் விட்டால் அவன் வரமாட்டான். அண்டைக்குத் தெரியும் தானே என்னமாதிரி சண்டை பிடிச்சான்? அவன் உங்கட வீட்ட வாறது நல்லது இல்லை" என்றான் மனோ.*

*"நீங்கள் வாறது மட்டும் நல்லதோ?" எதிர்க் கேள்வி கேட்டாள், கலா.*

*"கலா, விசர் கேள்வி கேட்காதை அண்டைக்கு சில்வா என்னோடை சண்டைபிடிக்க, உங்கட அப்பா கூட பேசாம இருந்திட்டார். என்னை வெளியில போகச் சொன்னவர், அவனுக்குப் பயத்தில ஒண்டும் சொல்லேல்ல. இனி சில்வா உங்கட வீட்டை வரப்பிடாது"*

*"ஏன் அவன் வந்தால் உங்களுக்கு என்ன. விருப்பம் எண்டால் நீங்கள் வந்து படம் பார்க்கலாம்" என்றாள் கலா.*

*"கலா, ஒண்டை மட்டும் தெரிஞ்சுகொள், நான் மானம், ரோசம் உள்ளவன். உங்கட அப்பா வரவேண்டாம் எண்ட இடத்துக்கு, நான் வரமாட்டன்."*

*கலா பெரிதாகச் சிரித்தபடி, "மனோ உங்கட மானம், ரோசம் எந்தளவுக்கு எண்டு எனக்குத் தெரியும். அண்டைக்கு, சென்றியில நடந்தது எனக்கு மட்டுமில்ல, அங்கை இருந்த எல்லாருக்கும் தெரியும். அவன் சில்வா சொன்னவன்."*

*"அது... அது... என்னவெண்டால்"... மனோ தடுமாறினான்.*

*"மனோ மானம் ரோசம் எண்டது வாயால சொல்லுறது இல்லை. செயலில காட்ட வேண்டும். சில்வா முன்னால தலை குனிஞ்சு நிக்கிறதும். அவன்ரை மெண்டிஸ்சுக்காக, அவன் சொல்லுற வேலையைச் செய்யிறதும் மானம் எண்டு நினையாதேயுங்கொ. எனக்கு உங்களப்பற்றி நல்லாத்தெரியும். ஆமியோட சேர்ந்து சென்றியால போற பெண்களுக்கு நக்கல் அடிக்கிறது ரோசம் இல்லை. இண்டைக்கும், சில்வாவைப் படம் பாக்க விடாமல் மறிக்கப்பயம். என்னட்ட படம் போட வேண்டாம் எண்டு சொல்ல வந்திட்டியள், ஏசினாள் கலா.*

*"கலா... நான்... நான்... உன்னை..." ஏதோ சொல்லத் தடுமாறினான் மனோ.*

*மனோ எனக்குத் தெரியும் சில்வா மாதிரித் தான். நீங்களும் என்னைக் கலியாணம் செய்ய நினைக்கிறியள். "ஆனால் இருவரின் நோக்கமும் என்ர உயிர் உள்ளவரை நடக்காது. உங்களப் போல மானம் தற்துணிவு இல்லாதவனைக் கட்டுவன் எண்டு நினைக்காதேயுங்கோ. உங்களப்போன்றவர்களினால் தான் இன்று இச்சிரழிவே. அதுவும் கனகாலம் நீடிக்காது. நான் எப்பவும் தன்மானத்துடன் தான் வாழுவன். உங்களப் போல அடிவருடியாக இல்லை என ஆவேசமாக கூறியபடி நடந்தாள்.*

*அவள் போவதைப் பார்த்தபடி நின்றான் மனோ.* ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காலமறியா காலமதாய்...?

சீலமுடன் நாம் வாழ்ந்த திருவிடத்தை
பேய்களுக்கு வாழக் கொடுத்துவிட்டு
வழிநடந்தோம்
பொன்விளையும் பூமியதை
வந்த பிசாசுகளின் கையளித்து
சாமி எனக்கதறி சந்தியிலே
நின்றழுதோம்
பல்லாயிரம் வருடம் பரம்பரையாய்
நாமிருந்த
அள்ளக் குறையாத அழகிடத்தை
கோயில்மணி மெல்ல வந்து கண்கள்
மலரவைத்த
வாழ்விடத்தை பாதைகளை
நாங்கள் படித்துயர்ந்த பள்ளிகளை
காதலுடன் எங்கள் கையழைந்த
வயல்வெளியை
தாகத்தை நீரள்ளித் தணித்த
கிணறுகளை
வாகனத்தை வீட்டு வளவுகளை
அந்தரித்து ஓடிவந்து உருக
உயிர்காத்த கோயில்களை
கூடிக்குளித்த அம்மன் கோயில்
திருக்குளத்தை
ஆடிவந்து மேனி அணைக்கும்
இளங்காற்றை
வாயெடுத்துப் பாடும் வசந்தக்
குயில்பாட்டை
காய்சிலிர்த்து நின்ற கமுகுகளை
முற்றத்தில் பூச் சொரியும்
மல்லிப்பூமரத்தை
பால் சொரியும் மேய்ச்சல் பசுவை
மெய்வருத்திக் கட்டிய எம் வீட்டை
வளவுக்குள் விழும் நிலவுப் பாலமுதை
பூட்டி எடுக்காத பொக்கிஷத்தை
கைதவற விட்டு விட்டு நாங்கள்
வீதியிலே பெருக்கெடுத்தோம்
பூட்டி எடுக்காத பொக்கிஷம்..........
கொட்டும் மழையினிலே குளித்தபடி
இடம் பெயர்ந்தோம்
ஊர்பிரிந்து எங்கள் உறவுகளை நாம்
பிரிந்து
வேர் பிரிந்து நாங்கள் வீதியிலே
எறியுண்டோம்
போயிருக்க எந்தப் போக்கிடமும் இல்லாது
கால் நடக்கத் தொடங்கியது
கண்கலங்க ஊர்பிரிந்தோம்
பால்நிலவற்ற பாளிருட்டில் நாமிருந்த
தாய்நிலத்தைப் பிரிந்து சந்ததிக்கு
வழிசமைத்தோம்
வீட்டைத்துறந்து வீதிகளை நாம் துறந்து
கூட்டைத் துறந்த குருவியென நாம்
பறந்தோம்
பல்லாண்டு காலம் படர்ந்திருந்த
வாழ்வுதறி
செல்வோராய் நாம் தெருவில்
நடந்தோம் காண்
ஐயோ!... நாம் பட்ட அவலம்
இருக்கிறதே....!
இவ்வையம் எங்கே இதையறியும்
விடுதலைக்குப் போட்ட விதையென்று
புறப்பட்டோம்

தோட்டம் துரவுகளைத்
தொலைத்து விட்டு
தேடிவைத்த தேட்டம் முழுவதையும்
தொலைத்துவிட்டு வெறுங்கையாய்
கண்மணிகள் கலங்கிக் கன்னத்தில்
நீர்விழுத்தச்
செம்மணியில் நின்றோம் சேருமிடம்
தெரியாமல்
நடக்கத் தொடங்கி நடந்தோம்
நடந்தோமே.......! தொடக்கமிது
மிச்சம் சோகத்தின் பெரும் சோகம்
இப்போ இலை சொரியத் தொடங்கிறது
இலுப்பைமரம்
புதிய தளிர்க் கலையுடுத்துநாளை
கன்னிஎழிற் கோலமதாய்
அழகொளிரும் பூக்கும் அதன்பிறகு
காய்க்கும்
பின்பழம் சொரியும்
இப்போ என் படலையிலே உள்ள மரம்
ஆடை அவிழ்த்து உதறி அழகாய்ப்
புதிது உடுக்கும்
கோடைவறுத்தெடுதக்கக் குளிர்விக்கும்
என் முற்றத்தெழுந்த மரம் முறுவலிக்கும்
நான் அந்த அற்புதத்தைக் காண அழியும்
விதியும் என்செய்யும்?
மூக்குத்திப் பூக்கள் மின்னும்
கிளையிருந்து
தூக்கம் கலத்து என்னைத்
தொட்டெழுப்பும் குயிலினத்தின்
மாயக் குரலில் என்ன மந்திரம்தான்
உள்ளதுவோ
தாயாய் எனைத்தழுவி ...தம்பீ...
என மதுரச் சொல்லால் என் காதுச்
சோணையிலே
உரசிச்செல்லும் என்வீட்டுத்
தென்றலுக்காய் ஏங்குகிறேன்
இளனுருவிக்கிடக்கும் என்னை இப்போ
எவர் வந்து தடவியென்ன
என்மேனி ஆறாது
வேண்டும் என் வீட்டு விருட்சம்
அதனடியில் ஆண்டிருந்த அனைத்தும்
அடியேன் பெறவேண்டும்
வண்ணச் சிறகை விரித்து,
வலம் வந்து என் வீட்டு
முற்றத்தில் இறங்கும்
சிறுகுருவிக் குஞ்சே!
என்மடியில் குந்து
உன் சிறகுப் பஞ்சை விரித்து இந்தப்
பாவலனின்
தோள்களிலே வந்தமர்க
எனக்கோர் வரமளித்துச் சிரித்திடுக !
எந்தனுக்கு உந்தன் இறகளிப்பாய்
நான் சென்று ஊர்பார்த்து வந்து
உன்னிடத்தே கையளிப்பேன்
நீர்மேகம் வானில் நின்று பொழிகின்ற
மழைக்காலம் இது
இப்போ என் கவிதை துடித்திருக்கும்
ஆழாத்துயரில் என் அயல் கிடந்து
அந்தரிக்கும்
புத்தூரை நான் பிறந்த பொன்னூரை
பார்க்காமல் எத்தனை நாள் தனியே

இரவில் அழுதிருப்பேன்
காளியம்மன் கோயில் காண்டாமணிச் சத்தம்
கேளாமல்
என் வாழ்வு கிழிந்தல்லோ கிடக்கிறது
இச்சையுடன் முன்னர் இளமையிலே நான்
திரிந்த
பச்சை வயல்களெல்லாம் பாராமல் - ஐயா
என் மிச்ச நாளெல்லாம் முடிந்திடுமா?
நல்லூரைச் சொல்லத் தொடங்கியதும்
தோள்களெல்லாம்
புல்லரித்துக் கொள்கிறதே
இனி அந்தக் கோயிலதன் வீதியிலே
வெள்ளை மணற்பரப்பில்
வீற்றிருப்பதெக்காலம்?
நாலு மணிக்கடிக்கும் நல்லூரின்
மணிச்சத்தம்
ஆளும் திருநகரை அடியேன்
தொழுவதெப்போ?
வட்டமிட்டு சிட்டுக்குருவி உன்சிறகை -
எனக்களித்து
வட்டமிட எனக்கோர் வரமளிப்பாய்
நான் பறந்து சென்று அந்தச் செம்மணியில்
சிறகை மடித்து இறங்கி
என் தங்கை கிருஷாந்தி எங்கே
புதைந்தாளோ அங்கே ஒரு பிடி மண்
அள்ளிடணும் என் பிரிய சிட்டுக்குருவியே
உனக்குத் தெரியுமா ஒரு செய்தி! கிட்டவா
தலை எனக்குக் கிறுகிறுக்கத் தொடங்கிறது
குஞ்சே என் விழிகள் குளமாகிப் போகிறது
நெஞ்சின் அடிவேரில் நெருப்புப் பிறக்கிறது
ஓராயிரம் மாவீரர் உறங்கும் திருவிடத்தின்
வேர் கிளறி உழுது விட்டார்களாம்
ஐயோ!
எம்மானத்துக்கடையாளமான மறவர்கள்
தூபிகளையும்
இடித்துத் துடைத்து முடித்தாராம்
களமாடி வீழ்ந்த கண்மணிகள் உறங்குகின்ற
நிலமுழுது யாரோ பயிர்செய்து முள்ளாராம்
சிட்டுக் குருவி என் தேகம் பதறுகிறது விட்டு
விடுதலையாய் விரிந்த சிறகெனக்குக் கட்டு
வானெழுந்து கண்மணிகள் கல்லறைகள்
நட்ட இடம் மீதினிலே
நான் இருந்து அழவேண்டும்
சொந்தம் பிரிந்து துணை பிரிந்து நாம்
இருந்த
இந்திரனின் ஊரை இழந்துள்ளோம்
இதற்காக அஞ்சி ஒடுங்குவது அழகல்ல
எம் வீட்டுப் பஞ்சுக்கதிரையிலே பகைவன்
படுத்துறங்க விட்டு விட்டு
நாங்கள் வீதியிலே அகதியென கொட்டும்
மழையனிலே குளித்தல் விதியுமல்ல
காலம் அறிந்து களம் அறிந்து
நெஞ்சமதில் மூழும் விடுதலைத் தீ
மூழட்டும்
தமிழ்க் குருதி பொங்கி நரம்புகளில்
பெருகட்டும்
எமையடக்க வந்தவனை எங்கள் வாசலிலே
நாம் புதைப்போம்
முள்ளுக்கும் எம்மூரில் முன்னேறி வருகின்ற
புல்லுக்கும்
நாங்கள் புலியென்று காட்டுவோம்

-புதுவை இரத்தினதுரை-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## தேசத்தின் எழுச்சி நாளில் தேசியத் தலைவர்

**"சிங்கள தேசம் இனவாதப்பிடியில் இருந்து விடுபடாமல் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையை தொடருமானால் நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை."**

-தமிழீழத் தேசியத் தலைவர்

# தமிழீழ தேசிய மாவீரர் நாள்

தமிழ் மண்ணும், தமிழ் இனமும் உணர்வுப் பிளம்பாய் உயிர்த்தெழும் உன்னத நாள்.
எங்கள் தலைவர் என்ன சொல்லப்போகின்றார் என்ற ஆவலில் ஒரு ஆனந்த அவஸ்தையில் ஈழத்தமிழினம் துடிக்க, தமிழீழத் தலைவர் என்ன சொல்லப்போகின்றார் என்று, உலகம் கூர்ந்து எதிர்பார்த்திருந்த பொழுதாய் விரிந்தது மாவீரர்நாள்.

**பல கடற்கரும்புலிகள் வீரகாவியமான கடற்கரைப் பகுதியில், பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட கரும்புலிகள் நினைவாலயத்தில், 27ஆம் திகதி மாலை, 6.07 மணிக்கு, மாவீரர்களை ஒருசேர நினைவுகொள்ளும் அப் புனிதவேளையில், நூற்றிஐம்பத்தெட்டு கரும்புலிகளுடன் இணைந்து, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், அகவணக்கம் செலுத்தி, பிரதான தேசியச் சுடரை ஏற்றிவைத்தார்.**

தமிழீழ தேசிய விடுதலைக்காக, வீரச்சாவடைந்த பதினாறாயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களை நினைவுகொள்ளும் இப் புனிதநாள், தமிழீழத்தில் வாழும் மக்களாலும், தமிழீழத்திற்கு வெளியே வாழும் மக்களாலும் உணர்வு பூர்வமாகவும், எழுச்சியுடனும் கடைப்பிடிக்கப்பட்டது.

வன்னி மண்ணில் இருந்து, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய மாவீரர் நாள் உரையை, உலகப்பரப்பில், பரவி வாழ்ந்து வரும் ஈழத்தமிழினம் ஒரே நேரத்தில் செவிமடுத்தது. உலகத்தின் பல பாகங்களிலும் இயங்கிவரும், தமிழர் வானொலிகள் தொலைக்காட்சிகள், தலைவரின் உரையை, மக்கள் நேரடியாகக் கேட்கும் வண்ணம் ஏற்பாடுகளைச் செய்திருந்தன.

இந்நாளில், தமிழீழத் தேசியத் தலைவர் ஆற்றும் வரலாற்றுப் பேருரையே, தமிழீழ தேச விடுதலைப் போராட்டப் பெருநதியின் போக்கை துல்லியமாகவும் நுட்பமாகவும் வெளிப்படுத்தும் பேருரையாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் இராணுவ இராஜதந்திரச் செயற்பாடுகளின் கனதியை, அது தொடர்பான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் ஆவணமாக அமைகிறது.

தமிழீழப் பிரச்சினையில், சர்வதேச சமூகம் கொண்டுள்ள அக்கறை, ஈடுபாடு, நோர்வேயின் சமாதான முயற்சிகள், சிறீலங்கா அரசின் போர் சமாதானம் பற்றிய இரட்டை நிலைப்பாடுகள், இவற்றிற்கு மத்தியில் தமிழீழத் தேசியத் தலைவர் என்ன சொல்லப் போகின்றார் என்ற ஆவலுடன் உலக சமூகம் அவரது மாவீரர் நாள் உரையை எதிர்பார்த்துக் காத்திருந்தது.

சமாதானம் குறித்தும், போர் குறித்தும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், மிகத் தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றார். ஆக்கிரமிப்பு இராணுவம் அகற்றப்படவேண்டும், அல்லது அகற்றப்படும் என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை தலைவர் அவர்களின் உரை மீள வலியுறுத்துகின்றது.

பேச்சுவார்த்தை முயற்சிக்கோ, பேச்சுவார்த்தைக்கூடான சமாதானத் தீர்வுக்கோ விடுதலைப் புலிகள் எதிரானவர்கள் அல்ல என்பதையும், அம்முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் முட்டுக்கட்டைகள் எதனையும் போடவில்லை என்பதையும் தலைவர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றார்.

சமாதானம் குறித்தும், போர்குறித்தும் பல நாக்குகளில் பேசிவரும் சிங்களப் பேரினவாத அரசின், நுட்பமான பிரச்சாரத்தை தவிடுபொடியாக்கும் வண்ணம், தலைவரின் தெளிவானதும் உறுதியானதுமான பேச்சு, அமைந்திருக்கின்றது. சமாதானமா, யுத்தமா என்பதைத் தீர்மானிக்கவேண்டியவர்கள், தற்போது சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களே. ■

(30.11.2000) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (222)

தேசியத் தலைவரின் மாவீரர்நாள் உரை, களத்தில் பத்திரிகையில் விசேட இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

வாசகர்கள் அதனை ஒரு ஆவணமாகப் பேணும் வண்ணம் சிறு கைநூல் வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

களத்தில்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தலைவரின் உரையும் சிங்களத்தின் நெருக்கடி நிலையும்.

தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர்நாள் உரை, சிங்களத்தைப் பொறுத்தவரை எவ்விதம் பிரதிபலிக்கப்போகின்றது என்பது இன்னமும் சரியாக உணரப்படாத நிலையில், தலைவர் அவர்களின் மாவீரர்நாள் உரையை, சர்வதேச சமூகம் சாதகமாகவே நோக்குகின்றது என்பது பலமட்டக்கங்களில் வெளிப்பட்டிருக்கின்றது.

தலைவர் அவர்கள், சமாதானப் பேச்சுவார்த்தையை, ஆதரிக்கின்றார். சமாதானப் பேச்சுவார்த்தையூடாக நியாமான தீர்வொன்று எட்டப்படுமிடத்து அதனை முழுமனதோடு வரவேற்கக் காத்திருக்கின்றார். விடுதலைப் புலிகள் இயக்கம் எந்தவிதமான முட்டுக்கட்டைகளையும் சமாதான முயற்சிக்குக் குறுக்கே இடவில்லை என வலியுறுத்திய தலைவர் அவர்கள், பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் எந்தவிதமான நிபந்தனைகளையும் விதிக்கவில்லை என மீண்டும் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

அதேநேரத்தில், பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ண புறநிலையும், இயல்புநிலையும் உருவாக்கப்படவேண்டியதன் அவசியத்தை தலைவர் அவர்கள் மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றார்.

இராணுவ அழுத்தத்தையும், பொருளாதார நெருக்கடிகளையும் தமிழ்மக்கள் மீது சுமத்தி, அவர்களை ஒரு இராணுவப்பிடியில் வைத்திருந்தபடி பேச்சுவார்த்தை நடத்தப் பிரியப்படும், சந்திரிகா அரசு, நல்லெண்ண புறநிலை மற்றும் இயல்புநிலை என்பன குறித்து விடுதலைப் புலிகள் வலியுறுத்திவரும் விடயங்களை, பேச்சுவார்த்தைக்கான முன்நிபந்தனையாகவே கொள்கின்றது. நாட்டை போர்ப்பாதைக்கு இட்டு, நாட்டு வளங்களை, போரின் தேவைக்காக பயன்படுத்தி, ஒரு ஆக்கிரமிப்புப் போருக்கு சிங்கள வெகுசனங்களின் ஆதரவைக் கோரிவரும் சந்திரிகா அரசு, தமிழ்மக்கள் மீதான இராணுவ நெருக்குவாரங்கள், அழுத்தங்கள் நீக்கப்படவேண்டும் என்பதை உள்ளடக்கிய இயல்புநிலையை உருவாக்குதல் என்பதை ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்குமா என்பது கேள்விக்குறியே.

அண்மையில் வன்னி சென்று தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்துத் திரும்பிய நோர்வே சிறப்புத் தூதர் திரு. எரிக் சுல்கைம் அவர்கள், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்தனை எதனையும் முன்வைக்கவில்லை என்பதை தெளிவாக எடுத்துரைத்திருந்தார். ஆக, நல்லெண்ண புறநிலை இயல்புநிலை உருவாக்கப்படவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் வலியுறுத்தல்களை, சந்திரிகா அரசு சொல்லிக்கொள்வதுபோல், நிபந்தனைகளாக சர்வதேச சமூகம் வகைப்படுத்தவில்லை என்பது புலனாகின்றது.

யாழ்ப்பாணச் சமரில், ஒரு தலைப்பட்சமாக உலக நாடுகள் குறுக்கிட்டு சிங்களத்திற்கு உதவிகளை வழங்கியதையும், இதனால் யாழ்ப்பாணத்தை மீட்டெடுக்க விடுதலைப் புலிகள் மேற்கொண்ட போரியல் திட்டங்கள் தாமதத்திற்கு உள்ளானது குறித்தும் தெரிவித்ததுடன், சந்திரிகா அம்மையாரின் அபயக் குரலால் ஈர்க்கப்பட்டு, சிங்கள அடக்குமுறையாளர்களுக்கு உதவிக்கு விரைந்த நாடுகளையும் பட்டியலிட்டுள்ளார்.

ஆனால், அவர் ஒன்றை தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றார். **எத்தனை சவால்களுக்கு முகம்கொடுத்தாலும், எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும், எத்தகைய சக்திகள் எதிர்த்து நின்றாலும் எமது விடுதலை இயக்கம் யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்தே தீரும்** என, அவர் அறுதியிட்டுத் தெரிவித்திருப்பது, புற உதவிகளின் துணையுடன் யாழ்ப்பாணத்தை, தமது ஆக்கிரமிப்புப் பிடியில் தக்க வைத்துக்கொள்ளலாம் என, கனவு காணும் சிங்களத்திற்கு மிகப்பெரும் எச்சரிக்கையாக அமைந்திருக்கின்றது.

தமிழர் பூமியில், ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு இடமில்லை என்பதை தலைவர் தனதுரையில், எடுத்துரைத்திருக்கின்றார். **யாழ்ப்பாணம் சிங்கள தேசத்திற்கு உரித்தானதல்ல. யாழ்ப்பாணம் யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது. இறையாண்மை என்பது ஒரு அரசின் தெய்விகச் சொத்துரிமையல்ல. இறையாண்மையானது மக்களிடமிருந்தே பிறக்கின்றது. அது மக்களுக்கே சொந்தமானது. யாழ்ப்பாணத்தின் இறையாண்மை யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது. இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் தமிழரின் வரலாற்று மண்ணில் சிங்களத்தின் இறையாண்மையைத் திணித்துவிட முடியாது. தமிழரின் விடுதலைப் படை என்ற ரீதியில், நாம் எமது மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்பிற்கு இடமளிக்கப்போவதில்லை.**

தலைவரின் இந்தச் செய்தி, ஆக்கிரமிப்பு எண்ணங்கொண்ட சிங்களப் பேரினவாத அரசிற்கும், அதன் தமிழின அடக்குமுறைக்கு, இராணுவ பொருளாதாரத் தீனிபோட்டுவரும் உலக நாடுகளுக்கும் தெளிவான பதிலைத் தந்திருக்கின்றது.

உண்மையில் சிங்களம் சமாதானத்தை விரும்புகின்றதா..? சனாதிபதி, பிரதமமந்திரி, இராணுவத்தளபதி ஆகிய உயர் அதிகார பீடங்களில் இருந்து கிளம்பும் முரண்பாடான குரல்களை தனதுரையில் சுட்டிக்காட்டிய தலைவர் அவர்கள், போரை அவாவியும் சமாதானத்தை வேண்டியும் கிளம்பும் இத்தகைய குரல்கள், வித்தியாசமான பார்வையாளர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கம் கொண்டவை எனக் குறிப்பிடுகின்றார். **போர் பற்றியும், சமாதானம் பற்றியும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பது பற்றியும், இந்த அரசிடம் ஒரு தெளிவான பார்வையும், திடமான அணுகுமுறையும் இருக்கவில்லை** என, தலைவர் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்.

**மேற்குலக நாடுகள் சமாதானத்தை விரும்புகின்றன. சமாதான வழியில் அரசியற் தீர்வு காணப்படுவதை விரும்புகின்றன. போர் மூலமாக தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாதென்பதை வலியுறுத்துகின்றன. எனவேதான், மேற்குலக நாடுகளை திருப்திப்படுத்தும் வகையில் நுட்பமான பிரச்சார அறிக்கைகளை சந்திரிகா வெளியிட்டு வருகின்றார். சமாதானம் என்றும், பேச்சுவார்த்தை என்றும், அதிகாரப் பரவலாக்கல் என்றும், அரசியலமைப்பு என்றும் வார்த்தைப் பிரயோகங்களைக் கையாண்டு, மேற்குலகின் கண்களுக்கு மண்தூவி வருகின்றார்.** என தலைவர் தனதுரையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்த உண்மை நிலையை உணர்ந்துகொண்டு, சமாதானப் பேச்சுவார்த்தை மூலம், தமிழர் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண சந்திரிகா அரசை சர்வதேச சமூகம் நிர்ப்பந்திக்குமா என்பதே தற்போதுள்ள கேள்வி.

உண்மையில், சமாதான வழிமூலமே இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்படவேண்டும் எனவும், அதைத் தவிர வேறு மார்க்கமே இல்லை எனவும் உணர்வதாகத் தெரிவிக்கும், உலக சமூகத்தை நோக்கி ஒரு கருத்தை தலைவர் முன்வைக்கின்றார். **சிங்கள இனவாத ஆட்சியாளரை சமாதானப் பாதைக்கு திருப்பவேண்டுமென்றால், சிங்களத்திற்கு பொருளாதாரத் தீனி போட்டுவரும் உலகநாடுகளிடம் தான் அந்தக் கடிவாளம் இருக்கின்றது.**

அந்தக் கடிவாளத்தைப் பற்றி இழுத்து, யுத்தப் பாதையில் தறிகெட்டு ஓடும் சிங்களப் பேரினவாதத்தை தடுத்துநிறுத்தி, சமாதானப் பாதைக்கு இட்டுவருமா சர்வதேசச் சமூகம் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

**சிங்கள தேசம் இனவாதப்பிடியில் இருந்து விடுபடாமல், தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையை தொடருமானால் நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை.** தலைவர் தனதுரையின் இறுதிப் பகுதியில் இக்கருத்தை முன்வைக்கின்றார்.

**காலமும் வரலாறும் எமது போராட்ட இலட்சியத்திற்கு நியாயம் வழங்கியே தீரும். அப்போது உலகமும் அதனை ஏற்றுக்கொள்ளும்.** மாவீரர் நாளில் தேசியத் தலைவர் மக்களுக்குத் தெரிவித்த உறுதியான நம்பிக்கையிது. ■

# "போராட்டம் நடத்தினால்... இலவசக் கல்வியையும்... மாபொல

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், நவம்பர் 22ஆம் திகதியன்று, யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தியுள்ளனர். யாழ் செய்தியாளர் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்தும், பண்டாரவளை பிந்துநுவேவ படுகொலையைக் கண்டித்தும் இவ் ஆர்ப்பாட்டப் பேரணியை அவர்கள் நடத்தினர். சிங்களத்தின் இறுக்கமான இராணுவப் பிடிக்குள்ளும், அதன் கூலிக்குழுவான ஈ.பி.டி.பி.யின் அராஜகங்கள் கட்டின்றி நிலவிவரும் நிலையிலும், துணிந்து, இம் மாணவர்கள் போராட்டம் நடத்தியிருக்கின்றனர். யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து காலை 10.30 மணியளவில் புறப்பட்டுச் சென்ற மாணவர் ஆர்ப்பாட்டப் பேரணி யாழ் செயலக முன்றலை அடைந்தது. அங்கு, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, மற்றும் ஈ.பி.டி.பி. கூலிக்குழுவின் தலைவர் டக்கிளஸ் தேவானந்தா ஆகியோரின் படங்களை, கொதித்துப்போய் நின்ற மாணவர்கள், தீயிட்டுக் கொழுத்தினர்.

நிமலராஜனைப் படுகொலை செய்த ஈ.பி.டி.பி. கூலிக்குழு, யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறவேண்டும் என்பது மாணவர்களின் கோரிக்கை.

அதேவேளை, பண்டாரவளைப் படுகொலைக்கு சந்திரிகா அரசே முழுப்பொறுப்பும் என குற்றஞ்சாட்டிய மாணவர்கள், சந்திரிகாவின் படத்திற்கு தீயிட்டு எரித்தனர்.

சுமார் இரண்டாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்ட இவ் ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில், மாணவர்கள் முக்கியமான விடயத்தை முன்வைத்தனர். அதாவது, ஆயுதம் கொண்டு அராஜகம் புரிந்தும் மோசடிகள் செய்தும், பாராளுமன்ற உறுப்பினர்களாகியிருக்கும் ஈ.பி.டி.பி.யினர், தமிழ்மக்களின் பிரதிநிதிகள் அல்ல என்பதையும், நிமலராஜனின் படுகொலைக்குப் பொறுப்பான இவ் அராஜகவாதிகள் யாழ்மண்ணைவிட்டு வெளியேறவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

சந்திரிகா அரசுக்கு முண்டு கொடுத்து அதன் அடிவருடித் தொழில் செய்து, வடக்கு புனரமைப்பு அமைச்சராகியிருக்கும் டக்கிளசிடம் அவர்கள் கேட்கின்றார்கள்.. நிமலராஜன் படுகொலையா வடபகுதி புனரமைப்பு என்று.

சிங்கள அரசே, அப்பாவி இளைஞர்களைக் கொல்லாதே!

மக்களை நிம்மதியாக வாழவிடு!

அமைதிக்கான யுத்தம் என்ற போர்வையில், இன அழிப்பு யுத்தத்தை நடத்தாதே!

பல்கலைக்கழக விடுதிக்கும் இராணுவமே நுளையாதே!

சனநாயக விரோதிகளே.. உங்கள் அழுக்குகளை மறைப்பதற்கா பத்திரிகையாளனைக் கொன்றீர்கள்!

இவைகள், உணர்வுப் பிளம்பாய் ஊர்வலம் நடத்திய மாணவர்களின் கோசங்கள். அவர்கள் தாங்கிச் சென்ற பதாகைகளிலும் இதே வாசகங்கள்.


சிங்களத்தினதும், அதன் அடிவருடிகளினதும் கொடுமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தமிழர் தாயகம் முழுவதிலும் வழமையான நிலை தோன்றவேண்டும்

**தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்**

**எந்தவிதமான அமைதிப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளும் வெற்றி பெறுவதற்கு, யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல தமிழர் தாயகம் முழுவதிலும் வழமையான நிலை தோன்றவேண்டும் – அதாவது மக்கள் எந்தவிதமான அச்சங்களோ, பலவந்தங்களோ இல்லாது வாழ வேண்டும். இவ்வாறு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையாளர் உப்பல் யோசப் அவர்களுக்கு 26.11.2000 அன்று அளித்த விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார். அவரது பேட்டியிலிருந்து சில பகுதிகள் வருமாறு.**

கே- யாழ்ப்பாணத்துக்கும் அமைதிக்கும் இடையில் உள்ள தொடர்பு என்ன? பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் யாழப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற கொள்கை நோக்கம் உண்டா? யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடியுமா?

**தமிழ்ச்செல்வன்**: நீங்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடியுமா எனக் கேட்ட கேள்விக்குப் பதிலளிப்பதற்கு முன்னதாக வன்னிப்பெருநிலப் பரப்பினை ஆக்கிரமித்து இருந்த சிறீலங்காப் படையினர்க்கு நேர்ந்த கதி குறித்து உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். எத்தனையோ மாதங்கள் திட்டமிடப்பட்டு அங்கு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் அங்கு இருந்த ஆயிரக்கணக்கான இராணுவத்தினருக்கு என்ன நடந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். சந்திரிகாவோ அல்லது அவருக்கு உதவுபவர்களோ அதனை விளங்கிக் கொள்ளவோ அல்லது விளங்கிக் கொள்வதற்கு விருப்பப்படவோ இல்லை. இதன் விளைவாக இறுதியில் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் தங்கள் உயிர்களை இழந்ததும் உடல் ஊனங்களடைந்ததும் அல்லாமல் சிறீலங்காவின் மக்கள் மேல் பாரிய பொருளாதாரச் சுமைகளும் சுமத்தப்பட்டன. ஆனையிறவு, இயக்கச்சி இராணுவ முகாங்களில் நிலை கொண்டிருந்த ஆயிரக்கணக்ரான இராணுவத்தினருக்கு என்ன நடந்தது என்பதை நான் கூறவேண்டிய அவசியம் இல்லை என நினைக்கின்றேன். அரசியல் நோக்கங்களுக்காக அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் பலிக்கடாக்கள் ஆக்கப்படும் இந்நிலை என்றோ ஒருநாள் முடிவுக்கு வரும் என நான் உறுதியாக எண்ணுகிறேன். இதற்காக சிங்கள மக்கள் யதார்த்தத்தினை உணர்ந்து இந்த அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்து எழவேண்டும். என்ன விலை கொடுத்தும் பதவியை அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்காக அரசாங்கம் மனித இழப்புக்களை அழிவுகளைக் குறித்து அக்கறையற்றவராக இராணுவத்தினரை பொறிக்குள் தள்ளுகின்றனர். சிங்கள மக்கள் இந்த ஆக்கிரமிப்புத் தன்மையான இந்த ஆட்சியினை முடிவுக்குக் கொண்டுவரும் பொழுது அரசாங்கத்தின் தலைமையினை நிச்சயமாக வெறுப்பார்கள். யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலைமைகளை நீங்கள் நன்கு ஆராய்வீர்களாயின் உங்களுடைய கேள்விகளுக்கு நீங்களே பதிலைக் கண்டு கொள்ளலாம்.

கே- வெளிநாடு ஒன்றின் மத்தியத்தம் குறித்து குறிப்பாக நோர்வேயின் மத்தியத்தம் குறித்து உங்கள் கருத்து என்ன?

**தமிழ்ச்செல்வன்**: நீதிக்கும் உண்மைக்கும் துணையாக நிற்க விரும்பும் எந்த முகவர்களதும் அர்த்தமுள்ள தலையீட்டையும் நாங்கள் ஏற்போம். இந்தவகையில் நோர்வேயின் முயற்சிகள் பிரகாசமுள்ளதாக இருப்பதினால் ஆரோக்கியமான ஆலோசனை தொடரும் என நம்புகின்றோம்.

கே- இந்தியாவும் பங்களிக்கும் என எதிர்பார்க்கின்றீர்களா?

**தமிழ்ச்செல்வன்:** தெற்காசியாவில் இந்தியாவுக்கு உள்ள இயல்புநிலையின் அடிப்படையில் தமிழ் மக்கள் அமைதியாகவும் தன்மானத்துடனும் வாழ்வதற்கு நடாத்தும் போராட்டத்திற்கு தார்மீக ஆதரவை வழங்கும் என நாம் நம்புகின்றோம்.

கே- பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை தோன்றுவதற்கு யுத்தநிறுத்தம் அவசியமா?

**தமிழ்ச்செல்வன்**: வன்முறைகள் அற்ற, இராணுவ ஆக்கிரமிப்புக்கள் அற்ற சூழ்நிலை பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை தோன்றுவதற்கான வழிகள் பிறப்பதற்கு முன் நிபந்தனைகளாக உள்ளன. சமாதானத்துக்கான சண்டையை யாரைக் கொண்டு எப்பொழுது எங்கே நடத்துவது என்ற கதை நீக்கப்பட்ட பின்பே அவர்களும் நாங்களும் அமைதியை அடைய முடியும்.

கே- சிலர் சண்டை நிறுத்தம் விடுதலைப் புலிகளுக்குச் சாதகமாக அமையும் என்கிறார்களே அதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

**தமிழ்ச்செல்வன்:** யுத்தம் நிறுத்தப்படுவதனால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சாதகமா பாதகமா என்று சிந்திந்து அரசியலுக்காக செயற்படுவதைவிட நாட்டின் மேல் இன்றுள்ள சுமைகளுக்கு அது எவ்விதம் அமையும் என சிந்தித்து நாட்டின் நன்மை குறித்து செயற்படல் வேண்டும்.

கே- உங்களுடைய அமைப்பு சண்டைக்கு நடுவில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடர இணங்குமா?

**தமிழ்ச்செல்வன்**: யுத்தம் நிறுத்தப்பட்டு மக்கள் மீதான பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டு மக்கள் அமைதியான மனோநிலை உள்ளவர்களாக மாறினால் மட்டுமே பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமானதாக அமையும்.

கே- வெளிநாடு ஒன்றில் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு இணங்குவீர்களா?

**தமிழ்ச்செல்வன்**: வெளிநாடு ஒன்றில் பேச்சுவார்த்தை நடைபெறுவதனால் உண்மையாகவே அமைதி ஏற்படுமானால் அதனை ஏற்றுக்கொள்ள எமது தலைமை ஆயத்தமாகவே இருக்கும்.

கே- இரண்டு சிங்களக் கட்சிகளுக்கு இடையிலும் அமைதியை அடைவது குறித்து இணக்கப்பாடு ஒன்று தேவையா?

**தமிழ்ச்செல்வன்**: இரண்டு சிங்களக் கட்சிகளுமே தமிழர்களுக்கு எதிரான சிந்தனைகளையும் இராணுவ வாதத்தையும் விடுத்து நீதியின் அடிப்படையில் அமைதியைத் தேடக்கூடிய மனதினை உருவாக்கிக் கொள்வது அமைதிப் பேச்சுவார்த்தை வெற்றிபெற அவசியமானது.

கே- பிந்துநுவேவ சம்பவங்கள் குறித்து ஏதாவது கூற விரும்புகின்றீர்களா?

**தமிழ்ச்செல்வன்**: இந்த அரசாங்கத்தின் இனஅழிப்பு செயற்திட்டங்களில் இதுவும் ஒன்று. நாகரீக உலகும் மனித வர்க்கமும் தமிழர்களுக்கு எதிரான கலாச்சாரம் எவ்வாறு தூவப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறது என்பதனை இதன் மூலம் தெரிந்து கொண்டுள்ளது. இந்தச் சம்பவம் மனிதவர்க்கத்தின் வரலாற்றில் மாறாத வடு ஒன்றை ஏற்படுத்தியுள்ள அதே வேளை எங்கள் மக்களுடைய மனதிலே ஆற்றமுடியாத வேதனையை தந்துள்ளது.

கே- எங்களுடைய ஜனாதிபதி அவருடைய உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் உண்மையில் கைதி போல் உள்ளார். உங்களுடைய தலைவரும் அவ்வாறே உள்ளார். இவர்கள் இருவருமே ஒவ்வொருவருக்கும் எதிரான படையினரால் ஆபத்தினை எதிர்நோக்குகின்ற நிலையில் எப்படி எங்களுடைய ஜனாதிபதியும் உங்களுடைய தலைவரும் ஒரே மேசையில் உட்கார்ந்து மற்றவர்களுடைய உயிர்களை பாதுகாப்பது குறித்துப் பேச முடியும்?

**தமிழ்ச்செல்வன்**: உங்களுடைய ஜனாதிபதி அலரி மாளிகையில் சிறைப்பட்டுள்ளாரா அல்லது தன்னுடைய மனப்பயத்தில் சிறைப்பட்டுத் தவிக்கின்றாரா என்பது தெரியவில்லை. ஆனால் எங்கள் தலைவரோ மக்களுடனும் விடுதலைப் போராளிகளுடனும் சுதந்திரமாக வாழ்கின்றார். அவர் விடுதலைப் போராட்டத்தையும் போராளிகளையும் வெற்றிகரமான முறைகளில் தலைமை தாங்கி நடாத்திச் சென்று மக்களுடைய விடுதலைக்கு பாதை சமைத்து வருகின்றார். எங்களுடைய தலைவருக்கு சிறீலங்கா ஜனாதிபதிக்கு இருப்பது போல எல்லா வசதிகளும் படைத்த ஆடம்பர மாளிகை இல்லை என்பது உண்மை தான். அதனால் அவர் சிறையில் வாழ்கின்றார் என்று பொருளில்லை. எங்களது சமீபத்திய பெரு வெற்றிகள் அரசியல் செயற்பாடுகள் எல்லாமே அவரின் தனிப்பட்ட தலைமையின் கீழேயே எய்தப்பட்டன. இவை பற்றிய முழு விபரங்களையும் நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை என்பது ஆச்சரியத்தைத் தருகிறது. நான் நினைக்கின்றேன் சிறீலங்காவும் எங்கள் தலைவரும் உட்கார்ந்து பேசும் அந்த நாள்தான் சிங்கள தேசியத்தவர்க்கும் தமிழ்த் தேசியத்தவர்களுக்கும் மிக்க மகிழ்ச்சியை அளிக்கும் நாளாக அமையும். இது அடக்குமுறையாளர்கள் தங்களது அடக்குமுறை தவறு என்று உணர்கின்ற பொழுது சாத்தியமாகக்கூடிய ஒன்றே.

கே- வேறு ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களா?

**தமிழ்ச்செல்வன்**: வடக்கு கிழக்கின் மனித உரிமை மீறல்களை வெளியுலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டி வந்த யாழ்ப்பாணப் பத்திரிகையாளரின் படுகொலையும் மட்டக்களப்பு மக்களால் நேசிக்கப்பட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரின் படுகொலையும் அரசாங்கத்தின் ஆதரவென்னும் திரைமறைவில் பயங்கரவாதத் தடைச்சட்டங்கள் மற்றும் பல கொடூரமான சட்டங்களின் கீழ் ஆயுதக்கும்பல்களால் நடாத்தப்பெற்று வருகிறது. ●

## புலமைப் பரிசிலையும் இழக்கவேண்டிவரும்"

தாங்காது கொதித்துப் போய், பல்கலைக்கழகத்தில் இருந்து புறப்பட்டு, ஆர்ப்பாட்டப் பேரணி நடத்திய மாணவர்கள், அந்த இராணுவப் பிடிக்குள் இருந்தபடி, இன்னொரு செய்தியையும் சிங்களத்திற்குத் தெரிவித்தனர்.

வன்முறைகள் தொடருமானால்... அனைவரும் ஆயுதம் ஏந்தவேண்டிவரும்!! மாணவர்களும் மாணவிகளும்... அடிக்கடி உச்சரித்த கோசம் இதுதான். மாணவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணியால் ஈர்க்கப்பட்டு, வீதியோரம் அசைந்துசென்ற மக்கள் திரளையும் இந்தக் கோசமே அதிகம் கவர்ந்தது.

மாணவர்களின் இந்த அமைதிவழிப் போராட்டத்தால் சந்திரிகா அரசோ, அதன் கூலிக்குழுவான ஈ.பி.டி.பி.யோ கலவரப்பட்டதாகத் தெரியவில்லை.

இதுகுறித்து, டக்ளஸ் தேவானந்தா என்ன சொல்கின்றார்..?

ஒரு பத்திரிகையாளர் டக்ளஸ் தேவானந்தாவை தொடர்புகொண்டு கேட்டார்.. யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் எல்லாம் உங்களை யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறுமாறு போராட்டம் நடத்தியுள்ளனர். நீங்களே, நிமலராஜனின் படுகொலைக்கு பொறுப்பு என்று குற்றஞ்சாட்டுகின்றனர். சனாதிபதியினதும் அமைச்சரான உங்களதும் படங்களை அவர்கள் தீயிட்டுக் கொழுத்தியுமுள்ளனரே.. நீங்கள் இதற்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்..?

சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் அடிவருடிகளாக இருந்து, இனவிரோதச் செயல்களைப் புரிந்து, தற்போது சிங்களப் பாராளுமன்றத்தில் அமைச்சராகவும் ஆகியிருக்கும் டக்ளஸ் தேவானந்தாவுக்கு.. இதுவிடயம் உறைத்ததாகத் தெரியவில்லை. தனக்கே உரித்தான எஜமான விசுவாவ உணர்வுடன் அவர் நிதானமாகப் பதிலளித்தார். அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினால்... அவர்கள் இலவசக் கல்வியையும், மகாபொல புலமைப் பரிசிலையும் இழக்கவேண்டிவரும் என்று எச்சரித்தார். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மற்றுமொரு ஆயுத தளபாட கொள்வனவிற்கு சிறீலங்கா ஆயுதப்படை தயாராகின்றது!

சிறீலங்காக் கடற்படையினதும், விமானப்படையினதும் கேந்திர ஆயுதங்கள் புலிகளின் அண்மையத் தாக்குதல்களினால் கேள்விக்குள்ளாக்கப்பட்டுவிட்டன. ஆகையினால், புதிய ஆயுதங்களைத் தேடிக்கொள்வதில் இவ்விரு ஆயுதப்படைப் பிரிவும் தீவிரமாக முயற்சித்து வருகின்றன. இதன் அடிப்படையிலேயே சிறீலங்காவின் கடற்படை, விமானப்படைத் தளபதிகளின் அண்டை நாட்டு விஜயங்கள் நோக்கத்தக்கது.

சிறீலங்காவின் இரு படைத்தளபதிகள் இம்மாதத் தொடக்கத்தில் உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டு சென்று வந்துள்ளனர். கடற்படைத் தளபதியான வைஸ்அட்மிரல் சிசில்திசேரா, விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் ஜெயலத் ஜெயக்கொடி ஆகியோர் முறையே இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் விஜயங்களை மேற்கொண்டனர்.

ஆனையிறவுப் படைத்தளத்தின் வீழ்ச்சியின் பின்னர் சிறீலங்கா ஆட்சித்தலைவர்களும், படைத்தளபதிகள், அதிகாரிகள் ஆகியோரும் இராணுவ உதவி கோரியும், ஆயுத தளபாடக் கொள்வனவிற்கெனவும் வெளிநாடுகளுக்கு விஜயங்களை மேற்கொள்வது சாதாரண விடயமே ஆகும். ஆயினும், இவ்விரு படைத்தளபதிகள் அண்மையில் மேற்கொண்ட விஜயங்கள் ஆனையிறவுப் படைத்தள வீழ்ச்சியின் பின்னர், அதாவது, தற்போதைய கள நிலையில் தோன்றிய மாற்றங்களின் விளைவு என்றே மதிப்பிடப்படுகின்றது.

சிறீலங்கா அரசின் முப்படைகளும் பல ரக நவீன ஆயுததளபாடங்களைக் கொண்டவையாக இருப்பினும், சில ஆயுததளபாடங்களையே தமது முக்கியத்துவம் மிக்க ஆயுதங்களாகக் கொண்டுள்ளன. சில வேளைகளில் இவ் ஆயுதங்கள் ஒன்றிற்கு மேற்பட்டவையாகவும்கூட இருக்கலாம்.

இந்தவகையில், சிறீலங்கா இராணுவம் டாங்கிகளையும், ஆட்லறிகளையும் பலகுழல் எறிகணை செலுத்திகளையும் கொண்டுள்ள அதேவேளை, விமானப்படையோ, எம்.ஐ.24 ரகத் தாக்குதல் உலங்குவானூர்திகளையும், மிக் 27 ரகத்தாக்குதல் விமானங்களையும், கடற்படை டோறா பீரங்கி கலங்களையும் ஆழ்கடல்ரோந்துப் பீரங்கிக் கப்பல்களும் கொண்டவையாக உள்ளன.

சிறீலங்கா விமானப்படையிடம் கிபீர், மற்றும் மிக் 27 ரக தாக்குதல் விமானங்களும் முக்கியமானவையாக பயன்பாட்டில் இருப்பினும் அவற்றைவிட எம்.ஐ. 24 ரக உலங்குவானூர்திகளே முக்கியத்துவம் மிக்க ஆயுத தளவாடம் என்ற அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டுள்ளதெனலாம். அதாவது, களமுனையின் தேவைகளையும், ஆயுததளபாடத்தின் பயன்பாட்டைப் பொறுத்ததாகவே ஆயுததளவாடத்தின் முதன்மை அமையவல்லதாகும்.

எம்.ஐ.24 ரக தாக்குதல் வானூர்திகள் களமுனையில் தரைச்சண்டையில் ஈடுபடும் துருப்புக்களுக்கு மிகுந்த உறுதுணையாகச் செயற்படத்தக்கதொரு உலங்குவானூர்தியாகும். குறைந்தளவு உயரத்தில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நின்று மிகத் தொலைவிலுள்ள எதிரியின் இலக்குகளைத் தாக்கி அழிக்கும் வலுக்கொண்டதாகும். சுருக்கமாகக் கூறுவதானால் மிகவும் பாதுகாப்பான பகுதியில் நின்றுகொண்டு மிக வேகமாகத் தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடிய உயர் சூட்டுவலுவைக்கொண்டதாகும்.

அத்தோடு, ஒன்றிற்கு மேற்பட்ட இவ்வகை உலங்குவானூர்திகள் பல முனைகளில் தாக்குதல்களில் ஈடுபடும்போது, எதிர்த்தரப்பு பலத்த நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிய நிலை தவிர்க்க இயலாது ஏற்படவும்கூடும். மிக வேகமாகத் தாக்குதல் நடத்த வல்லது என்ற ரீதியில் ஊடுருவித்தாக்குதல், அதிரடித்தாக்குதல் என்பனவற்றிற்கும் பயன்படுத்தக்கூடியதாகும். பொதுவாகவே, 'பறக்கும் டாங்கி' என அழைக்கப்படும் இவ் உலங்குவானூர்திகள் ஆப்கானிஸ்தான் சோவியத் ஆக்கிரமிப்பில் இருந்தபோது ஆப்கான் கெரில்லாக்களுக்கு எதிராகப் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. இவ் உலங்குவானூர்தி புரிந்த அனர்த்தங்களினால் ஆப்கான் கெரில்லாக்களினால் 'பேயின் தேர்' என இது அழைக்கப்பட்டது.

இவ்வாறான இவ் எம்.ஐ.24 ரக உலங்குவானூர்திகள் சிறீலங்கா ஆயுதப்படையின் மன எழுச்சிக்கு அடிப்படையான போர் ஆயுதங்களில் ஒன்றாக இருந்ததொன்றும் ஆச்சரியமில்லை. ஆனால், இந்த உலங்குவானூர்திகள் பல அண்மைக்காலத்தில் வடக்கு-கிழக்குப் போர்முனையில் இழக்கப்பட்டமையானது, சிறீலங்கா ஆயுதப்படை வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியையும், குழப்பத்தையும் ஏற்படுத்துபவையாக மாறியுள்ளது.

அதிலும், கடந்த மாதம் 29ஆம் திகதியும், 23ஆம் திகதியும் என ஐந்து நாட்கள் இடைவெளிக்குள் இரண்டு எம்.ஐ. 24 ரக உலங்குவானூர்திகள் விடுதலைப் புலிகளினால் சுட்டுவீழ்த்தப்பட்டமையானது, சிறீலங்கா விமானப்படை வட்டாரத்தில் பெரும் குழப்பத்தை விளைவிக்கத்தக்கதாக மாறியுள்ளது. அதாவது, எம்.ஐ. 24 ரக உலங்குவானூர்திகளின் கேந்திர முதன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளதெனலாம்.


கொழும்பு வந்திருந்த இந்திய விமானப்படைத் தளபதியை வரவேற்கும் சிறீலங்கா இராணுவத் தளபதி.

இதனைத்தவிர, இவ்வுலங்குவானூர்திகள் எவ்வகையிலான ஆயுதங்களினால் சுட்டு வீழ்த்தப்பட்டன என்பது குறித்தும் படைவட்டாரங்களினால் உறுதிசெய்யமுடியவில்லை. படை வட்டாரங்களில் ஒரு தரப்பினர் நவீன ஏவுகணைச் சாதனங்களைக்கொண்டு சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் எனக்கருதும் அதே வேளை, ஒரு தரப்பினர் ராடர் மூலம் வழி நடத்தப்படும் பீரங்கியால் சுடப்பட்டிருக்கலாம் என்வும் கருதுகின்றனர்.

நாகர்கோவில் பகுதியில் 19ஆம் திகதி சுட்டுவீழ்த்தப்பட்ட உலங்குவானூர்தியில் இருந்து உயிர்தப்பிய விமானி, தனது உலங்குவானூர்தியானது, கனரக சுடுகலன் ஒன்றினால் மூன்று தடவைகள் சுடப்பட்டதாகவும், இத் தாக்குதலானது பெரும்பாலும் ராடர் மூலம் வழிநடத்தப்படும் விமான எதிர்ப்புப் பீரங்கியால் மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்தார். இதேசமயம், திருமலையில் சுடப்பட்ட உலங்குவானூர்தியைத் தவிர மற்றொரு உலங்குவானூர்தி ஏவுகணைத்தாக்குதலுக்கு உள்ளானதாகவும் விமானியின் துரித செயற்பாட்டால் உலங்குவானூர்தி தப்பியதாகவும், சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவ்வாறாகப் படை வட்டாரங்கள் உலங்குவானூர்திகள் எவ்வாறு சுடப்பட்டன என்பது குறித்துச் சரியான தகவல்களைக் கண்டறியமுடியாத நிலையிலேயே உள்ளன.

எது எவ்வாறு இருப்பினும் அண்மைக் காலத்தில் சிறீலங்கா வான்படையின் முதுகெலும்பு போன்றுள்ள எம்.ஐ. 24 ரக உலங்குவானூர்தியின் நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதே யதார்த்தமாய் உள்ளது. இது இவ்ரக உலங்குவானூர்திகளை களமுனையில் பெரியளவில் நம்பியுள்ள சிறீலங்கா இராணுவத்திற்கு பெரும் மனச்சோர்வைக் கொடுக்கும் தகவலாகவே இருக்கும்.

இது ஒருபுறம் இருக்க சிறீலங்கா கடற்படையின் கேந்திர ஆயுதம் என்ற முதன்மையைப் பெற்றுள்ள 'அதிவேக டோறா' பீரங்கிக் கலங்கள் அண்மைக் காலத்தில் கடற்புலிகளுடனான மோதல்களில் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளன. அது சந்தித்துள்ள இழப்புக்குறித்து ஒரு பெரும்பட்டியலே இடலாம்.

இவ்டோறா பீரங்கிக்கலங்கள், கேந்திர ஆயுதம் என்ற முக்கியத்துவம் பெறுவதற்கு அதன் பலநோக்குத் தேவையும், ஆற்றலும் அடிப்படையாகவுள்ளது. சிறீலங்கா கடற்படையைப் பொறுத்து கரையோர ரோந்து நடவடிக்கை தொடர் அணிகளுக்கான் பாதுகாப்பு, களமுனைத் தாக்குதல் எனப் பல்வேறு நோக்கில் டோறா பீரங்கிக்கலம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறீலங்கா கடற்படை ஆழ்கடல் ரோந்திற்கெனப் பீரங்கிக் கப்பல்களை வைத்துள்ளபோதிலும், டோறாப் பீரங்கிக் கலங்களே சேவையில் முக்கியத்துவம் பெறுவதற்குப் பலகாரணிகள் உண்டு, குறிப்பாக அதன் வேகம், அதன் உயர்சூட்டுவலு என்பன முக்கியத்துவம் பெற்றவையாகவுள்ளன.

பொதுவில் 40-45 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடிய டோறாப் பீரங்கிக்கலங்கள் வேகமாகத் திரும்பவும், சண்டையிடவும் கூடியவை ஆகும். இவை சிறிய வேகம்கூடிய படகுகளையும், சிறிய சண்டைக்கலங்களையும் கொண்ட கடற்புலிகளுடனான சண்டைக்கு ஏற்றதாகவே கருதப்பட்டு வந்தன.

ஆனால், இவ்வருடத்தில் டோறாப் பீரங்கிக்கலங்கள் பல கடற்புலிகளின் தாக்குதல்களில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. அத்தோடு, இத்தாக்குதல்கள் ஒரே வகைப்பட்டவையாகவும் இருக்கவில்லை. ஒக்டோபர் 23ம் திகதி திருமலைத் துறைமுகத்தில் கரும்புலித் தாக்குதல் மூலம் ஒரு டோரா மூழ்கடிக்கப்பட்டது. யூன் மாதம் ஐந்தாம் திகதி முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இருடோறாக்கள் மூழ்கடிக்கப்பட்டு இரு டோறாக்கள் சேதப்பட்ட தாக்குதலானது நேரடி மோதலின்போது நிகழ்ந்ததாகும். இதேசமயம் ஏப்ரல் மாதம் ஏழாம் திகதி வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட இரண்டு டோறாக்கள் எவ்வகையான ஆயுதத்தால் தாக்கி அழிக்கப்பட்டது என்பதை இன்னமும் உறுதிசெய்யமுடியாத நிலையிலேயே சிறீலங்காக் கடற்படைத்தரப்பு உள்ளது.

இந்நிலையில் கடந்த மாத இறுதியிலும், இம்மாதத் தொடக்கத்திலுமாக கடற்புலிகள் திருமலைத் துறைமுகத்தினுள் மேற்கொண்ட கரும்புலித் தாக்குதல்கள் சிறீலங்காப்படை வட்டாரத்தில் பல அதிர்ச்சியையும், குழப்பத்தையும் ஏற்படுத்துபவையாகவே அமைந்திருந்தன. ஏனெனில் திருமலைத் துறைமுகத்தின் பாதுகாப்பு என்பதையும் யாழ். குடாநாட்டிலுள்ள இராணுவத்தினரின் கடல்வழி விநியோகம் என்பதையும் இத்தாக்குதல்கள் கேள்விக்குள்ளாக்கியிருந்தன.

இந்தவகையில் பார்க்கையில் கடந்த சில மாதங்களில் யுத்தகளமுனையில் பெரிய மாற்றங்கள் எவையும் ஏற்படாதபோதும், சிறீலங்கா ஆயுதப்படையின் இருபிரிவுகளின் கேந்திர ஆயுதங்களின் நம்பகத்தன்மையை புலிகள் கேள்விக்குரியனவாக்கிவிட்டனர் என்றே கூறலாம். இதன் மூலம் சிறீலங்கா அரசு தமது போர்த் தளவாடங்களில் கொண்டிருந்த நம்பிக்கையைச் சிதைத்தனர் எனலாம்.

இவ்வாறானதொரு நிலையிலேயே சிறீலங்காக் கடற்படையும், விமானப்படையும் தமது தேவைக்கென மற்றுமொரு கேந்திர ஆயுததளவாடங்களைத் தேடவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன எனலாம். இந்தவகையில் சிறீலங்காக் கடற்படை ஏவுகணைகள் பொருத்தப்பட்ட பீரங்கிக்கப்பல்களையும் அதனுடன்கூடிய விமானப்படைப் பிரிவொன்றையும் உருவாக்குவதில் தீவிரமாக இறங்கியுள்ளது.

இதேவேளை, சிறீலங்கா விமானப்படையோ புதியரக உலங்குவானூர்திகளையும், விமானங்களையும் தேடும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளது. இவற்றிற்கான முன்னோடி நடவடிக்கையாகவே விமானப்படைத் தளபதியின் பாகிஸ்தான் விஜயமும் கடற்படைத்தளபதியின் இந்திய விஜயமும் பார்க்கப்பட வேண்டியுள்ளது.

அதாவது, சிறீலங்கா இராணுவம் ஆனையிறவுப் படைத்தளம் வீழ்ச்சி கண்டபோது ஏற்கனவே கேந்திர ஆயுதங்களாக இருந்த டாங்கிகள், ஆட்லறிகள் என்பனவற்றிற்கு மேலாகப் பல்குழல் எறிகணைச் செலுத்திகளையும் சேர்த்துக்கொண்டது.

இதை ஒத்ததொரு நிலையிலேயே தற்பொழுது சிறீலங்காவின் விமானப்படையும், கடற்படையும் உள்ளன. அண்மையில் விமானப்படையில் இணைத்துக்கொண்ட மிக் 27 ரகத் தாக்குதல் விமானங்களும், கடற்படையில் இணைத்துக் கொண்டுள்ள இஸ்ரேலிய, இந்திய ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களும் புதிய வரவாகவும் நவீன தளபாடங்களாகப் பார்க்கப்பட்டினும் களமுனையில் எம்.ஐ.24 இனதும் டோறா பீரங்கிக்கலங்களினதும் பயன்பாட்டை ஒத்தவையாகப் பல நோக்குடையவையாக அவற்றால் செயற்படமுடியாது என்றே கருதப்படுகின்றது.

இந்நிலையில் இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள சிறீலங்காக் கடற்படைத் தளபதி இந்தியாவின் ஒத்துழைப்பு அனுசரணை என்பனவற்றை பெற்றுக்கொள்ளத் தவறாது விளைவார் என்றே எதிர்பார்க்கலாம். ஆயினும், அவர் பெற்றுக்கொண்ட உதவிகள் ஒத்தாசைகள் குறித்து எதுவும் தெரியவரவில்லை. கடற்படையின் விமானப்படைப் பிரிவுக்கு பயிற்சி அளிக்க இந்தியக் கடற்படை இணக்கம் தெரிவித்துள்ளது.

இதனைத்தவிர இந்திய அரசு வேறுசில உதவிகளை அளித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் ஆனையிறவு வீழ்ச்சி கண்டபோது சிறீலங்காவிற்கு ஆயுத உதவிகள் செய்யப்போவதில்லை என இந்தியா கூறியிருப்பினும், தற்போதைய நிலையிலும் அதே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதா என்பது கேள்விக்குரியதாகியுள்ளது. ஏனெனில் சிறீலங்காக் கடற்படைக்கு இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை விற்பனை செய்ய இந்தியா ஏற்கனவே முன்வந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இதேசமயம், பாகிஸ்தான் சென்றுள்ள விமானப்படைத் தளபதி, பாகிஸ்தான் தனது பூரண ஆதரவையும் தன்னாலான உதவிகளையும் வழங்கும் என்றே எதிர்பார்க்கலாம். ஏற்கனவே சிறீலங்கா விமானப்படை விமான ஓட்டிகளாக பாகிஸ்தான் விமானிகள் செயற்பட்டு வருகின்றனர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. ஆனால், பாகிஸ்தான் சிறீலங்கா இராணுவத்திற்கு வழங்கிய பல்குழல் எறிகணை செலுத்திகள் போன்று விமானப்படைக்குத் தேவையான கேந்திர ஆயுதங்களை வழங்கக்கூடிய நிலையில் பாகிஸ்தான் உள்ளதா என்பது கேள்விக்குரியதே.

ஆனால், எது எவ்வாறு இருப்பினும், சிறீலங்காக் கடற்படை, விமானப்படைத் தளபதிகளின் அண்டை நாடுகளுக்கான விஜயங்கள், சிறீலங்கா ஆயுதப்படையினரின் அடுத்த கட்ட பெரும் ஆயுதக்கொள்வனவிற்கானதும், கேந்திர ஆயுதத்தேடலுக்குமான முன்னோடிப் பயணங்கள் எனக்கூறுதல் தவறானதாக இருக்கமாட்டாது. இப்பயணங்கள் மூலம் தமது தேவைகளைக் கோரிக்கைகளாக முன்வைக்கும் இவர்கள், கிடைத்தவைபோக ஏனையவற்றிற்காக உலகின் ஏனைய பகுதிகளில் உள்ள மற்றைய நண்பர்களையும், வியாபாரிகளையும் விரைவில் நாடிச்செல்லக்கூடும்.

**-ஜெயராஜ்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைக் கனல் மூண்டது

# அது தமிழீழ ஒளியானது

மானிடத்தின் உயிர்ப்பு ஒரு மனிதனின் பிறப்பு. அவன் மானிடத்தை உயர்த்தும் பொழுது அவன் தனிமனிதன் என்ற நிலை மாறி தான் வாழும் இனத்தின் - தேசத்தின் மண்ணோடு - மக்களோடு ஒன்றாகி தன் வரலாற்றைத் தன் தேசத்தின் - மக்களின் வரலாறாக மாற்றிக் கொள்கின்றான். அவனைப் பெற்றெடுத்த தேசமும் புதிய வரலாற்றைப் படைக்கும் ஆற்றலை - வல்லமையை பெற்று எழுகின்றது.

இதனால் தனிமனித வரலாறு தேச வரலாறாகவும் தேசவரலாறு தனிமனித வரலாறாகவும் ஒத்தியைபு கொள்கின்றன. இந்தத் தன்மையின் இன்றைய சமகாலத் தரிசனமாக, தமிழீழ மண்ணிலே 26.11.1954 இலே வல்வெட்டித்துறை திருவேங்கடம் வேலுப்பிள்ளை - பார்வதி தம்பதிகளின் நான்காவது பிள்ளையாகப் பிறந்த பிரபாகரனை 1976 வைகாசி 5ஆம் நாள் முதல் தமிழீழத் தேசத்தின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளின் நிறுவனராகவும், தலைவராகவும் தமிழீழ தேசத்தின் புதிய வரலாற்றின் நெறியாளராகவும் உலகு இனங்கண்டு வருகிறது.

இன்றைய உலகில் பிரபாகரன் என்ற ஆறு எழுத்து எந்த வகையிலும் ஒரு தனி மனிதத்துவத்தைக் குறிக்கவில்லை. தமிழீழம் என்ற தமிழர் வரலாற்றுத் தாயகமொன்றின் தலைமையை, தனித்துவத்தை, தன்னிகரில்லா உறுதியை, விடுதலைப் பெருங்கனலைக் குறித்து நிற்கின்றது.

பிரபாகரன் என்ற வடிவில் மூண்டு எழுந்து நிற்கும் விடுதலைக் கனல் தமிழீழத்தின் ஒளியாகி அதனை உலகிற்கு இது தான் தமிழர்களின் ஆதித்தாயகங்களில் ஒன்று எனக் காட்டி நிற்கின்றது.

காலனித்துவமும் அதனால் தோற்றுவிக்கப்பட்ட நவகாலனித்துவமான சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களும் உருவாக்கிய ஆட்சி வடிவங்கள் என்ற குப்பை கூழங்களை பிரபாகரன் என்ற விடுதலைப் பெருங்கனல் எரித்துப் பொசுக்கியதால் அந்த ஆட்சி வடிவங்கள் என்ற குப்பை கூழங்களிலே மூடுண்டு போயிருந்த தமிழீழத் தேசம் இன்று உலகிற்குத் தெளிவாகத் தெரிகின்றது.

இன்று தமிழீழ மக்கள் தமிழீழத்திலே வாழ்கின்றார்கள். இது கற்பனை அல்ல யதார்த்த உண்மை. ஒப்பனை அல்ல ஒப்பிலாத் தலைவன் பிரபாகரன் தலைமையிலே இயங்கும் தமிழீழ அரசு நோக்கிய அரசின் சாதனை. இலங்கைத்தீவின் வடக்கு கிழக்குப் பகுதியை உள்ளடக்கிய தமிழீழ மண்ணிலும் இலங்கைத்தீவின் கடற்பரப்பின் மூன்றில் இரண்டு பகுதியாக விளங்கும் தமிழீழக் கடலிலும் இன்று சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு அரசின் சிங்கக் கொடி பிடுங்கி வீசப்பட்டு தமிழீழ மக்களின் தேசக் கொடியான புலிக்கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கிறது. இந்தச் சாதனையை சரித்திர மாற்றத்தை தந்தவனின் சரித்திரம் தமிழீழ வரலாறாகத் தொடர்கிறது.

அவன் தனிமனிதனாக வாழவில்லை தமிழீழ மக்களின் இரத்த அணுக்களிலே உயிர்த்துடிப்பிலே விடுதலை உணர்வாக வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அதனால் தான் சாதாரண தமிழனின் குருதியிலே சிறீலங்கா புலிகளைத் தேடுகிறது. தமிழனைக் கொன்று குவித்துவிட்டு விடுதலைப் புலிகளை அழித்துவிட்டோம் என்று சிறீலங்கா சிந்தை மகிழ்கிறது - செய்தி பரப்புகிறது. ஆயிரம் ஆயிரம் மைல்கள் கடல் கடந்து வாழ்ந்தாலும் எங்கள் தலைவனாக எங்கள் தேசியத்தின் தலைவனாக எங்களுடன் உலகெல்லாம் பிரபாகரன் வாழ்கின்ற காட்சியை உலகு காண்கிறது. இதனால்தான் இன்று தமிழீழத் தேசத் தலைவரின் 46வது பிறந்த நாள் தமிழர் வாழும் இடமெல்லாம் கொண்டாடப்படுகிறது.

பற்றிமாகரன்

இந்த உண்மையை இனங்கண்ட இந்தியாவின் இந்துப்பத்திரிகை புலம்பெயர் தமிழர்கள், கணனிகளின் இணைய வெளியிலே தமிழீழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என தனது செய்தி ஒன்றில் வர்ணித்து உண்மைநிலை இப்படியிருக்க இனி தனிநாடு இல்லாத தீர்வு சாத்தியமாகுமா என ஆராய்ந்திருந்தது.

இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கின் மூலையிலே தமிழீழ மக்களை படைபலம் கொண்டு அடக்கி ஒடுக்கி நசுக்கி விட்டால் நாளை அவர்கள் நாடும் நமதாகிவிடும் என நினைத்த சிறீலங்கா, இன்று



அவர்கள் தங்கள் தேசியத் தலைவர் பிரபாகரன் தலைமையிலே தமிழீழ மக்களாக எழுந்து நிற்கின்ற காட்சியை மாட்சியை- தங்கள் பெருந்தளமாம் ஆனையிறவில் இருந்துகூட தனது படைகள் தலையில் குதிக்கால்பட ஓடிய வரலாற்றை - பலாலி பெருந்தளத்திலே என்று வீழ்வோம் என நாள் தெரியாது தனது படையினர் பதுங்கி விழிபிதுங்கி நிற்கும் கோலத்தை எல்லாம் நிஜங்களின் தரிசனங்களாகக் கண்டு வருகிறது.

- இவைகள் எல்லாம் எப்படி தமிழீழ மக்களின் சாதனைகளாயின, சிங்கள சிறீலங்காவுக்கு சோதனைகளாயின என்று திரும்பிப் பார்க்கும் பொழுது அங்கே பிரபாகரனின் வரலாற்றை நம் தேசத்தின் எழுச்சி வரலாறாக காண்கின்றோம். அது ஒரு மலர் மாலை சூடிய தலைவனின் வரலாறு அல்ல. தன் இனத்திற்காக தன்னை எல்லா விதத்திலும் அர்ப்பணித்த ஒரு தேசபக்தனின் சரித்திரம். "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற தமிழிலக்கியத் தத்துவம் கடவுளுக்கு மட்டுமல்ல நாளாந்த வாழ்வுக்கும் எழுதப் பெற்ற வேதம் என்பதை செயலால் காட்டிய செயல் வீரனின் வாழ்க்கை வரலாறு. மயிர்நீப்பின் உயிர் வாழாக் கவரிமான் அன்னையவர் என்ற வள்ளுவன் வகுத்த இலக்கணத்திற்கு உயிர் உன்னதமானதுதான் ஆனால் அதைவிட உன்னதமானது சுதந்திரம் எனக் கூறி தன் வாழ்வால் இலக்கியம் படைத்தான் இனமானத் தமிழனின் இணையில்லா பெருந்தலைவன் பிரபாகரன். பேதையர் ஏதையர் போதைதருபாவையர் சுவைதரவும் சுவைக்கப்படவும் பிறப்புற்ற பெண்கள் என்றெல்லாம் தமிழ்ப் பெண்ணை மூலையில் வைத்த கதை முடித்து அவர்கள் களமாடும் காட்சியை உலகே வியக்கும் ஒரு காலத்தை உருவாக்கியது பிரபாகரன் தலைமை. சாதியும், சீதனமும் தமிழர் சமுதாயத்து சாக்கடை வாழ்வின் மூலகாரணங்கள் என்று சாதிக்கும் சீதனத்திற்கும் தமிழீழ அரசியல் அமைப்பிலேயே சமாதிகட்டி அரசியல் விடுதலை சமூக பொருளாதார விடுதலை எல்லாமே இணைந்த முழுமையான மனிதவிடுதலையே தமிழீழத் தேசம் தேடிநிற்கும் விடுதலையின் பொருள் என உலகிற்குக் காட்டிய வரலாறு பிரபாகரனின் வரலாறு. இதோ அந்த வரலாற்றின் ஆரம்ப ஆண்டான 1972 முதல் 1982இல் முதலாவது வீரச்சாவை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கண்டது வரையிலான நம் தமிழீழத்தின் தேச வரலாற்றைப் பார்ப்போம். இந்த வரலாறு எங்கள் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனின் வாழ்க்கை வரலாறாகவும் வளர்ந்து செல்லும் மாட்சியைக் காணலாம்.

1972ஆம் ஆண்டு வைகாசி மாதத்து 22ஆம் நாள் - பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் விதித்த சோல்பரி அரசியலமைப்பின் நிபந்தனைகளை மீறி சிங்கள பௌத்த பேரினவாதம் சிறீலங்கா என்ற அந்நிய அரசை தன்னிஸ்டத்திற்கு இலங்கைத்தீவு முழுவதற்குமான அரசாக பிரகடனப்படுத்தியது. இதனால் காலனித்துவ அரசுகளால் இலங்கைத் தமிழர்கள் என அழைக்கப்பட்ட மக்கள் மீண்டும் தங்களை தமிழீழ மக்களாக உலகிற்கு அறிவித்து அந்நிய அரசான சிறீலங்காவில் இருந்து விலகிச்செல்ல வேண்டிய வரலாற்று த்தேவை தோன்றியது. இதனை ஜனநாயக வழிகளில் சர்வதேசச் சட்டங்களுக்கு ஏற்றவகையில் செய்வதற்கும் சாத்வீக அரசியல் போராட்டங்கள் மூலம் தங்கள் எதிர்ப்பை சிறீலங்காவுக்கு தமிழ் மக்கள் காட்ட முற்பட்டபொழுது சிறீலங்கா தனது பொலிசாரை இராணுவமாக மாற்றி நீதி விசாரணைகள் அற்ற கைதுகளையும் கொலைகளையும் தமிழர் தாயகங்களில் மேற்கொள்ளத் தொடங்கியது.

இதனால் அமைதியான வழிகளில் சிறீலங்காவை எதிர்த்துப் போராடுவதில் இனிப் பயனில்லை மக்களின் ஒன்றுபட்ட ஆயுத எதிர்ப்பு மூலமே தமிழ் மக்கள் தங்கள் உயிர்களையும் உடமைகளையும் பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற யதார்த்த நிலைக்கு தமிழர்கள் தள்ளப்பட்டனர்.

1972இல் தோன்றிய இந்தக்காலத் தேவையை நிறைவேற்றும் பணிக்கென தங்களை அர்ப்பணிக்க உறுதிபூண்ட தமிழ் இளைய சமுதாயத்தின் புரட்சிகர இயக்கமான, புதிய தமிழ்ப் புலிகள் இயக்கத்தின் தலைவராகவும் இராணுவத் தளபதியாகவும் வேலுப்பிள்ளை பிரபாகரனை தமிழீழ வரலாறு வெளிப்படுத்தியது.

1975ஆம் ஆண்டு ஆடி மாதம் 27ஆம் நாளில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு முன்பாக யாழ்ப்பாண சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் யாழ்ப்பாண மேயருமான அல்பிரட் துரையப்பாவினை சுட்டு தமிழினத்துரோகத் தன்மையொன்றின் சகாப்தத்தை பூண்டோடு அழித்த வரலாற்று நிகழ்வுடன் புதிய தமிழ்ப் புலிகள் இயக்கத்தின் இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியது.

இந்த முதல் நடவடிக்கைக்கு தலைமை வகித்து அதனை நெறிப்படுத்தி நிறைவேற்றிய பிரபாகரனின் மதிநுட்பமும் மன உறுதியும் தமிழர்களின் புதிய தலைமை ஒன்றின் வரவுக்கு கட்டியம் கூறின. அத்துடன் இந்தச் சம்பவம் தமிழினத் துரோகத்தனங்களுக்கு துணைபோகும் தமிழர்களுக்கு விடுக்கப்பட்ட முதல் எச்சரிக்கையாகவும் அமைந்தது.

இந்தச் சம்பவமானது திட்டமிட்ட ஆயுத எதிர்ப்பு ஒன்றுக்கான முன்னோடி நடவடிக்கை என்பதை இனங்கண்ட சிறீலங்கா, புதிய தமிழ்ப் புலிகள் இயக்கத்தைக் கண்டு பிடித்து வேரோடு அழிக்க என விசேட உளவுப்படை ஒன்றையே உருவாக்கியது.

1976 வைகாசி 5ஆம் நாள் தமிழீழ தேசத்தின் வரலாற்றில் அதிமுக்கிய நாட்களில் ஒன்று. புதிய தமிழ்ப் புலிகள் இயக்கம் முழுத் தமிழ் மக்களும் பங்கேற்பதற்கான வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமாக தலைவர் பிரபாகரன் தலைமையில் எழுந்தது.

அன்று தீர்க்கதரிசனமாக தமிழீழ மக்களுக்கான போராட்ட வடிவுகளை உருவாக்கி இன்றுவரை எந்த எதிர்ப்பு வந்தாலும் தமிழீழ மக்களை உறுதியுடன் விடுதலை நோக்கி பயணப் படவைத்த பெரும் இராணுவ நிபுணராக பிரபாகரனை உலகு பார்க்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உருவாகி 9வது நாளில் அதாவது 1976 வைகாசி 14ஆம் திகதிய வட்டுக்கோட்டை மகாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இலங்கைத் தமிழ் மக்களை சிங்களவர்களில் இருந்து வேறுபட்ட தனியான தேசிய இனமெனப் பிரகடனப்படுத்தினர். அரசற்ற தேசமக்களாக மாற்றப்பட்டுவிட்ட இலங்கைத் தமிழ் மக்கள் தங்களின் பிறப்புரிமையான தங்களின் அரசியல் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை கொண்டு தமிழீழத் தேச அரசை நிறுவும் தீர்மானத்தை மேற்கொண்டு நிற்கின்றனர் என உலகிற்கும் சிறீலங்காவிற்கும் அறிவித்தனர். 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை தமிழீழ தேசத்தை மீள அமைப்பதற்கான தமிழ் மக்களின் குடியொப்பமாகக் கருதினர். அத்தேர்தலில் தெரிவாகும் தமிழ்ப்பிரதிநிதிகள் சிறீலங்காப் பாராளுமன்றத்திற்குச் செல்லாது தங்களை தாங்களே தமிழீழ அரசியல் அமைப்பு நிர்ணயசபையாக மாற்றுவார்கள் என்றும் தமிழீழ அரசை ஜனநாயகவழிகளில் அடைவதை சிறீலங்கா தடைசெய்தால் போராடி தமிழீழம் எய்தப்படும் என்றும் தேர்தல் பிரகடனம் செய்தனர். தமிழ் மக்களும் பெரும்பான்மை வாக்குகள் கொண்டு அதனை சட்டவலுவுள்ளதாக்கி தமிழீழ அரசியல் நிர்ணய சபைக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்யும் தங்கள் பணியினையும் அதன் மூலம் நிறைவேற்றினர்.


*தொடர்ச்சி அடுத்த இதழில்.....*

www.tamilarangam.net



# 'நயவஞ்சக அரசியல்'

**விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களால் எழுதப்பட்ட The Politics Of Duplicity என்ற நூலை மதிப்பீடு செய்து எழுதுகின்றார் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் திரு வே.பாலகுமாரன் அவர்கள்.**




**க.வே. பாலகுமாரன்**

உண்மை உலகை பாதி தூரம் வலம்வர முன்னர் பொய்மை உலகை பல முறை சுற்றிவந்துவிடும் என்பார்கள். இதேபோலத்தான் 1995 ஏப்பிரலின் பின் நடைபெற்றது. புலிகளுக்கும், சந்திரிகா அம்மையாரின் அரசாங்கத்துக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்கள் முறிவடைந்த போது, அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதியது போலவே புலிகள் தமது பக்க நியாயத்தை உலக அரங்கின் முன்னரே ஒருதலைப்பட்சமாக உலகம் தனது தீர்ப்பை வழங்கிவிட்டது. ஆனால், இப்போது உண்மை உலகை வலம் வரத் தொடங்கிவிட்டது. 1995 தொடக்கம் 2000 ஆண்டிற்கு இடைப்பட்ட காலம் சற்று நீண்டதுதான். ஆயினும் காலம் தாழ்த்தினாலும்மிககாலப்பொருத்தமாக புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 'நயவஞ்சக அரசியல்' (The Politics of Duplicity) வெளிவந்துள்ளது. தனது உடல் நலக்குறைவிற்கு மருத்துவம் பார்க்கச் சென்றவர் அம்மையாருக்கு இப்போது அதிர்ச்சி மருத்துவம் பார்த்திருக்கின்றார். தங்கள் தரப்பின் நியாயங்களை உலக அரங்கு ஏற்கவில்லையே என்கிற எம் மக்களின் பெருத்த மனக்குறையை நீக்கும் வகையில் இராசதந்திர உலகின் வல்லுநர்களுக்கும் எம் மக்களின்பால் நேயம் கொண்டவர்க்கும் விளக்கும் வகையில் இலகு இராசதந்திர மொழியில் நூல் ஆக்கப்பட்டுள்ளது. தனக்கேயுரிய இயல்பான, அமைதியான ஆனால் அழுத்தம் திருத்தமான ஆணித்தரமான நடையில் பாலசிங்கம் அவர்களால் நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் வெளிவந்த காலப்பொருத்தம்தான் என்ன? 1995 ஏப்பிரலில் பேச்சுக்கள் முறிவடைந்தன. ஆறாண்டுகளாகப் பெரும்போர் தொடர்கின்றது. இப்போதே சர்வதேசத்தின் சார்பில் நோர்வே மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க முயற்சிகளைத் தொடர்கின்றது. ஆகவே, அன்று ஏன் பேச்சுக்கள் முறிவடைந்தன? இவை தொடர்பில் புலிகளின் உள்ளப்பாடு என்ன? இவற்றினை உலகிற்கு உரைப்பதற்கு 'பாலா அண்ணை' என உள்ளன்புடன் தலைவராலும் போராளிகளாலும் மக்களாலும் அழைக்கப்படும் அன்ரன் பாலசிங்கமே மிகப் பொருத்தமானவரல்லவா? அன்றைய பேச்சுக்களிலும் இன்றைய பேச்சுக்களிலும் நேரடித் தொடர்புபடுகின்றவராகவும், தலைவரின் மனநிலையை உணர்ந்தவராகவும் அவரே இருக்கின்றார். இந்நூலின் வெளியீடு பிரதிபலிக்கும் இன்னொரு அரசியல் பெறுமானத்தையும் இங்கே பதிவாக்க விரும்புகின்றோம். 1995 ஏப்பிரலின் பின் இடைவிட்டு ஆனால் இடைவிடாமல் அம்மையார் என்ன பிரகடனம் செய்து வந்தார்? புலிகளை நோக்கிச் சவால் அல்லவா விடுத்தார்? உலகத்திற்கு உறுதிமொழியல்லவா கொடுத்தார்? 'புலிகளே பேச்சுக்களைக் குழப்பினர், முன்னறிவித்தலின்றி திடீரெனப் போரைத் தொடங்கினர்; இவற்றினை நிரூபிக்கத்தக்க சான்றுகளாக எனக்கும் பிரபாகரனுக்குமிடையிலான கடிதங்கள் உள்ளன; இவற்றினை வெளியிட்டால் புலிகள் பேச்சு மூச்சற்று மூலைக்குள் முடங்க வேண்டியதுதான்; மிக விரைவில் கடிதங்களை வெளியிடுவேன்' என் வீராப்பாக கதைவசனம் பேசி நாடகமாடி வந்தார். இதற்கு அவர் துணை சேர்த்தது 'புரொன்ட்லைன்' ராம் எனப்படும் ஒரு பத்திரிகையாளனுக்குரிய நியாய எல்லைகளைக் கடந்து, தனது மாக்சிய அறிவையே ஒரு இனத்தின் விடுதலைக்கு எதிராகப் பயன்படுத்தும் 'இன்னொரு இரட்டைவேட மலின அறிவுவாதி' ஆவார். அம்மையாரின் இமாலயப் புளுகுகளை உண்மைப் பூச்சுப் பூசும் வேலை இவருக்கு. இப்போது கடிதங்கள் வெளியிடப்பட்டுவிட்டன. ஆனால், எவரால்? தக்க நேரத்தில் தவிர்க்க முடியாத முகத்திலறையும் உண்மையாக இந்நூல் வெளியாகி உலகில் உலவுகின்றது. மீண்டும் தனது பழைய உளுத்துப்போன வாதத்தினை முன்வைக்கும் வாய்ப்பினை பாலா அண்ணை இப்போது அம்மையாரிடமிருந்து தட்டிப்பறித்துவிட்டார். இதனால், பெருத்த மனநிம்மதியை எம்மக்கள் அடைகின்றார்கள்.

முன்னுரையாக வரும் அறிமுகவுரை. முடிவுரையாக வரும் பேச்சுக்கள் தோல்வியடைந்தமை தொடர்பான பிரதிபலிப்புக்கள் தவிர, ஐந்து அத்தியாயங்களாக நூல் வகுக்கப்பட்டுள்ளது. 1994ஆம் ஆண்டு செப்டெம்பர் தொட்டு 1995 ஏப்பிரல் வரையான காலப்பகுதி இவ்வைந்து அத்தியாயத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. முழுநூலின் உள்ளடக்கமுமே மிக சுருக்கமாக அறிமுகவுரையில் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. பாலா அண்ணையின் அனுபவ முதிர்ச்சியின் ஆற்றல் மிகு சொற்றொடர்களை, அரசியல் வரைவிலக்கணங்களின் பலகீற்றுக்களை இப்பகுதியில் மட்டுமல்ல நூலெங்கும் நாம் காணமுடியும். தமிழ் மக்கள் தொடர்பில் மட்டுமல்ல சிங்கள தேசத்தை, சர்வதேசத்தை அணுகிய முறையாலும் அம்மையாரின் இரட்டைவேடப் போக்கினை வெகுபொருத்தமாக 'நயவஞ்சக அரசியல்' எனும் தொடருக்குள் பொதித்தவர், எம்மக்கள் தொடர்பான அவரது நயவஞ்சக அரசியலை, நீண்டகாலப் போருக்கான அமைதிப்பொதி (Peace trap for a long term war) என வருணிக்கின்றார். அறிமுகவுரை யதார்த்தமான கணிப்போடு ஆரம்பமாகின்றது. 'ஏப்பிரல் 1995இல் பேச்சுக்கள் முறிவடைந்தபோது சர்வதேச சமூகம் எவ்வித தயக்கமுமின்றி புலிகளே பேச்சுக்கள் முறிவடைந்தமைக்குக் காரணம் என கண்டனம் தெரிவித்தது. புலிகள் தமது தரப்பு வாதத்தினை முன்வைக்க முன்னரே உலகம் தனது தீர்ப்பை வழங்கி விட்டது. சர்வதேச தொடர்புச் சாதன ஊடகங்களோடு முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டு தனிமைப்பட்டிருந்த புலிகளால் தமது தரப்பு நியாயத்தை உடன் முன்வைக்க முடியவில்லை. எனவே, சிறீலங்கா அரசு தான் மேற்கொண்ட பாரிய சர்வதேச பொய்மைப் பரப்புரையால் வெற்றியீட்டி உலகை தன்பக்கமாக்கிக் கொண்டது.'

யாழ்ப்பாணப் பேச்சுக்கள் ஒரு மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டியதன் அவசியமும் இங்கே தெளிவாக்கப்படுகின்றது. 'சர்வதேச சமூகம் மீண்டும் புலிகளுக்கும், சிறீலங்கா அரசிற்கும் இடையில் பேச்சுக்களை தொடக்கமுயலும் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் யாழ். பேச்சுக்கள் தொடர்பில் ஒரு நுணுகிய பார்வை இப்போது அவசியமாகின்றது. இதன் மூலம் புலிகளின் மனநிலை, உள்ளார்ந்த நிலைப்பாடு என்பவற்றை அறியமுடியும். ஏனெனில் சந்திரிகா அம்மையாரின் அரசாங்கம் தொடர்பில் புலிகள் காட்டும் மிக ஆழமான அவநம்பிக்கை, பேச்சில் ஈடுபட அவர்கள் காட்டும் பெரும் தயக்கம், இவையெல்லாவற்றினதும் வேர்கள் யாழ். பேச்சுக்களின்போது புலிகளின் தலைமை பெற்ற கசப்பான அனுபவங்களிலேயே உள்ளன' என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

எதனை ஆதாரமாகக்கொண்டு எவ்விதம் நூல் ஆக்கப்பட்டுள்ளது? இதனையும் அறிமுகவுரையில் ஆசிரியரே விளக்கிவிடுகின்றார். 'முரண்பாடுகளின் தீர்வு தொடர்பில் இதுவரை அறியப்படாத ஒரு தனித்துவமான முறைமையில் யாழ். பேச்சுக்கள் நடைபெற்றன. (Adopting a peculiar modality hitherto unknown in the discourse of conflict resolution) இவை இரண்டு மட்டத்தில் நடைபெற்றன. ஒரு மட்டத்தில் இரு தரப்பினதும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் நேரடிப் பேச்சுவார்த்தை, மறு மட்டத்தில் அரசினதும், புலிகளினதும் தலைமைகள் பரிமாறிக்கொண்ட கடிதங்கள் மூலமான மறைமுகப் பேச்சுவார்த்தை, ஆறு மாத காலத்திற்குள் ஆக நான்கு சுற்றுக்கள்; அவையும் ஒவ்வொன்றும் ஓரிரு நாட்களே நீடித்த மிகக்குறுகிய காலவரையைக் கொண்டவை. எனவே மிகப்பரந்துபட்ட ஒரு அரசியல் சிக்கலை அதுவும், முடிவுகள் எடுப்பதற்கு அதிகாரமற்ற ஒரு தாழ் நிலைக்குழுவோடு (Low key government team) பேசி நேரடிப்பயன் எதுவுமே கிட்டாத நிலையில் இருதரப்பு தலைமைகளுக்கிடையில் நடைபெற்ற கடிதப் போக்குவரத்துக்களே முக்கியமானதும், தீர்க்கமானதுமாகின்றன; 'இவற்றில் பல தலைவர் பிரபாகரனுக்கும், சிறீலங்கா அரசின் தலைவி என்ற வகையில் சந்திரிகா அம்மையாருக்கும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ரத்வத்தைக்குமிடையிலானவை. ஏனையவை திரு. தமிழ்ச்செல்வனுக்கும் திரு. பாலபத்த பெந்திக்கும் இடையிலானவை ரத்வத்தைக்கும் தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சில கடிதங்களும் நூலில் உள்ளன. இவ்வாறாக கடிதங்களுக்கூடாக ஒரு காலகட்ட அமைதிப்பேச்சு வரலாறு நகர்த்தப்படுகின்றமை இந்நூலின் புதுமை. (மொத்தமாக 49 கடிதங்கள்)



1995 பேச்சுவார்த்தை காலத்தில் மோதல் தவிர்ப்புக் கண்காணிப்புக் குழுவினருடன் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

நூலின் முதலாவது அத்தியாயம் மட்டுமே அமைதிப் பேச்சுக்களின் முதலாவது சுற்று (1994 ஒக்டோபர் 13,14) அமைதியாக நடந்ததைப் பதிவு செய்கின்றது. 1994 ஆகஸ்டில் அம்மையார் பிரதம மந்திரியாகப் பதவியேற்ற பின் காட்டிய நல்லெண்ணத்தைப் பாராட்டியும், தலைவர் தமது நிலைப்பாட்டை மிகத் தெளிவாகவும் (1. பூரணமாக பொருண்மியத் தடை நீக்கப்படல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



2. இயல்பு நிலை உருவாக்கல். 3. நிபந்தனையற்ற பேச்சுக்கும், போர் நிறுத்தத்திற்கும் தான் தயாராக இருக்கின்றமை) விளக்கி எழுதிய 02.09.1994 ஆம் திகதிய முதலாவது கடிதம் இடம் பெறுகின்றது. எனினும், அம்மையார் முதலாவது சுற்றுக்கு அனுப்பிய தாழ் நிலை அரசாங்கக்குழு தொடர்பில் அவர் ஐயம் கொள்ளத்தொடங்கியமையும் இங்கே குறிப்பிடப்படுகின்றது. தலைவர் எழுதிய முதலாவது கடிதத்திற்கும் அவர் இறுதியாக அனுப்பிய 18.04.1995 திகதியிட்ட கடிதத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நடந்தவை மிக விரிவாக காலவொழுங்கு முறைப்படி வரிக்கு வரி கடித ஆதாரங்களோடு அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதியுள்ளார். முரண்பாடுகள் எவ்வாறு முற்றின என்பது சம்பவங்கள் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாம் சுற்றுப்பேச்சுக்கள், (ஜனவரி 2,1995) மூன்றாம் கட்டப்பேச்சுக்கள் (ஜனவரி 14,1995) வெளித்தோற்றத்திற்கு மோதல் தவிர்ப்பு உடன்பாடு, சில பொருட்களின் தடை நீக்கம் என்பவற்றிற்கு வழி வகுத்தபோதும், உண்மையிலே ஆழமான முரண்பாடுகளை தோற்றுவிக்கவே வழிவகுத்தன. இப்பேச்சுக்களும், இவற்றின் பின்னரும் முன்னரும் ரத்வத்தையும், அம்மையாரும் அனுப்பிய கடிதங்கள் தலைவர் மனதில் எத்தகைய எண்ணவோட்டங்களைக் கிளப்பின என்பதை பாலா அண்ணை வெகுபக்குவமாகப் பதிவு செய்துள்ளார். இச்சிந்தனை, வரலாற்று வழிவந்த சிங்களப் பேரினவாதத்தின் கருத்தியல் தோற்றம் பற்றியது. மக்கள் அன்றாடம் படும் இன்னல்களை நீக்குங்கள் என 6 மாத காலத்தில் ஒவ்வொரு தடவையும் புலிகள் வற்புறுத்திய போது இழுத்தடித்து, இறுதியில் இவை பாதுகாப்புத் தொடர்பானவை, இராணுவத்தின் நலனுக்குத் தீங்கு பயப்பவை (பக்கம் 108, அம்மையாரின் 09.03.1995ஆம் திகதி மடல்) என காரணம் காட்டப்பட்டதன் ஆழமான உள்ளர்த்தம் என்ன? இதுவே இந்நூல் மூலம் பாலா அண்ணை எழுப்பும் பெரும் கேள்வியாகும். நூலின் இறுதியில் இதற்கான விடை விரிவாகத் தரப்பட்டுள்ளது. முடிச்சவிழ்க்கப்படாத புதிர் ஒன்று இந்நூல் மூலம் முடிச்சவிழ்க்கப்படுகின்றது. எம் மக்கள் தாம் எதிர்நோக்கிய அரசியல் சிக்கலை தீர்க்க முயன்றபோது அதைத் தடுக்கவே இராணுவ அடக்குமுறை உள்ளிட்ட தடைக்கு மேல் தடை அவர்களால் விதிக்கப்பட்டது. இப்போது, அவர்களே அரசியல் சிக்கலைத் தீர்க்க முன் வருவதாகக் கூறும்போது, எம்மக்களின் அன்றாட வாழ்வைச் சிதைக்க அவர்களே இட்ட தடை நீக்கவேண்டியது அவர்களின் பொறுப்பு அல்லவா? இத்தடை நீக்கம் எவ்வாறு இராணுவ நலன்களைப் பாதிக்கும்?

இதுவே பேச்சுவார்த்தை தோற்றமைக்கான பிரதான காரணங்களில் ஒன்று. இதனையே நூலாசிரியர் பக்கம் 110 இல் தொகுத்துத் தருகின்றார்.

1. பொருண்மியத்தடை பூரணமாக நீக்கப்படாமை, அவ்வாறு நீக்கப்பட்ட பொருட்களும் எம்மக்களைச் சென்றடையாமை.

2. அரசாங்கம் ஒரு நீடித்த, நிலையான போர் நிறுத்தத்திற்குத் தயாராக இல்லாமை.

3. கரையோர மேலாதிக்கத்தைப் பேண மீன்பிடித்தடையை நீக்காமை.

4. கிழக்கில் போராளிகளின் பாதுகாப்பு ஆபத்திற்குள்ளாக்கப்பட்டமை.

5. தரைவழிப்பாதை திறக்க உடன்படாமை. அதாவது, பூநகரி இராணுவ முகாமை மூட உடன்படாமை.

இவற்றினைவிட இன்னொரு பிரதான காரணமும் பேச்சுக்கள் தோற்றமைக்கு வழிவகுத்தது. அது புலிகள் தொடர்பான அல்லது தமிழ் மக்களின் தேசிய இனச்சிக்கல் தொடர்பான சிங்களத்தின் மேலாதிக்க அணுகுமுறை இதனை கண்டித்து, தலைவர் அவர்கள் அம்மையாருக்கு அனுப்பிய 28.03.1995 திகதிய கடிதத்தில் கூறுகின்றார். (பக்கம் 128) 'உங்களுடைய கடிதத்தில் உங்களது அரசாங்கத்தால் புலிகளுக்குப் பல சலுகைகள் அல்லது விசேடித்த உரிமைகள் என்பன நம்பிக்கையை வளர்ப்பதற்காக வழங்கப்பட்டதாக எழுதியுள்ளீர்கள். உங்களது கருத்துப்படி ஆயுதங்களைக் கீழேவைக்கக் கோராமல் பேச்சுக்கள் தொடர்கின்றமை, மோதல் தவிர்ப்பு உடன்பாடு. யாழ்ப்பாணத்திற்குப் பேச்சுவார்த்தைக்குழு அனுப்பப்பட்டமை எல்லாம் இத்தகைய சலுகைகள், இது தவறான பார்வை. இவை புலிகளுக்கு நீங்கள் வழங்கிய சலுகைகளோ அல்லது விசேட உரிமைகளோ அல்ல. இவை ஒரு அமைதி முயற்சியினை முன்னெடுப்பதற்குத் தேவையான முன்னவசிய சூழலை உருவாக்க அவசியமானவையாகக் கருதப்படவேண்டும். புலிகள் வெறுமனே ஒரு ஆயுதக் குழு என்கிற உங்களது பார்வை தவறான கருத்தியலை அடிப்படையாகக் கொண்டது. நாங்கள் தமிழ் மக்களின் உள்ளத்துணர்வுகளை, அபிலாசைகளை பிரதிபலிக்கின்ற அவர்களோடு ஒன்றித்த இயக்கம், இவ்வடிப்படையிலான எமது முதன்மைத்தானத்தினை ஏற்றே நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு முன் வந்தபின் அமைதி முயற்சிகளின் முன்னெடுப்பிற்கு அவசியமானவற்றை பேச்சுவார்த்தையில் ஈடுபடும் ஒரு குழுவிற்கு வழங்கப்படும் சலுகைகளாகக் கருதுதல் தவறானதாகும்' இப்பதில் அம்மையாருக்கு மட்டுமல்ல பயங்கரவாதப் பட்டம் சூட்டும் அகில உலகத்திற்கும் பொருத்தமானதே. இதன் தொடர்பில் தன்னையொரு முற்போக்குவாத தாராண்மைவாதியாகத் தொடக்கத்தில் காட்டிக்கொண்ட அம்மையார், 1986இன் முற்பகுதியில் சென்னையில் ஆசிரியரைச் சந்தித்தபோது தமிழ்மக்களின் தேசிய இனச்சிக்கலை எவ்வாறு மிகத் தவறாக வேண்டுமென்றே புரிந்து கொண்டிருந்தார் என்பதை முதல் அத்தியாயத்தின் தொடக்கத்திலேயே ஆசிரியர் எழுதியிருப்பதையும் வாசகர் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

இவ்வாறாக, மூன்று சுற்றுப்பேச்சுக்களின் பின் நிலைமைகள் வேகமாக மோசமடைவதை பாலா அண்ணை வெகு கவனமாகப் பதிவு செய்கின்றார். தலைவரின் பொறுமையிழப்பு, தனது வேண்டுகைகளை நிறைவேற்ற ஒரு கால எல்லையாக 28.03.1995ஆம் திகதியை தனது 16.03.1995 திகதிய கடிதம் மூலம் அறிவித்தமை, பின் அதனை 19.04.1995ஆம் திகதிவரை தனது 06.04.1995 திகதிய மடல் மூலம் நீட்டித்ததை இவை எல்லாமே ஒரு காலக்கெடு என்றில்லாமல், அம்மையார் தனது நயவஞ்சக இரட்டைவேடப்போக்கினை மாற்றக் கொடுக்கப்பட்ட கால அவகாசமும், முன்னறிவித்தலுமாகவே வரலாறு கருதும். இதுவே நூலின் முழுமை உணர்த்தும் செய்தி. இதன் பின்னரும் அம்மையார் தனது போக்கினை மாற்றாமல் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் ஒரு ஆயர் உட்பட பலதரப்பினரையும் இணைத்து அரசாங்க தூதுக்குழுவை நான்காம் சுற்றுக்கு 10.04.1995 அன்று அனுப்பியமை, அதன் பின்னான 12.04.1995ம் திகதிய அவரது கடிதம் எதுவுமே தலைவர் மனதினை மாற்றப் போதுமானவையாக இருக்கவில்லை.

ஒரு விடுதலை இயக்கத்தோடு பழைய காலம் கடந்த புளித்துப்போன அணுகுமுறையான அரசு என்கிற ஆணவ நிலையிலிருந்து அணுகுதல், கூடவே பௌத்த பேரினவாதத் திமிரும் சேர்ந்தால் என்ன பயன் விளையும் என்பதனை அம்மையாருக்கு மட்டுமல்ல, உலகத்திற்கும் உணர்த்திய தலைவரின் வரலாற்றுப் பதிவாகிவிட்ட 18.04.1995ஆம் திகதியிட்ட இறுதிமடல் இவ்வாறுதான் முடிகின்றது. 'நாங்கள் உங்களுக்கு ஏலவே அறிவித்தது போன்று, பேச்சுவார்த்தையிலிருந்தும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும் விலகிக் கொள்வது என்கிற வேதனை தரும் முடிவினை எடுப்பதைத் தவிர வேறுவழி எமக்கு முன்னில்லை' இவ்வாறாக வேறு வழி எதனையும் அம்மையார் முன் வைக்கவில்லை என்கிற நிலைப்பாட்டோடு 144ஆம் பக்கத்துடன் இந்நூல் முடிவடைந்திருக்க வேண்டும். ஆனால், இத்தோடு நூல் முடிவடையவில்லை. 1995 ஏப்பிரலிலிருந்து புலிகளுக்கு எதிராக மிகப் பாரியளவில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட அமைதிக்கான போர் என்கிற நயவஞ்சகப் பரப்புரைக்கு அடிப்படையாக அமைவது இரண்டே விடயங்கள்தான். ஒன்று புலிகள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி சடுதியாக தாக்குதல்களைத் தொடங்கினர் என்பது, மோதல் தவிர்ப்பு உடன்பாட்டின்படி 72 மணித்தியாலங்கள் முன்னறிவித்தல் கொடுத்தால் போதுமானது என்றிருந்தபோதும், அரசியல் நிலைமைகளைக் கருத்தில் எடுத்தே தலைவர் அவர்கள் தனது மூன்று மடல்கள் மூலம், மூன்று வாரத்திற்கு மேற்பட்ட கால அவகாசத்தினை வழங்கினார் என்பது நூலின் வழி மிகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.



1995 இல் பேச்சுவார்த்தையின் போது

இரண்டாவது வலுவான காரணமாக அம்மையாரால் முன்வைக்கப்பட்டது புலிகளுக்கு அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்களில் ஈடுபட துளியளவும் விருப்பமில்லை நாங்கள் தயாராகவிருந்த போதும், அவர்கள் தட்டிக் கழித்தனர் என்பதே. இதற்கான பதிலே 145ஆம் பக்கத்திலிருந்து ஆரம்பமாகின்றது. பேச்சுக்கள் முறிவடைந்தமைக்கான காரணங்கள் நேர்மையாக புலிகளின் யதார்த்த நிர்ப்பந்த நிலைமை உட்பட முன்வைக்கப்படுவதோடு, இற்றைவரை வெளிச்சத்தைக் காணாத அரசியல் தீர்வு எங்கே? ஏன் அது நடைமுறைச் சாத்தியமாகவில்லை? என்பதும் தெளிவாக்கப்படுகின்றது. சிங்கள பௌத்த பேரினவாதம் எவ்விதம் ஆழ அகலமாக வேரோடி தாபனமயப்படுத்தப்பட்டு நிற்பதனையும், அதனைச் சார்ந்தே இயங்கும் (சாராமல் இயங்கமுடியாது) அம்மையார் போடும் இரட்டைவேடம், நயவஞ்சகம் என்பது எத்தகையதும் என்பது தெளிவாக்கப்படுகின்றது. இப்போது அம்மையாரின் எல்லாவேடமும் அம்பலமாகி சகல குட்டுக்களும் உடைந்து, அமைதிக்கான போர், புலிகளுக்கு இராணுவத்தீர்வு மக்களுக்கு அரசியல் தீர்வு என்பனவெல்லாம் மிக மோசமான கொடூரமான நகைச்சுவைத் துணுக்குகளாகிவிட்டன. புலிகளின் ஆறாண்டுகால விடுதலைப்போர், களத்தில் அம்மையாரின் அரசியல். இராணுவ இலக்குகளை சிதறடிக்க, இராஜதந்திரக் களத்திலும் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களின் நூல் அதே பணியைச் செய்கின்றது.

உண்மையை உலகம் உணருமா? இனிமேலாவது ஒரு புதிய விழிப்பை பெறுமா? பாலா அண்ணை இவ்வாறு தான் நூலை நிறைவு செய்கின்றார். 'தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள போர் சிங்கள பௌத்த இனவாதத்தின் நேரடி வெளிப்பாடு என்பதை எப்போது சர்வதேச சமூகம் உணர்கின்றதோ அப்போது தான் இனப்படுகொலை அழிவுகளை தமிழ்த் தேசத்தில் ஏற்படுத்தும் இப்போருக்கு உதவுவதிலிருந்து சர்வதேச சமூகம் தன்னை விடுவித்துக் கொள்ளும்' இதனை உணர வைக்கப்படும் முயற்சியே இந்நூல். ●

## நீளத் தொடங்கியது

*மனம் சிறைப்பட்டிருந்தது*
*இதயம் சுருங்கியிருந்தது*
*காதுகள் செவிடாயிருந்தன*
*கண்பார்வையிழந்திருந்தது*
*கரங்கள் முடங்கியிருந்தன*
*புலன்களை அடைத்து*
*இருளில் புதையுண்டேன்*
*என்னுள் நான் வதை பட்டேன்*
*வதை உக்கிர வலியெழுப்பியது.*
*புலன்களின்*
*மனச்சிறையுடைந்தன.*
*இதயம் விரிந்தது.*
*அதிர்வால் செவிப்பறை*
*கூர்ப்படைந்தது.*
*பார்வை தெளிவானது*
*கரங்கள் அகல விரிய*
*முழுமையும் தெளிவாய்*
*விரிந்தன.*
*குறுகிய நிலம் நீளத்*
*தொடங்கியது.*
*பொங்கிய அலை திரண்டது*
*அது கரையைத் தேடி ஓடியது.*

**-வளநாடன்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அலைகளின் முகங்கள்

அலைகளின் உருவம் அறியாச் சிறுவயதில்
அதுவெனக்கோர் அரக்கனாய் இருந்தது.

கடல் குளித்தேறும் அரக்கனின்
ஒவ்வொரு மூச்சுமே ஒவ்வொரு
அலையென்பதாய்
அலைகளைப் பற்றிய என் நினைவுகள் இருந்தன

அலைகளைப் பற்றிய கனவுகளுள்ளும்
ஒரு அரக்கனே வந்தான்
கண்ணுக்கெட்டாத கடற்குகையொன்றினுள்
கட்டி இழுத்துக் கொண்டெனைச் சென்றான்

கைபிடிக்கவும் கரைசேர்க்கவும் யாருமின்றி
நொந்து கூச்சலிட்டு கண்விழித்த பின்னும்
விலகாது தொடர்ந்தன அலையின் உருவங்கள்

அரக்கனாய் இருந்த அலையின் முகம்
கல்லூரி நாட்களில் ஒரு கவிதையாய் ஆனது.

ஆவேசத்துடன் கரைகளில் மோதி
வெடித்துச் சிதறி வெண்நுரையாய் திரும்பும்
அலையின் முகமே அழகென உணர்ந்தேன்

அலைகளில் நனைவது சுகங்களில் இனியது
எனக் கொண்டேன்

வண்ண வண்ண ஒளிமலர் சூடி
நத்தாரை எதிர்கொள்ளும் குதூகலத்தோடு
இருள் துருவம் ஒளிர்ந்திட்ட ஓர் இரவில்தான்
அலைகள் பற்றிய என் கவிதை சிதைந்தது.

போரினை எதிர்கொள்ளும் வகையேதுமறியா
என் தேசப் புதல்வர்களை
அத்திலாந்திக் கடலின் அலைகள்
விழுங்கின
நம்பிக்கைகளின் மீதங்கள் ஏதுமின்றி

போன நூற்றாண்டின் இறுதித் துண்டில்
அலைகளின் உருவம் புலிகளானது
ஓயாது பாய்ந்த அலைகளின் கால்கள்
ஒரு தேசத்தின் உருவை மண்ணில்
வரைந்தன.

அலைகளை வென்ற சோழரின்
பேரர்களாய்
கடற்புரவிகளில் மீண்டும் என் தேசத்தவர்
அலைகளினூடு கருவிகளைச்
சுமந்தபடியும்
கைகளை அசைத்தபடியும்

மாவீரரே!
உங்களை நினைத்தபடி
ஐரோப்பிய தெருவொன்றில் நான்
திமிருடன் நடக்கிறேன்.

-அர்ச்சுனா-

# நெஞ்சுருகிக் கூவு

தங்க நிற நிலவு தலை வணங்கிப் பார்க்க,
நீர் சுமந்த மேகம் நிலவைப் போர்க்கும்.
சொட்டுச் சொட்டாய் தூவும் மழைத்துளி
திட்டுத் திட்டாக விதைகுழி வீழும்.
ஆனையிறவும் அருகே பரந்தன் பளையும்
அடுத்தடுத்து வடபுல தேசமும்
வாழ்க்கையும்
மீட்ட பலவீரர் மீளாத் துயிலில்
வென்ற பூமியில் வித்தாகிப் போனார்.

வாழ்வை மீட்ட வல்லவரைப் போற்ற
வரிகள் யாத்து வாயாரப் பாடு
நிமிர்ந்து நின்றெதிர்த்து நெருப்புக்
குளித்தோரின்
நினைவு சுமந்து நெஞ்சுருகிக் கூவு
விழி குளித்தாலும் வென்றோம் என்றார்த்து
கவிகள் படைப்போம் காவியம் செய்வோம்
உள்ளம் வலித்தாலும் உடைந்து போகாது
போராடிப் போனோர்க்கு பூச்சொரிந்தாறுவோம்

-சோதியா

# தேசபிதாக்கள்

தள்ளாடும் கிழம் மீதும்
தாய்மை விழி நோக்குடைய
தம்பியிவன் பதினெட்டு வயது வேங்கை!
உள்ளூத்தும் வயதுணர்வை
உழக்கி விட்ட விறு நடை!
ஓம்ப அறம் விலையாகும் அமரன்
வேங்கை!

காற்று மழை இருட்டு பனி
கடும் பயிற்சி கண் விழிப்பு!
கலங்காத காய்த்தமன யோகி வேங்கை!
'ஏற்றெழுதும் வரலாறும்
என் சாவை!' எனச் சொல்லி
இலட்சிய நெருப்போம்பும் இருடி வேங்கை!

பல்குழலா, விசைப்படகா
பன்னாட்டு பயிற்சிகளா?
வெல்பவர் நாம் என விறி நிற்கும் வேங்கை!
வல்லவற்கு வல்லவனிவ்
வையகத்தில் உள்ளகதை
மண்ணுலகில் தொடர்விக்கும் ஞானி
வேங்கை!

கருவேங்கையாய் வெடிக்க
களமெதிலும் போயடிக்க
கனலுமெரி மலையிந்த இளைய வேங்கை!
தரையிறங்கித் தரைகவர்ந்து
தமிழீழ மண்மீட்டுத்
தமிழீழ தேச பிதாவாகும் வேங்கை!

—பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம், தமிழீழம்



# ஓ, மா

உணர்ச்சிக் கவிஞர்

ஓ
மாவீரனே!

உன்
கழுத்து
நஞ்சுமாலை
தாங்கிய
அன்றே

உன்
தாயகம்
விடுதலை
தாங்கிற்று.

நிமிர்ந்த போராளி
நீ! சாவதற்காக
நஞ்சுமாலை
அணிந்தாய் நீ
என்றார்...
திருத்தினேன்
வாழ்வதற்காக.

ஓ
மாவீரனே!
உன்னிடம்
ஒரு
கேள்வி
நஞ்சினை
உண்டு
நீ
பசிதீர்த்தாய்
அல்லவா?

அது
சரி...
உன் சாவு
அவன் கல்லறை
ஆனது
எப்படி?
எனக்குத் தெரியும்.

சாவை
நீ
மிதித்தாய்.
சாவு
அவனை
மிதித்தது.

உன்
உயிர் பறிக்க
வந்த
குண்டுகளே
உயிரிழந்து
போயின.


ஓ
மாவீரனே!
உன் ஆற்றல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# வீரனே!

காசி ஆனந்தன்

பெரிதடா
பெரிது.

கோழைகளெல்லாம்
இன்றுன்னை
மதிப்பீடு
செய்து
கொக்கரிப்பதை
நான்
அறிவேன்.

விடு.
அவர்கள்
வீட்டில்
வாழும்
பிணங்கள்
நீ
கல்லறையில்
வாழும்
உயிர்.

ஓ
மாவீரனே!

தற்கொலை
என்று
நேற்றுவரை
இருந்த
தமிழ்ச்சொல்லைத்
தற்கொடை
என்று
மாற்றியவன்
நீ.

உன்னை
உன்
மண்ணுக்கு
நீ
கொடுத்தாய்..
ஆனால்
ஓர் ஐயம்
உன்னை
உன் தேசம்
பெற்றுக்கொண்டதா?
இழந்ததா?

ஓ
மாவீரனே!
எரிமலையின்
விம்மலோடு
வணங்குகிறேன்..
உன்னை.

இந்நாள்
நஞ்சுமாலைக்கு
பூமாலை
சூட்டும்
நாள்

# ஒளிமுகம் தோறும் புலிமுகம்



ஆண்தாய் போலே
அணைத்த நம்
தலைவர்
கண்களால் ஊட்டிய
தாய்ப்பால்

அதைக்
குடிக்க கிடைத்த நல்
வாய்ப்பால்

திறந்தது
திறந்தது
திறந்தது
திறந்தது

தமிழ்
ஈழ
விடுதலைத்
தாழ்ப்பாள்!
★★★★
மாவீரர்
நீங்களே!
மறப்போமா
நாங்களே!

ஒளிமுகம்
தோறும்
புலிமுகம்
பார்த்து

குலதெய்வம் போலே
உம்மைக்
கும்பிடுவோம்
நாங்களே!
★★★★★

உலகம் தோறும்
உள்ள சொந்தம்
உங்கள்
வீரம்
நினைக்கும்!

மழையும்கூட
இறங்கி வந்து
உங்கள்
துயிலிடம்
நனைக்கும்!

பதுங்கு குழியில்
இருக்கும்
பிள்ளை
என்றே
தாய்மை
நினைக்கும்!

அது
பத்து மாசம்

சுமந்த
வயிற்றைத்
தடவிப் பார்த்தே
சிலிர்க்கும்!

இறந்தவரென்றா
மறப்போம்!
உம்மை
எத்தனை
தலைமுறை
நினைப்போம்!
★★★★

மாவீரர்
நீங்களே!
மறப்போமா
நாங்களே!
★★★★★

கோயில் மணிகள்
உங்கள் புகழை
ஊர்கள்
தோறும்
ஒலிக்கும்!

அமைதிவணக்கம்
முடிந்த நொடியில்
ஈகச்

சுடர்கள்
விழிக்கும்!

அது
தலைவர் உரையில்
எழுந்து
உம்மை
களங்கள் ஆட
அழைக்கும்!

இறந்தவரென்றா
மறப்போம்!
உம்மை
எத்தனை
தலைமுறை
நினைப்போம்!

கவிஞர் அறிவுமதி
தமிழகம்

# துயிலும் இல்லம் மீண்டும் எழும்

தர்மவானான
எங்களின் வயதான அரசனை,
துஷ்டனான அவர்களது இளவல்
வஞ்சகமாய்க் கொன்றான்.
பின்னாளில் இறந்தவனின்
நடுகல்லருகால்
தேரில்வரும்போது
கெமுனு இறங்கி நடந்து செல்வான்,
தலைகுனிந்தபடி.

நாங்கள் சொன்னதல்ல இது.
அவர்களின் இதிகாசமே சொல்கிறது.
நம்மவனை எதிரி வஞ்சகமாய்க் கொன்றது
தந்த வெம்மையை
தலைகுனிந்து கெமுனு நடந்து சென்றது
சற்று தணிப்பதுண்டு
அவனில் சிறிது மதிப்புக்கூட எமக்கு வருவதுண்டு.

சரித்திரம் மீண்டும் இங்கு தொடர்கிறது
இம்முறை முன்பைவிட அதிக கசப்புடனே,
துஷ்டனின் 'ஜினி'லிருந்து வந்தவர்கள்;
எமது பூமியை மீண்டும் வஞ்சகமாய் பறித்தனர்.
எம்மவரின் இரத்தத்திலான காரியங்களுக்காக,
எம்மால் எழுப்பப்பட்ட கண்போன்ற
நினைவாலயத்தை
துவம்சம்செய்து அழித்தனர்.
கெமுனுவுக்கு மேலே ஒருபடி சென்றனர்.

எங்களுக்கு செய்தி இக்கரைக்கு எட்டியது.
நெஞ்சம் வெதும்பி அழுதே விட்டோம்
அமைதியை உடைத்துச்சூழுரைத்தோம்
அவர்களை அழித்தொழியாது விடோம்,
வேள்வித்தீ இக்கரையில் எழுந்து சுடர்விடுகிறது
எல்லாமே இங்கு மும்முரமாய் நடக்கிறது.
எங்கள் பூமியிலேயே அவர்களுக்கு சமாதி
கட்டப்படும்
அங்கு ஓடப்போகும் அவர்களின்
இரத்தத்தைக் கழுவியபின்
அவர்களின் எலும்புகளையும் தசைகளையும்
பொறுக்கி எரித்தபின்
சாம்பலை அவர் உறவுகளுக்கு அனுப்பியபின்
இடிந்த இடத்திலேயே மீண்டும்
எம்மவர்க்கு நினைவாலயம் எழும்பும்
இம்முறை சீமெந்துக்கற்களால் அல்ல,
பளிங்குக்கற்களால்!
இருபத்தோராம் நூற்றாண்டின் அற்புதமாக
பொன்னால் வேய்ந்த கூரைகளுடன்.

மயன்/2





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேச விடுதலைக்காய்

தனது வெண்ணிறக் கோட்டை கழற்றி சுவரிலே மாட்டிவிட்டு, காற்றாடியைச் சுழல விட்டு யன்னலோரமாயிருந்த மேசை அருகில் இருந்தவள் கண்களில் கறுப்பு நாளேடு தீயாய்ச் சுட்டது. சட்டெனத் திரும்பி யன்னலூடாய் வீதியை வெறித்தாள். உயர்ந்த அந்தக் கட்டடத்திலிருந்து பார்க்க வீதி மிகவும் அழகாய் காட்சியளித்தது. இரவு நேர வீதி பனி மூட்டங்களிடையே பலவண்ண ஒளிகளுடன் ரசிக்கக் கூடியதாக இருந்தபோதும் அவளால் ரசிக்க முடியவில்லை.

தங்கை போராட்டத்தில் இணைந்தது, தான் உற்றவர்களையும், உறவினர்களையும் பிரிந்து மொழிதெரியாத அந்நிய தேசத்திற்குள் புகுந்து கல்வி கற்பது போன்ற துயர நிகழ்வுகளால் கடந்த மூன்று வருடங்களாக அனுபவித்துவரும் துயரின் வடிகாலாய் முன்னைய தன் கைவரிசைகளை மீட்டுவரும் நாட்குறிப்பேடும் ஒரு வாரகாலமாக தீயாய்ச்சுட்டது.

மெல்லத் தன் நாட்குறிப்பேட்டைத் திறந்தவள் இதழ்களைத் தட்டிக்கொண்டேயிருந்தாள். வெள்ளைத் தாழ்களில் அவள் முத்தெழுத்துக்கள் ஜொலித்துக்கொண்டிருந்தன. தன் தேசத்திற்காக, தன் இனத்திற்காக உரிமையோடு தன் பேனாவை தலைகுனியவைத்து, தன் மனதைத் தன் உணர்வுகளை நிமிரவைத்த எழுத்துக்களவை. அன்றொருநாள் அவை எல்லாம் பொன் எழுத்துக்களாய் கல்வெட்டுக்களாய் பொருள் சுமந்து பெண்மையையே தலைநிமிர வைப்பதாய் இருந்ததென்பது உண்மை. ஆனால், இன்று ஊமை வார்த்தைகளாய், தண்ணி இல்லா மீனாய், தேசம்விட்டு தேசம் வந்து செத்துக்கிடக்கின்றது.

இடைவெளி இல்லாத கருத்து நிறைந்த கவிதைகளும், கதைகளும் என்றுமே மனதைக் கவரக்கூடியவை. அவள் கண்களில் நீர் திரையிடப்பட்டிருந்ததால் முத்தெழுத்துக்களெல்லாம் ராட்சத மிருகங்களாய் வந்து வந்து போயின. இத்தனைக்கும் அவள் தங்கையின் மடல்தான் இதயத்தையே தொட்டது. கண்ணீர்த் துளிகள் முத்து முத்தாய் பிறப்பெடுக்கத் தொடங்கின. கண்கள் சோரத் தொடங்கின. விரிந்த இதழ்களிடையே முகம் புதைத்தாள். அவள் மனதில் எதிரொலியாய் தங்கையின் குரல் ஒலிக்கத் தொடங்கியது.

அன்பான அக்கா,

மூன்று வருடங்களின் பின் எழுதும் முதல் கடிதம். உன் எழுத்துக்களால் உந்தப்பட்டே எழுதத் தொடங்குகின்றேன். எங்கள் இலட்சியம் பெறும்வரை எங்கள் நலம் பற்றி அறிந்துகொண்டுதானிருப்பாய்.

என்னை வீட்டுக்கு வரும்படி எழுதியிருந்தாய்! உன்னை என்னால் நம்பவே முடியவில்லை. இப்பொழுதும் அவை உன் அடிமனதிலிருந்து எழுந்த வார்த்தைகள் என்று நம்பமாட்டேன்.

அதிருக்கட்டும், அக்கா உன் உணர்வுகளால் எழுந்த வார்த்தைகளால்தான் நான் உந்தப்பட்டேன். அதற்காக வருத்தப்படுகின்றேன் என்று நினைத்துவிடாதே, பெருமைப்படுகிறேன். விடுதலையுணர்வும் சுதந்திர வேட்கையும் உன்னால் எனக்குக் கிடைத்த இரு முத்துக்கள். இன்று உன் கற்பனை வளத்தையும், யதார்த்தத்தை நல்ல சொற்களால் வழங்கும்



உன்பேனாவையும் எண்ணி வியந்துகொண்டிருக்கிறேன்.
உன் எழுத்து
வடிவங்களுக்கெல்லாம்
உண்மை வடிவம்
கொடுத்துக்
கொண்டிருக்கிறேன்.

என் பிரிவு உன் இதயத்திற்கு பேரிடியாய் விழுந்திருக்கலாம். ஆனால், எம் இனத்திற்கே பேரிடி விழுந்து கொண்டிருப்பதை நீ தானே எனக்குணர்த்தினாய்.

நீ எழுதிய சிறுகதை ஒன்று நினைவிருக்கிறதா? பெண் விடுதலைக்காக பேனாவிலேயே போர் தொடுத்தாயே நினைவிருக்கிறதா? என்னால் ஆயுதமேந்த முடிகிறது ஆயுதமேந்துகிறேன். உன்னால் பேனாவினாலேயே போர் தொடுக்கமுடியும். பேனாவை ஏந்தி புரட்சிக் குரல்கொடு. உன் இலட்சியப் பயணத்தில் வெற்றியை ஈட்டி மக்களுக்காய் மகத்தான சேவை செய், உன்னால் உன் கல்வியால் சிறந்த மருத்துவராக முடியும். உன் அருங்குணமும் சேவை உணர்வும் எம்மினத்திற்காய் உன்னை அர்ப்பணிக்கச் செய்யும். என்னால் போராட முடியும். போராட வலு இருக்கின்றது. உன் எழுத்தாற்றலுக்கு நான் தந்த பரிசாய் என்னை புலியாக ஏற்று மகிழ்ச்சி கொள். உன் தங்கை வரிப்புலியாய் போர்க்கருவியுடன் வீறு நடைபோடும் போராட்ட நிஜத்தை வர்ணித்து புரட்சிக் கவியெழுது.

உன் தங்கைக்காய் கல்லறையை காணமுடியாத தேசத்திலிருந்தாலும் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செய். உன் கவிதைப் பாக்களால் மாலையிடு. அவை எம் மக்களின் எழுச்சிக்கும், பெண் விடுதலைக்கும் உயிர் கொடுக்கும்.

அக்கா இதை உன்னால் முழுமையாக வாசிக்க முடிகிறதோ தெரியவில்லை. ஆனால், வாசித்து முடிக்கும்போது உன் கண்களில் நீர் வற்றியிருக்கும் என்பதை உணரமுடிகின்ற போதிலும், இதனை எழுதி முடித்தபோது, என் இதயம் வெளிச்சமாகி புது உலகில் பிரவேசிப்பதாய், வீரமாய் நான் உறுதி பெறுகிறேன். மீண்டும் உன் மடலுக்காய் காத்திருக்கும்.

உன் அன்புத் தங்கை.

அழகிய எழுத்துக்களால் வார்க்கப்பட்ட அந்த வரிகள் வரிசையாய் மனத்திரையில் ஓடிக்கொண்டிருக்க வார்த்தைகள் எதிரொலியாய் ஒலித்துக்கொண்டிருந்தன. வீதியில் கேட்ட வாகன ஒலியினால் திடுக்குற்றவள் மனதில் பல கேள்விகள், விடை தேட முயற்சித்தாள். 'இவளால் எப்படி முடிகின்றது' இவள் புதிய புயல், இரும்பையே பொடியாக்கும் பொறி, என் கற்பனையின் வடிவம். வாழ்த்தெழுத வார்த்தைகள்....?

கேள்விக்குறியுடன் தன் சிந்தனைக் கதவை மெல்லத் திறந்தாள். புதிய தேசத்தின் புயல்களின் நடுவே புது வேட்கையுடன் மூன்று ஆண்டுகளின் பின் தன் தேசத்திற்காகவும், தன் தங்கைக்காகவும் கற்பனையில் வார்த்தைகளை கோர்த்தவள் யதார்த்தமாய் எழுத தாள் எடுத்தாள். பேனாவால் வாழ்த்துக் கோலமிட்டாள். கண்ணீர்ப் பூக்கள் தாளைக் கோலமிட மீண்டும் மீண்டும் தன் தங்கைக்காய் தேசத்தின் மீட்பிற்காய், மக்களின் மீதான அன்பிற்காய் தன் சேவை உணர்வுடன் தானொருநாள் தாயகம் சேர்வதாய் எழுதிக்கொண்டே இருக்கிறாள் கண்ணீர்ப்பூக்கள் காய்ந்து போகும்வரை.

-மாவீரர் மேஜர் அமுதா
மாலதி படையணி.

# இது எத்த
# மழைகால

மழை பெய்தல் நன்று
மாரியில் மழை பெய்தல்
இன்னும் நன்று
நான் கடந்த ஒவ்வொரு மாரியும்
ஒரு வரலாறென்பேன்.
எனக்கு நினைவு தெரிந்த முதல் மாரியில்
காகிதக் கப்பல் செய்துவிட்டேன்
அடுத்து வந்த மாரிகளில்
இது சீனிக்கப்பல்,
இது அரிசிக் கப்பல்,
இது மாக்கப்பலென்று
வகை வகையாய் செய்துவிட்டேன்
கொழும்பிலிருந்து யாழ் வரும்
சரக்குக் கப்பல்கள்
என் வீடு கடக்கும் ஒவ்வொரு முறையும்
அடுத்த மாரிக்கான புதிதான
கப்பல் மொடல்கள் செய்துவைத்தேன்
அது ஒரு காலம்
அறியாக் காலம்
பின் வந்த நாட்களில்
சரக்குக் கப்பல்கள் போன வேளைகளில்
அரக்கர் கப்பல்கள் வந்தன
நெருப்பள்ளிக் கொட்டின
அந்த மாரியில்
நான் கப்பல் விடவேயில்லை
கொஞ்சக் காலத்தின் பின்
ஊரெல்லாம் பரபரத்தது
அக்கம் பக்கம் பார்த்துவிட்டுக்
குசு குசுத்தது
இரவில் கடற்கரை சலசலத்தது
அவர்களின் சிறு படகுகள்
வந்து போயின
எங்கிருந்தோ எதையெதையெல்லாமோ
பொதிகளில் கொண்டு வந்தார்கள்
எங்களூர் இளைஞர்கள்
படகேறிப் போனார்கள்
அவர்களின் படகுகள்
இரவில் மட்டுமே வந்து போயின
அலையைக் கிழித்துக்
குருவியெனப் பறந்தன
அவர்களின் வருகைக்கும் புறப்பாட்டுக்கும்
ஊரே காவல் காத்து
இது நடந்த ஒவ்வொரு முறையும்
ஊரின் பெரிசுகள்
பேசிக்கொண்டன
'பொடியள் வலுவிண்ணர்'
இதன் பின் வந்த மாரிகளில் நான்
சிறு படகுகள் விட்டேன்
வேகப் படகுகள்....
விசைப் படகுகள்....
வெடிப் படகுகள்...
எனக்கு
எல்லாமே புரிந்த மாரியொன்றில்
கப்பல் விடும் கனவுகள் கலைந்து
கூடுவிட்டு நான் பறந்தேன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# னயாவது

? அதன்பின் வந்த மாரிகளிலெல்லாம்
தோழர்களோடு நனைந்தேன்
நாங்கள்
வான மழையோடு
குண்டு மழையிலும் குளித்தோம்
குருதியாற்றில் தோய்ந்தோம்
மழை காலங்களில் மண் செழிக்க
வெற்றிக் கதிர் அறுக்க
எங்கள் உயிர்களைப் பயிரிட்டோம்
மழை நீராலும் கண்ணீராலும்
விளக்கெரித்தோம்
மழை காலம் தந்த தலைமகனுக்கு
வாழ்த்துரைத்தோம்
இத்தனைக்கும் நடுவிலும்
ஊரை நினைத்தோம்
மழை பெய்தல் நன்று
மாரியில் மழை பெய்தல்
இன்னும் நன்று
ஊரிருந்த அழுக்கெல்லாம்
வெள்ளமள்ளிப் போகும்
பச்சை மரங்கள் குளித்து விட்டு
பளிச்சென்று சிரிக்கும்
ஏருழுத வயலெங்கும்
நீர் தேங்கி நிற்கும்
ஊர் பிரிந்து தன் வயலோடு
உறவறுந்த உழவன் ஒருவன்
புதுக்காடு வெட்டிப் புதிரெடுப்பான்
ஒடுக்குமுறை அரசை வெல்ல
ஒரு அன்னை தன் கொல்லையில்
சிறு பயிர் நாட்டுவாள்
பூக்களை நேசிக்கும் ஒருத்தி
புதிய செடிகள் ஊன்றுவாள்
எங்களூர் சிறுவர்கள்
இப்போதுதான்
கப்பல் விடப் பழகுவார்கள்
மழை பெய்தல் நன்று
பக்கத்து அரணிலிருக்கும் தோழி
பதுங்குகுழியுள் புகுந்த நீரை
பேணியால் அள்ளி வீசியவாறு
எனைப் பார்த்து கையசைக்கிறாள்
நேற்றுப் பெய்த மழை நீரை
இன்றள்ளி வீசிறாள்
இன்று பெய்யும் மழை நீரை
நாளை அள்ளி வீசுவாள்
அவள் எதற்கும் அஞ்சாள்
மழை நன்றாகப் பெய்தால்
'முன்னுக்குப்' போய் பார்க்கலாம்
என்கிறாள்
மழை பெய்தல்
அதுவும் மாரியில் பெய்தல் நன்று
ஊருக்கெல்லாம் இது
வருடமொருமுறை வரும்
வடகீழ் பருவப்பெயர்ச்சி மழை
திருவள்ளுவர் ஆண்டின்
2031 வது மழை
எமக்கு இது
ஜெயசிக்குறு ஆண்டின்
மூன்றாவது மழை.

-போராளி மலைமகள்
மாலதி படையணி



**ஓயாத அலைகள் - 03 ஓயாத அலைகள் - 03**

# ஓயாத அலைகள் -03 தொடர் நடவடிக்கையில் வன்னியின் தென்முனையில் மாவீரராகியவர்கள்

ஓயாத அலைகள்-3 நடவடிக்கையில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெயர்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு இதழிலும் வெளியிடப்பட்டு வந்தன. இவ்வரலாற்று நடவடிக்கையில் வீரச்சாவடைந்தவர்களின் பூரணமான விபரங்கள் மீண்டும் தொடராக வெளியிடப்படுகின்றன.

**மணலாறுப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில்26.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**மேஜர் நல்லரசி**
பாலசுப்பிரமணியம் விமலலோஜினி
02ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லை
(இலகடி, வலந்தலை, காரைநகர், யாழ்)

**2வது லெப். அகரவெழில்**
ஆனந்தமூர்த்தி தயாளினி
இல: 171, புன்னைநீராவியடி, விசுவமடு
(4ம் வட்டாரம், மண்கும்பான், வேலணை)

**அம்பகாமம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 09.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**கப். மதி**
மார்க்கண்டு மோகனதாஸ்
இல: 11, கென்ஸ்மன், வீதி, சாவகச்சேரி, யாழ்
(வலந்தலை, காரைநகர் வடக்கு, காரைநகர், யாழ்)

**பனிக்கநீராவியடி பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 09.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**2வது லெப். சின்னக்கோபி**
பசுபதிப்பிள்ளை இராசகுமார்
தயாபரன் குடியிருப்புத்திட்டம்,
இரணைஇலுப்பைக்குளம், வவுனியா.
(கரப்பைக்குளம், செட்டிகுளம், வவுனியா)

**பன்றிக்கெய்தகுளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 10.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**மேஜர் பாலசிங்கம் (செறான்)**
சிமைஸ் பெனடிற்
இல: 10, செல்வபுரம், முல்லைத்தீவு

**கப். செந்தூரன்**
சிவானந்தம் சிவாகரன்
6ம் வட்டாரம், ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு, முல்லை (வீமன்காமம், தெல்லிப்பளை, யாழ்)

**கப். தவம்**
கதிர்காமர் தவராசா
தொட்டியடி, விசுவமடு, கிளிநொச்சி
(கோவில்வயல், இயக்கச்சி, யாழ்)

**லெப். பாவண்ணன்**
இராமலிங்கம் சுரேஸ்
பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்
(மஸ்கெலியா, கண்டி)

**வீ. வே. ஒளியாளன்**
வீரக்குட்டி சித்திரவேல்
பனிச்சங்கேணி, வாகரை, மட்டக்களப்பு

**பன்றிக்கெய்தகுளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 15.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**கப். வாசன்**
முருகமூர்த்தி யோகேந்திரன்
இல: 195, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி
(குட்டி வீதி, கெருடாவில், சாவகச்சேரி, யாழ்)

**கப் .இதயன்**
இராசேந்திரன் இளங்குமரன்
பத்தாவளை, இளவாலை, யாழ்

**லெப். கண்ணன்**
செல்வரட்ணம் செல்வக்குமார்
தண்ணீரூற்று, ஒட்டுசுட்டான், முல்லை
(கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், முல்லை)

**லெப். அம்பலவாணன்**
விசுவரட்ணம் சுதாகரன்
8ம் வட்டாரம், உப்புக்கிணத்தடி, அக்கராயன்
(இல: 17, மாதிரிக்கிராமம்,
சிலாவத்தை, முல்லை)

**வீ.வே. இசைவேந்தன்**
சுவேந்திரன் பிரபாகரன்
நீலகண்டபுரம், தண்ணீரூற்று,
முள்ளியவளை, முல்லை
(மூளாய், சுழிபுரம், யாழ்)

**லெப். விதுசன்**
கந்தையா கேதீஸ்வரன்
5ம் யூனிற், யோகபுரம், மல்லாவி
(கப்பூது, கரவெட்டி, யாழ்)

**புளியங்குளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 10.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**வீ.வே. இலக்கியா**
பெருமாள் விஜயா
ஓமந்தை, வவுனியா

**புளியங்குளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 12.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**கப்டன் முருகன்**
பத்மநாதன் சுகுந்தன்
3ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லை

**புளியங்குளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 14.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**வீ.வே. ஈழம்**
முத்தையா லோகேஸ்வரன்
இல: 241, சோழன் வீதி, பல்லவராயன்கட்டு,
ஜெயபுரம், மன்னார்

**வீ.வே. அறிவழகன்**
சக்திவேல் குகேந்திரன்
சந்தை அருகாமை, வன்னேரிக்குளம்,
வன்னேரி
(154ம் கட்டை, செல்வபுரம், திருமுறிகண்டி,
கிளிநொச்சி)

**வீ.வே. முகுந்தன்**
தவராசா அருந்தவராசா
பாடசாலை அருகாமை,
கோட்டைகட்டியகுளம், அக்கராயன்
(சுழிபுரம், யாழ்)

**மண்கிண்டிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 11.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**கப். மலரோன்**
புலேந்திரன் கமலேந்திரன்
இல: 259, 3ம் யூனிற் மல்லாவி
(மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, யாழ்)

**மண்கிண்டிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 12.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**மேஜர் பிரியநேசன்**
சிவலிங்கம் கனகரத்தினம்
தாளையடி வீதி, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு

**கப். சர்க்கன்**
விநாயகமூர்த்தி யுவராசா
6ம் வட்டாரம், மில் வீதி, துறைநீலாவணை,
மட்டக்களப்பு

**லெப். லோகா**
மருதநாயகம் தவச்செல்வி
இல: 48, வன்னேரிக்குளம், கிளிநொச்சி

**வீ.வே.தென்னிலன்**
தம்பிப்பிள்ளை சற்குணம்
குணாளை, செவனப்பட்டி, மன்னம்பிட்டி,
பொலனறுவை

**வீ.வே. கன்னியன்**
கண்ணப்பன் சத்தியசீலன்
களுவங்கேணி வீதி, பாலச்சோலை,
வந்தாறுமூலை, மட்டக்களப்பு

**வீ.வே. அன்ரன்**
சிவன் மகேந்திரன்
ராசபுரம், கரடியனாறு, மட்டக்களப்பு

**வீ.வே. அருள்மதி**
செல்லையா ஜானகி
கீயூடெக், வீட்டுத்திட்டம், கைவேலி,
புதுக்குடியிருப்பு

**மண்கிண்டி பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 29.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**வீ.வே கமலினி**
சண்முகம் ஆனந்தவிஜிதா
நெத்தலியாறு, விசுவமடு
(உமையாள்புரம், பரந்தன்)

**வீ.வே. தமிழ்பிரியா (சுபிதா)**
தியாகராசா அம்பிகாவதி
அம்மன் கோவிலடி, வற்றாப்பளை,
முள்ளியவளை

**மண்கிண்டிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 04.12.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**வீ.வே. நிலானி**
நாகையா தேவநந்தினி
மயில்வாகனபுரம், பிரம்மந்தனாறு, விசுவமடு

**வீ.வே. சியாமளா**
இராமச்சந்திரன் சுமணலதா
பாலியாறு, ஒட்டங்குளம், துணுக்காய்,
மல்லாவி
(ஒதியமலை, நெடுங்கேணி, முல்லை)

**வீ.வே. இன்மொழி**
பாலகிருஸ்ணன் பாலறஜனி
காட்டுவிதி, தேராங்கண்டல், துணுக்காய்,
மல்லாவி
(இணுவில், யாழ்)

**வீ.வே. புரட்சிக்குயில்**
இரத்தினசிங்கம் சிவப்பிரியா
சந்திரநாயகி குடியிருப்பு, மருதங்குளம்,
புத்துவெட்டுவான், மல்லாவி
(திருநகர், கிளிநொச்சி)

**விளக்குவைத்தகுளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 12.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**கப். புரட்சிமாறன்**
இராசரத்தினம் வினோதன்
கச்சேரி முன் வீதி, இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு, முல்லை.
(இல: 78, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்.)

**மூன்றுமுறிப்புப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 12.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**வீ. வே. நவறஞ்சன்**
வைரமுத்து ஜீவரெத்தினம்
சந்திரன் கடை, களுவாங்கேணி -01,
செங்கலடி, மட்டக்களப்பு

**பாலம்பிட்டிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 16.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**வீ.வே. துர்க்காதரன் (ஜெயந்தன்)**
இந்திரன் ராசரட்ணம்
கிண்ணியடி, வாழைச்சேனை, மட்டக்களப்பு

**வீ.வே. குருநாதன்**
கணேசன் ஆனந்தராசா
சின்னவத்தை, வைக்கலை, மட்டக்களப்பு

**இரணைஇலுப்பைக்குளம், பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 17.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**2வது லெப். புயல்வீரன்**
மோசஸ் வனராஜா
எஸ். ஆர். சந்தி, பாண்டியன் குளம்,
நட்டாங்கண்டல்
(கரப்புக்குத்தி, கனகராயன்குளம்)

**2வது லெப். பதுவன்**
சத்தியாம்பிள்ளை அல்பிறட்றைசன்
அடைக்கலமாதா கோவிலடி,
பழையமாத்தளன், புதுக்குடியிருப்பு
(வெளிச்சவீடு, பருத்தித்துறை, யாழ்)

**இரணைஇலுப்பைக்குளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 18.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**கப். தயாபரன்**
தேவதாஸ் சிவகுமார்
வீரகத்திப்பிள்ளையார் கோவில், மரத்தடி,
திருமலை

**லெப். சிவநான் (சுபநாதன்)**
கதிரேஸ் தெய்வேந்திரன்
பிலாச்சோலை வீதி, வந்தாமூலை,
மட்டக்களப்பு

**வீ.வே. தணிமையாழன்**
தம்பிப்பிள்ளை ரதீகரன்
3ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லை

**மேஜர் செங்கோட்டையன்**
வேலாயுதம் கதிர்காமநாதன்
விளாங்குளம், கண்டி வீதி, திருமலை

**லெப். ரேணுதரன்**
செல்வநாயகம் ஜெயக்குமார்
கடற்கரை வீதி, களுதாவளை -04, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு

**இரணைஇலுப்பைக்குளம் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 20.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**வீ.வே. சண்முகா**
நல்லையா சந்திரகலா
சங்கிலித்திட்டம், மூங்கிலாறு, உடையார்கட்டு, முல்லை
(6ம் கட்டை, நிலாவெளி, திருமலை)

**வலையன்கட்டு பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 18.11.1999 அன்று வீரச்சாவடைந்தவர்கள்.**

**வீ.வே. காண்டீபன்**
சின்னராசா சுதாகரன்
இளங்கோபுரம், றெட்பானா, விசுவமடு
(பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி, யாழ்)

**கப். மரியநம்பி (கதிரவன்)**
ராகமணி மனோகரன்
காளி கோவில் வீதி, மாவடிவேம்பு,
மட்டக்களப்பு

**2வது லெப். கண்ணிலவன்**
பிரதான வீதி, மாவடிவேம்பு, சித்தாண்டி,
மட்டக்களப்பு

**வீ.வே. கார்விழியன்**
சின்னத்தம்பி நிசாந்தன்
வைரவர் கோவிலடி, பெண்டுகள்சேனை,
கிரான், மட்டக்களப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சுதந்திரத்தைத் தேடி...



'இன்பன் வீரச்சாவாம்'

இந்தச் சேதி செவிப்பறையில் மோதிய போது மனம் உண்மையை ஏற்க மறுத்தது. ஒரு கூட்டில் விடுதலை வேண்டி பரணிபாட இணைந்த நேசப்பறவை அவள்.

ஒரு கூட்டில் ஒன்றிணைந்து எம் இன்ப துன்பங்களில் கரம்கொடுத்த இனிய உயிர் அவள். வேங்கைகளிற்கு மரணம் எப்போதும் அருகிலே என்ற உண்மையினை உணர்ந்த பின்னும், இன்பநிலாவினது மரணம் இதயத்தை ஓயாது வலிக்கச் செய்கின்றது.

எப்ப நடந்தது? எப்படி நடந்தது?

விடையாக நீட்டி நிமிர்ந்து அமைதியாகப் பெட்டியில் ஒளி சிந்திய முகம் சாட்சியானது.

இன்பநிலா! அவள் எம்மிடம் விட்டுச் சென்ற ஞாபகச் சுவடுகள் ஏராளம். அவள் இல்லை என்று பொய்யுரைப்பதைவிட்டு, தேச விடுதலையின் எல்லைகளிற்கு அப்பாலும் எம்மோடு வாழ்வாள் என்பதே உண்மை.

நான்கடி இரண்டு அங்குலம் உயரம் கொண்ட உருவத்துள் எத்தனையோ தீராத கனவுகளும், இலட்சியங்களும் கனன்று கொண்டே இருந்தது.

வீர்ரென்று காற்றைக் கிளித்து தெருப்பு முதியையெல்லாம் வாரி இறைத்தபடி செல்லும் அந்த மோட்டார் சைக்கிளை ஓடுபவர் யாரென்று பார்த்தால், அது நிச்சயம் இன்பநிலாவாய்த் தானிருக்கும்.

(Win) வின்னில் ஏறி இருந்து சமநிலைப் படுத்த சிரமப்பட்டு அப்படியும் இப்படியும் ஆடி கிக்கரை சிரமப்பட்டு உதைத்து ஓட வெளிக்கிட்டாள் என்றாள், பின்னால் இருப்பவர்கள் அவளையோ அல்லது மோட்டார் சைக்கிளில் எட்டிப் பிடிக்கக்கூடிய எதையாவது இறுக்கிப் பிடித்திருப்பார்கள். பள்ளம் திட்டியெல்லாம் ஒரே மாதிரியாக ஓடி பின்னிருப்பவர்களை பயப்படுத்துவது அவளது விரும்பிய பொழுதுபோக்கு.

'அவளிற்கு விண்ணென்றால் பிளேன் ஓடுறது என்ற நினைப்பாக்கும்' பின்னால் இருப்பவர் இறங்கியபின்தான் சொல்வார். பிளேன் ஓடும் சாதனையில் வீதியில் அவள் சந்தித்த சிறு விபத்துக்கள் பல.

'என்ன மாதிரி இன்பன் காவல்துறையினர் உன்னைத் தேடி வந்திருக்கினம்' என்று அந்த முகாம்காரர் பம்பலடிக்கும் போது விழியை உருட்டி 'நானில்லை' என்று சொல்லுங்கோ என்று சொல்லும் அவளது முகபாவம் இன்றும் எம் முன்னே நின்றாடுகின்றது.

குளப்படி என்று அவளை சொல்வதை விட, குறும்புக்காரி என்று சொல்லலாம். எப்போதும் எதையாவது திருகிக்குடைந்து நிமிர்த்தி சரி செய்வது அவளது பணியே தான்.

ஒருமுறை கணக்குப் பார்ப்பதற்காக கல்குலேற்றரை எடுத்து இயக்க முற்பட்ட போது அவ்வாழி அதற்குரிய இடத்தில் காணவில்லை, யார் செய்தது என்று மகாநாடு நடாத்தும் தேவை அவர்களிற்கு இருக்கவில்லை. அதை செய்தது இன்பன் என்று அனைவருக்கும் தெரியும்.

சின்னஞ்சிறிய அவ்வுருவத்துள் மூழும் கோபம், அந்தக் கோபத்தால் ஏற்படும் விளைவுகள் எல்லாமே ஓய்ந்த பின் தன்னையும் நொந்து, பிறரையும் சமாதானப் படுத்தும்போது சிறு குழந்தையாகி நிற்கும் அந்த இன்பநிலாவை எண்ண, எழுத வேதனைதான் மிகுதியாகின்றது.

நித்திரை கொள்வது என்றால் அவளிற்கு விருப்பமான செயற்பாடாகும். அதற்காக அவள் எதைப் பற்றியும் பொருட்படுத்தவே மாட்டாள். தொலைத் தொடர்பு கல்வி கற்கும் காலத்தில் நித்திரை விழித்து படிக்கக் கஷ்ரப்பட்டு பொறுப்பாளரிடம் உண்மையைக் கூறி நித்திரைக்குச் செல்வாள்.

எதற்கும் உண்மையை பேசுவது அவளது பண்பு. எந்தச் செயற்பாடு என்றாலும் பயம் இன்றி உடனே செய்யும் போர்க்குணம் உடையவள்.

1994ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மகளிரின் ராடார் நிலையம் ஒன்று உடுத்துறைப் பகுதியில் அமைந்திருந்தது. அங்கு கடமை புரிந்தவர்களில் இன்பநிலாவும் ஒருத்தி.

இன்று ஓயாத அலைகள் -03இல் மீட்கப்பட்ட வெற்றிலைக்கேணி, அன்று எதிரியின் தளமாக இருந்தது. அந்தத் தளத்திற்கு கடல் வழியாக விநியோகத்திற்கு வரும் கலங்களை அவதானிப்பது அந்நிலையத்தின் பணி.

தொடர்ச்சியான அவதானிப்பில் தரையிறங்கும் கலம் ஒன்று குறிப்பிட்ட பகுதியில் தரை தட்டுவது அவதானிக்கப்படுகின்றது. அதனை உறுதிசெய்ய வேண்டும். எதிரியின் நிலைக்கு அருகே சென்று வரவேண்டும். எதிரியின் நிலையிலிருந்து நூறு மீற்றரில் அவதானிக்கலாம் என்று சொன்னபோதும், இன்பநிலா எதிரியின் காவல் நிலையிலிருந்து இருபது மீற்றர் வரைசென்று அவதானித்து வந்தாள்.



கடற்புலி மேஜர் இன்பநிலா

அவள் எடுத்து வந்த தரவின்படியே பின்னாளில் அந்த தரையிறங்குக்கலம் தாக்கப்பட்டது. அந்த திறமையான செயற்பாட்டை தலைவர் அண்ணா, அவர்களை பாராட்டி மோட்டார் சைக்கிள் ஒன்று அந்நிலையத்தினற்கு வழங்கினார்.


1991 காலப்பகுதியில் விடுதலைப்போர் புதிய உத்வேகத்துடன் செயற்பட்ட நேரம். இன்பநிலாவினது மனதுள்ளும் விடுதலைக் கரு துளிர்விடத் தொடங்கியது. போரின் தாக்கத்தை உணராதவளாயினும் தனக்குரிய கடமையொன்று விடுதலைப் போராட்டத்தில் இணைவதன் மூலம் நிறைவேற்ற முடியும் என முடிவு எடுத்தாள்.

அவள் இணைந்த காலப்பகுதியில் ஆகாய, கடல் வெளிச்சமர் முனைப்புடன்

# இவ(ர்க)ள் புறநானூற்றுக்கு மேல்

**12.04.1997** ஜெயசிக்குறு சமர்முனை காலைவேளை மன்னகுளத்தில் நாம் நிலைகொண்டிருந்த முன்னணிக் காப்பரண்களை ஊடறுத்து சிங்களத்தின் சிறப்புப் படையணியான கொமாண்டோப் படையணி உள்நுழைகின்றது. சில நூறு மீற்றர்களுக்கப்பால், மற்றும் ஒரு அணி உடைத்து உள்நுழைய முயற்சிக்கின்றது. உக்கிரமான சமர்முனை ஒன்று உருவெடுக்கின்றது.

அவள் அந்தக் காப்பரணில் தனியாகவே நின்றாள். வீரச்சாவடைந்த தோழிகளின் வித்துடல்களை காவலரணுக்குள் தூக்கிப் போட்டபடி முன்புறமாக தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தவள், காப்பரணுக்குப் பின்னால் 30 மீற்றரில் எதிரிகள் நிலைமையை அறிந்து பின்புறமாக துப்பாக்கியைத் திருப்புகிறாள். அருகருகே இருந்த காவலரண்களின் தொடர்புகள் அற்றுப்போன நிலை தொலைத்தொடர்புச் சாதனங்கூட அவளிடம் இருக்கவில்லை.



கூடிநின்ற எதிரிகளை நோக்கி சுடத் தொடங்கினாள். மன்னகுளமே அதிர்ந்து கொண்டிருந்த அந்த வேளை, அவளும் அவளுடைய துப்பாக்கியும் வியத்தகு நிதானத்தையே வெளிக்காட்டிக் கொண்டிருந்தன. அவள் நின்றிருந்த காப்பரண் சூழல் எதிரியின் தாக்குதலால் துவம்சம் செய்யப்பட்டது. சிறிது நேரத்தில் அவளது செவிகள் எந்தச் சத்தத்தையும் உணர முடியாத நிலைக்கு உட்பட்டது. ஆனாலும், மனதில் உறுதி, கண்களில் கூர்மை, கைகளில் வலிமை சேர்ந்து எதிரியை எமலோகம் அனுப்பிக் கொண்டிருந்தன. தனது துப்பாக்கியில் ரவை முடிந்தபோது வீரச்சாவடைந்த தோழிகளின் கோள்சரில் இருந்த ரவைகளை எடுத்து தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தாள்.

நேரம் நடுப்பகலைக் கடந்து சூரியன் மேற்கு நோக்கி சரிந்து கொண்டிருந்தான். ஆனால், சமர் இன்னும் ஓயவில்லை. தாகம், பசி, கந்தகப்புகையின் வாசம், தனிமை, இருந்தும் தன்நிகரில்லாத் தலைவனால் ஊட்டப்பட்ட உணர்வு விதையாகிப் போனவர்களின் தியாகம், தாய் மண்ணில் எதிரி என்ற கோபம் என்பன அவளில் அசையா உறுதியை ஏற்படுத்திவிட்டிருந்தன.

நேரம் 3.00 மணியை தாண்டிவிட்டிருந்தது. அனைத்து ரவைகளையும் அவள் அடித்து முடித்துவிட்டதை உணர்கிறாள். எஞ்சியிருப்பது அவளிடம் கைக்குண்டு ஒன்றுதான். இன்னும் எதிரிகள் முற்றாக அழிந்துவிடவில்லை. இந்தக் கடைசி ஆயுதத்தால் தன்னையே அழித்துவிடும் முடிவிற்கு வருகிறாள். ஆயினும் எதிரியையும் சேர்த்தே அழித்துவிட உறுதிபூணுகிறாள். அருகில் எதிரி வரும்வரை பொறுமையாகக் காத்திருக்கத் தொடங்குகிறாள்.

அருகில் வந்தவர்கள் எதிரிகள் அல்லர். எம் சகோதரர்களே! சிதறிப் போயிருந்த எதிரிகளை சின்னாபின்னமாக்கிவிட்டு அவர்கள் அவளருகே வந்தார்கள். காலை முதல் மாலை வரை தனித்து நின்று கடைசி ரவை வரை சண்டையிட்டு இறுதியில் தன்னையே அழிக்க தன் கைக்குண்டுடன் நின்ற அவளை ஆச்சரியத்துடன் நோக்கினார்கள்.

இவள் ஒருவள் அல்ல இப்படி எத்தனையோ பேர். எப்படி முடிகிறது. இவர்களால், வழிகாட்டும் உறுதிமிக்க தலைமை, வித்தாகிப்போன வீரர்கள், இன்னல் சுமக்கும் எமது மக்கள்.

'சென்றுவா மகனே வென்றுவா' என்றும் சென்றுவாருங்கள் வென்றுவாருங்கள் என்றும் புதல்வர்களையும், புருசர்களையும் வாழ்த்தி போருக்கனுப்பிய பெண்களை வீரப்பெண்மணிகள் என்று புகழ்ந்துரைக்கின்றது புறநானூறு. ஆனால், தமிழீழக் களங்களிலோ பெண்கள் 'புதியதொருபுறம்' படைத்து நிற்கிறார்கள். போய்வா என்ற அன்றைய காலம் போய், எல்லோரும் வாருங்கள் இணைந்து போராட என்று சமர்க்களத்தில் நின்று எம்மவர்களை அழைக்கிறார்கள்.

இன்று தரையில் மட்டுமன்றி கடற்புலியாய், கரும்புலியாய் களத்தில் சாதனை படைக்கும் இவர்கள் அன்றைய புறநானூற்றுக்கு மேல்.

**–மாவீரர் மேஜர் கனீபா**

## கால் பதித்து விரைவாக

விழியோரம் நீர் கசிய
விரைந்தனுப்பி விடைகொடுப்பான்
தெளிவான முடிவோடு
திரும்பாது அடிவைப்பான்
பெரும்பகையின் வெற்றியோடு
பெருவெளியில் கலந்திடுவான்
பெற்றவரோ நெஞ்சுருக
பெரும் பேறு என நிமிர்வார்!

தாய் மண்ணின் உயிர்மூச்சு
தமிழீழப் பெரும் காற்று
சேய் அவன் திருநாமம்
திக்கெட்டும் பவனிவரும்
கரும்புலிகள் மா ஈகம்
காவியத்தினுயர் யாகம்
அரும்புகின்ற தமிழீழம்
அவை என்றும் பறைசாற்றும்!

பருவமது பொங்கிவர
பால்முகமோ இறுகி நிற்கும்
உருவமது உருமாறும்
உறுதியிலே உயிருறையும்
கரும்புலிகள் கதை எழுத
கைகளிலே நரம்புறையும்
காற்றோடு கலந்துவிட்ட
கரும்புலிகள் சுவட்டினிலே
கால் பதித்து விரைவாக
கண்டிடுவோம் விடியலை நாம்!

-போராளி இனியவள்
கேணல் கிட்டு பீரங்கிப் படையணி

www.tamilarangam.net



நடைபெற்றுக்கொண்டிருந்தது. அச்சமரில் விழுப்புண்ணடைந்தவர்களை பராமரிக்கும் பணி இன்பநிலாவிற்கு கொடுக்கப்பட்டிருந்தது.

விழுப்புண்ணடைந்து வேதனையில் முனகிய போராளிச் சோதரிகளிற்கு அவள் இனிய தாயாக, தங்கையாக, அக்காவாக, தோழியாக வெவ்வேறு வடிவங்களில் அவர்களின் வேதனைக்கு ஏற்ப செயற்பட்டாள்.

'கால் வலிக்குது' என அழும் போராளியின் காலிற்கு விசிக்கி, ஆறுதல் கூறும் அவளை மறுநிமிடம், 'தலைக்குள்ளை குத்துது' என்று கத்தும் போராளியின் முன் காணலாம்.

'எங்கட போராளிச் சகோதரங்களில் நான் எவ்வளவு ஆழமாய் பற்று வைத்துள்ளேன் என்றதை அவர்களை பராமரித்ததில் இருந்துதான் உணர்ந்து கொண்டேன்' எனச் சொல்வாள்.

போர் அதன்பால் வந்த பந்தங்கள், அவர்கள் விட்டுச்சென்ற அழியா நினைவுகள் அதில் அழிவில்லை என்பதை இன்னும் இன்பநிலா உணர்த்திக் கொண்டிருக்கிறாள்.

1995 காலப்பகுதியில் இன்பநிலாவின் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்று மாதகல் பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது. எதுவும் அவசியமான பொருட்கள் எடுக்க வேண்டுமாயின் தொண்டமானாற்றுப் பகுதியில் அமைந்திருந்த பிரதான முகாமிற்குத்தான் வரவேண்டும்.

1995.10.01 அன்று யாழ். குடாநாடு விடியலின் இனிமையை தொலைத்துக் கொண்டே பிறந்தது. கூவிவரும் எறிகணைகள் அச்சுவேலிப் பிரதேசத்தை உலுப்பிக் கொண்டிருந்தது.

இன்பநிலா காலை தொண்டமனாற்றிற்கு வல்லைப் பாலத்தாலே வந்தாள். அப்போது அப்பாலம் அமைதியாய் தானிருந்தது. மதியம் இரண்டு மணிக்கு திரும்பவும் அப்பாதை வழியே அவள் திரும்பிக் கொண்டிருந்தாள். அமைதி, ஆள் நடமாட்டமற்ற அமைதியாக வல்லை வீதி காட்சியளித்துக் கொண்டிருந்தது. தூரே வெடிச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தது.

வேகமாக ஓடிய பிக்கப் சாரதிக்கு, இன்பநிலா சொன்னாள் 'பாலத்திலை செல் வீழ்ந்து பாலம் உடைந்திருக்கும் மெதுவாக பார்த்து ஏத்து' அவள் கூறிய மறுகணமே கூவி வந்த லோவொன்று அவளிருந்த அருகில் வெடித்துச் சிதறியது.

சிதறிய இரும்புத் துண்டொன்று அவளது கையை சீவிக்கொண்டது. காலிலும், இடுப்பிலும் பலமான காயம். அந்த அதிர்ச்சித் தாக்குதலில் இருந்து மீளும் முன்பே சிறீலங்கா இராணுவத்தினர் இவர்களை நோக்கி சுட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவ்வேளையில்கூட நிதானம் தவறாமல் இன்பன் சாரதிப் போராளிக்கு துணிவூட்டினாள்.

'பயப்படாமல் ஓடு அண்ணாவை நினைச்சுக்கொண்டு ஓடு, ஓட இயலும்மட்டும் ஓடுவம் ஏலாது போனால் குப்பி கடிப்பம்'

ரயர் ஒன்று ஓட்டையாகி இருபது மைல் மணி வேகத்தை தாண்டி ஓட முடியாத அந்தச் சூழலில்கூட இன்பநிலா தீர்க்கமான முடிவெடுத்தாள்.

அந்தச் சூழலில் வல்லை பாலம் தாண்டி அவ்வளவு இராணுவத்தினரையும் தாண்டிய பின்பு அவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

சுற்றிவளைத்து சூழ நின்று இலக்குத் தவறாமல் சுடமுடியாத சிறீலங்கா இராணுவப் படையை எண்ணி நகைத்து வந்து, அவர்களை மீண்டும் ஆவரங்கால் சிவன் கோவிலடியில் வைத்து இராணுவத்தை வழிமறித்தடித்து உறுதியை உரமாகக்கொண்டு வெற்றியுடன் வந்தார்கள் இன்பநிலாவும் அந்தச் சக போராளியும்.

'கரும்புலியாய் போக வேணும்' அவருள் பர்ணமித்த கனவு அது, அது நிறைவேற வேணுமென்று அவள் துடித்த துடிப்பு அதற்காக அவள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம்.

இன்பநிலா ஓர் ஆளுமையான பொறுப்பாளரும்கூட. அடங்க மறுக்கும் பிள்ளைகளின் மனநிலைகளிற்கு ஏற்ப அவர்களோடு பழகி, அவர்களது இதயங்களில் தனக்கென்றொரு இடத்தை பிடித்துவிடுவாள்.

தென்னங்கீற்றுகளின் சலசலக்கும் ஓசைகளை புறந்தள்ளிவிட்டு ஓயாது ஒலிக்கும் அலைகள், அலைகளில் முக்குளித்து மீளும் நண்டுகள், இத்தகைய சூழ்நிலையில்தான் இன்பநிலாவினது காவலரண் அமைந்திருந்தது.

ஒரு காலத்தில் ராடார் நிலையம் அமைத்து இன்பநிலா ஓயாது சுற்றித்திரிந்த அந்தப் பகுதி இன்று, எதிரியின் ஆக்கிரமிப்பில் சிக்கித்தவிக்கிறது. இந்தப் பூமியின் அவலம் அவளது ஆன்மாவினை உலுப்பிக் கொண்டேயிருந்தது.

அந்தக் காவலரண் பகுதியில் கடமை புரிந்தபோது அவள் ஒரு குழுத்தலைவியாகவே செயற்பட்டாள். அசைந்தால் தலையை சீவிச் செல்ல காத்திருக்கும் எதிரியின் சன்னங்கள், நடமாட்டங்களை கண்டுவிட்டால் ஓயாது கூவும் எறிகணைகள், கடலிலிருந்து தரையை நோக்கி எதிரிக் கலத்தின் தாக்குதல்கள் இத்தனைக்கும் மத்தியில் அவள் நின்றாள்.

ஊரை மீட்கப் போகும் உத்வேகத்தோடு அவள் கண் விழித்திருந்தாள். சக போராளிகளையும், பாதுகாத்திருந்தாள். நினைவுப் பதிவேட்டில் அடிக்கடி அருகே இருக்கும் அவளது மருதங்கேணி கிராமம் வந்துபோகும்.

இரு அண்ணாக்களின் மடியில் அன்புத் தங்கையாக அமர்ந்து, செல்ல மொழிபேசி விளையாடியதும் வந்துபோகும்.

இன்று இடம்பெயர்ந்து வன்னியில் எங்கோர் பிரதேசத்தில் அவளிற்காக அந்நிய தேசம் போகாமல் காத்திருக்கும் தாயின் இனிய முகம் வந்து மீளும்முன் அவளிடம் கண்ணீர் அரும்பு காட்டி மறையும்.

தான் அழுவதை ஒருவருமே அறியாமல் துடைத்து, புன்னகை சிந்தித் திரிவதே அவளது சிறப்பாகும். எல்லாமே இரட்டையாக கட்டி பள்ளி சென்றதும், நண்பிகளோடு கடற்கரை பார்க்கச் சென்றதும் நினைவினை ஆக்கிரமிக்கும்.

எதிரி ஏவும் குண்டு ஒன்றின் எதிரொலி அவளது கடமையின் வேகத்தில்கூட, 11.01.2000 அன்று எதிரிகள் ஏவிய பீரங்கிகளோடு பொழுது விடிந்துகொண்டது.

இரவும் நீண்ட நேரம் விழிப்புற்று காவலரண்களில் கடமைபுரியும் போராளிகளை பார்த்துவிட்டு, அப்பதான் வந்து அந்தக் காவலரண் அருகே குந்தினாள் இன்பநிலா. இப்பவும் அதே சிரிப்பு ஆரவாரம்.

இன்னும் சொற்ப வேளையில் விதையாகப் போகிறது அவள் உயிரென்று யார்தான் எதிர்பார்த்தார்கள். திடீரென இரைந்து வந்த எதிரியின் செல்லொன்று இன்பநிலாவிற்கருகே வெடித்துச் சிதறியது.

புகைமூட்டம் கலைந்தபோது இன்பநிலா எங்களின் நேசத்திற்குரிய இன்பன் நெற்றியில் குருதி கொப்பளிக்க அமைதியாக தேசத்தின் விடுதலைக்காகத் தன் பெயரை பொறித்துக்கொண்டாள்.

தொலைத்தொடர்புப் பிரிவில் அவள் பணியாற்றியபோது வானலை வழியே அவள் சேர்த்து வைத்திருந்த போராளிச் சோதர, சோதரிகள் அவளின் குரலை காணாது ஏங்கித் தவிப்பதையோ... இல்லாது போனால், இவளின் வரவிற்காக காத்திருந்த அன்புத் தாயின் கதறலோ, அவளை போரின்பால் நேசித்த எண்ணற்ற மக்களின் கண்ணீர்களையோ அறியாமல் இன்பன் வந்தாள்.

தேசத்தின் புதல்வியாக, மேஜர் இன்பநிலாவாக அவளிற்குரிய புன்னகையோடு வந்தாள்.

அவளை விதைகுழியிலிட்டு மண்போட்டு, பூப்போட்டு இறுதி வணக்கம் செய்தபோது இறுகிப்போனோம்.

இன்பநிலாவின் கனவுகளும், கடமைகளும் எமக்காக காத்துள்ளதை உணர்ந்து...

**-அலையிசை**

# அவனும் அவளும்

வியர்வையால் அவன் நனைந்து போயிருந்தான். எனினும் கைகள் இயந்திரமாய் இயங்கிக்கொண்டிருந்தன. 'தா மச்சான் நான் வெட்டிறன்' என்றபடி அருகில் நின்ற போராளி பிக்கானை கைமாற்றிக் கொள்கின்றான். கல்லுடன் பிக்கான் மோதும் ஒலி தொடர்கிறது. 60 எம் எம் எறிகணைகள் அடிக்கடி வந்து வீழ்ந்து வெடித்த வண்ணமிருக்கின்றன.

நெற்றியால் வடிந்து கண்களுக்குள் செல்ல முயன்ற வியர்வையை புறங்கையால் துடைத்து விட்டபடி அருகில் கிடந்த மரக்குற்றி ஒன்றில் வந்தமர்ந்து தன்னை சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டவன், பின்பாதை வழியாக யாரோ நடந்து வரும் 'அரவம்' கேட்டு அங்கு தன் பார்வையைச் செலுத்துகிறான்.


பக்கத்து காவலரண் போராளி நாதனுடன் இரு பெண் போராளிகள் வருவது தெரிகிறது. 'அவன்தான் கண்ணன்' என்று அவனைச் சுட்டிக் காட்டிவிட்டு நாதன் திரும்பிச் செல்ல, அப்பெண்போராளிகள் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தனர். கேள்விக்குறியுடன் அவர்களை நோக்கியவன் சட்டென எழுந்து கொள்கிறான்.

அவனருகே வந்துநின்ற அப்போராளிகளில் ஒருத்தி அவனையே வைத்தகண்வாங்காமல் பார்த்துக் கொண்டு நின்றாள். அவள் முகத்தில் விபரிக்க முடியாத உணர்வுத் தோன்றல்கள். அவன் அவளைவிட நல்ல உயரமாக இருந்தான். இன்றும் குழந்தைத்தனம் முழுதும் மாறிவிடாத முகம் அரும்பிக் கொண்டிருந்த அழகான மீசை.

அவள் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதை அவன் கண்டான். என்ன செய்வதெனத் தெரியாமல் தோழர்களிடையே நழுவிவிடப்பார்த்தவனை 'டேய் நான் உன்ர அக்காடா' என்ற குரல் தடுத்து நிறுத்தியது. இரு சோடி விழிகளும் நேருக்கு நேர் சந்திக்கின்றன. அவளின் குரல் தழுதழுக்கின்றது 'தம்பி நான் உன்ர அக்கா வசந்திரா' விழிகள் தழுவிக்கொள்ள கண்ணீர் கரை கடக்கப் பார்க்கின்றது.

'அக்.... அக்கா....'

'தம்பி'




சுற்றிவர வயல் வெளிகள், கொண்டல் காற்று தோகை விரித்து நடனமிடும் தென்னஞ் சோலைகள், குளக்கரையில் புல்மேயும் பசு, எருமைப் பட்டிகள், கோயில்கள், பாடசாலை என அழகும் வளமும் நிறைந்த சிற்றூரது.

எட்டு வருடத்திற்கு முந்திய அந்த இனிமையான நாட்கள் அன்பான பெற்றோர், பாசமிகு சுற்றம், வறுமையற்ற வாழ்வு, ஓடித்திரிந்த வழுக்கி விழுந்த வயல் பரப்பு, கோயில் திருவிழா, கூத்துக்களரி, பாடசாலை விளையாட்டு மைதானம் எல்லாவற்றுக்கும் மேல் அக்காவும், தம்பியும் ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருந்த அந்த அற்புதமான பாசம் 'இதுகள் இரண்டின்ர குழப்படி தாங்க முடியல்ல, என்னென்டு கேளுங்க' என்று தந்தையிடம் தாய் முறையிட்டாலும், எப்போதுமே கடிந்து பேசாத தந்தை, பிள்ளைகளுக்கு ஏற்ற அப்பன் என சலித்துக் கொண்டாலும் அக்கா–தம்பி தந்தை உறவில் இருந்த அந்த ஆழமான அன்பையிட்டு தாய் பெருமை கொள்ளவே செய்தாள்.

1991இல் அவள் க.பொ.த.சாதாரண தரத்தில் படித்துக்கொண்டிருந்தாள் அவன் ஆண்டு ஆறில் இருந்தான். இக் காலகட்டத்தில்தான் அயற் கிராமத்தில் அந்த இனப்படுகொலை சிறீலங்கா வெறிப்படையினரால் அரங்கேற்றப்பட்டது. அறுபதிற்கு மேற்பட்ட அப்பாவிகள் இவளின் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அவர்களது உறவுகள் என பலர்..... பாடசாலையே சோகத்தில் மூழ்கிக் கிடந்தது.

வகுப்பில் முதல் மாணவியான அவளின் சிந்தனைகளும் முதற்தரமானவையாகவே இருந்தன. காலத்தின் தேவையை கட்டாயத்தை உணர்ந்து கொண்டவளின் கால்கள் களம் நோக்கி விரைந்தன.

மரக்குற்றியில் இருந்து அவர்கள் எழுந்து கொள்கின்றனர். எட்டு வருட நினைவுகளை, நிகழ்வுகளை சில நிமிடங்களில் பரிமாறிக்கொள்ள முடியாதுதான், இருந்தும் அவர்கள் தத்தம் கடமைகளுக்கே முதலிடம் கொடுக்க வேண்டியிருந்தது.

'தம்பி உன்ன இத்தன வருசத்துக்குப் பிறகு சந்திக்கேக்க சந்தோசமாய்த் தான் இருக்கு, அதேநேரம் கவலையாயும் இருக்கு. எது எப்படியோ இயக்கத்துக்கெண்டு வந்திட்டாய் நிறைய சோதனைகள், கஸ்ரங்களை சந்திக்க வேண்டி வரலாம் எந்த நிலையிலும் நீ மனம் தளர்ந்து போயிடக்கூடாது, உன்ர துணிச்சலையும், திறமையையும் வெளிக்காட்டி நீ ஒரு முன்மாதிரியான போராளியாய் வரவேணும் எண்டதுதான் என்ர விருப்பம்' என்று கூறியவள் அவனது முகத்தை உற்றுப் பார்க்கிறாள்.

'நீ நிச்சயம் செய்வாய் எண்ட நம்பிக்கை எனக்கிருக்கு, நேரமாகுது போயிற்று வாரன் சந்தர்ப்பம் கிடைச்சால் பிறகு சந்திப்பம் ' என கூறியபடி அக்கா தன் பகுதி நோக்கி நடக்கிறாள்.

மீண்டும் பிக்கான் கைமாறுகிறது. அங்கு புதிய வேகத்துடன் கற்கள் பிளக்கப்படும் ஒலி அக்கானகத்தை ஊடுருவுகிறது.

**-போராளி**
**வஞ்சியூரான்**
**ஜெயந்தன்**
**படையணி**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அவனும் அந்த மாவீரர் நாளும்

கரிப்பட்டமுறிப்புப் பகுதியில் நிலையெடுத்திருந்த போராளிகள் அனைவருக்கும் நன்கு தெரியும் எச் சந்தர்ப்பத்திலும் நாங்கள் வணக்கத்திற்குரிய இல்லங்களுக்குச் சென்று அன்பான புனிதர்களுக்கு தீபம் ஏற்ற சந்தர்ப்பம் கிடைக்கமாட்டாது என்பதுதான். இதனால், திடசங்கற்பம்பூண்ட எமது போராளிகள் எதிரியின் நிலைகளிலிருந்து 300 மீற்றரில் வெகு சிறப்பாக நடத்த முடிவெடுத்தனர். நித்திய உறக்கத்திலிருக்கும் அவர்களது இல்லத்திற்கு போகாவிட்டாலும், யாருக்கும் எச்சந்தர்ப்பத்திலும் கிடைக்காத ஒரு பாக்கியம் போராளிகளுக்குக் கிடைத்தது. 05.10.97 அன்று இவர்கள் நிற்கும் பகுதி எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டது. கோபம் கொண்ட வேங்கைகள் இரவுடன் இரவாக கதைமுடிக்க சமரிட்டபோதும் இலக்கு எட்டப்படவில்லை. எதிரியின் தடைகளுக்கு முன்னும் தடைகளைத் தாண்டிய இடங்களிலும், இலக்கை எட்டிய இடங்களிலும் விழுப்புண்களுடன் குவிந்திருந்த இடங்களில் எறிகணைத்தாக்குதலாலும் கடைசி நிமிட நேரத்தில் அவர்கள் உச்சரித்த வார்த்தைகளும் நடந்தேறிய இடத்தில் தீபம் ஏற்றுவதானது அனைவருக்கும் கிடைக்காத பாக்கியம்தான். இதனால் மன நிறைவுடன் செயலில் இறங்கினர் போராளிகள்.

நவம்பர் 25ஆம் திகதி நிகழ்வுக்கான ஏற்பாடுகளை ஆரம்பித்தனர். எதிரியின் எறிகணைகளால் சின்னாபின்னமாகியிருந்த அந்தக் கிராமத்தில் ஓரிரண்டு தென்னைகளும் வாழைகளும் தப்பியிருக்கத்தான் செய்தன. இருந்தவற்றை வைத்து அவ்விடங்கள் வெகு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டன. ஒவ்வொரு போராளியும் தனது கைவண்ணம் பட்டிருக்கத் துடித்தனர். ஆங்காங்கே தேடி 50 வரையிலான தீபம் ஏற்றுவதற்கான சுட்டியும் எடுத்து வந்தனர். இவையிருந்தும் தீபம் ஏற்றுவதற்கு எண்ணெய் எங்கிருந்து எடுப்பதென கதைக்கும் போதுதான், ஓயாத அலைகள் -02இல் மாவீரனாகிவிட்ட கப்டன் இதயன் தானும், தில்லையும் தயாரித்துத் தருவதாகக் கூறி பணியில் இறங்கினார்கள். நவம்பர் 27ஆம் திகதி மாலை முன்னணிப் போராளிகள் நீராடிவிட்டு தீபம் ஏற்றுவதற்கான நேரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர். எண்ணெய் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த தில்லை, எண்ணெயை இன்னொரு போராளியிடம் அனுப்பிவிட்டு தான் நீராடுவதற்கு ஆயத்தமானான்.

தான் தயாரித்த எண்ணெய் தனக்கும் தீபமாக எரியும் என்பதை அவன் அறிந்து இருப்பானா? சக போராளிகள்தான் அறிந்திருப்பார்களா? நிச்சயமாக இல்லை. இவனைப் படைத்த இறைவனது வாசகத்தில் இவன் மாவீரன் என்ற பெயரை எடுப்பதற்கான நேரம் நவம்பர் 27 மாலை 5.10 ஆக இருந்திருக்கின்றது. நீராடிக்கொண்டு இருக்கிறான் தில்லை, ஐந்து வாளிதான் தண்ணீர் ஊற்றியிருப்பான், இரைக்காகக் காத்திருந்த எதிரி இரை கிடைத்ததும் நிதானத்துடன் சுட்டுவிரலை அசைக்கிறான். எமன் வருவதை அறியாத தில்லை ஆடாது அசையாது மலை போன்று நிற்கிறான். எமன் தட்டுகிறான் நெற்றியில், எதுவிதமான வார்த்தைகளும் சிணுங்கலும் அற்றவனாக உயிரற்ற உடலாக மாவீரன் என்ற நாமத்துடன் சரிகிறான் தில்லை.

மாலைக்கதிரவன் மறைகின்ற நேரத்தில், தீபங்கள் ஏற்றப்படுகின்றன. கண்ணீருடன் அன்று தீபம் ஏற்றிய வீரர்களில் இன்று கணிசமான வீரர்கள் மாவீரர்களாகிவிட்டனர். மேஜர் லெனின், கப்டன் இதயன், லெப்டினன்ட் நிலாந்தன் என அது தொடர்கிறது. அவர்கள் கனவுகள் இனிதாகும்.

**-போராளி அரங்கநாதன்**
**சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி.**

# ஒரு காவல் வீரனும் கவிதையும்

காவலரணில் நான் கண்விழித்திருக்கும் போது
கவிதாதேவி என்
கண்ணுக்கு தரிசனமாவாள்
கவிதையொன்றினை கருக்கொள்ள வைப்பாள்
கடதாசியைத் தேடுவேன்
அருகிலெல்லாம் கிடைக்காது
கையில் கருவி காவல் நேரம் எனக் கூறும்
கடமை கவி எழுத மறுக்கும்
மீண்டும் மீண்டும் சொற்கோவைகள்
என் இதயப் பரப்பில்
நீந்தி விளையாடும்
நிலவு என்னைப் பார்த்து மெல்லச் சிரிக்கும்
சிறு காற்றின் மெல்லிய அசைவும்
ஆயுதத்தை உசார் நிலைக்கு உயர்த்தும்
சருகுகளின் சரசரப்பு
புருவங்களை மேலும் உயர்த்தி விடும்
அருகே உறங்கும் தோழனின் குறட்டை ஒலி
கரடியை மனம்முன் நிறுத்தும்
இவற்றின் நடுவே
கவிதாதேவி என்னைக் கட்டியணைப்பாள்
உறவுகளை நினைத்து
உள்ளம் உருகும்
தூரத்தே மின்மினிப்பூச்சி பறந்துவர
திடீரென கண்ணீர்த்துளி ஒழித்துக் கொள்ளும்
கைகள் வெளிச்சத்தை நோக்கி உயரும்
நெஞ்சம் ஒருகணம் துடிக்க மறுக்கும்
பார்வைப் புலன்கள் உற்றுநோக்கும்.
ஏமாந்து போக
வாய் பூச்சியை திட்டிக் கொள்ளும்
மீண்டும் கவி கருக்கொள்ள முனையும்
எனினும்
அதை கடமை நேரம் கட்டுப்படுத்தும்
வழமை போல பொழுது விடியும்
ஆனால், கருக்கொண்ட கவி மட்டும்
எங்கோ மறைந்து போயிருக்கும்
கையில் பேனா எழுதத் துடிக்கும்
வார்த்தைகள் மட்டும் சிக்கித் தவிக்கும்
மூளை நரம்புகள் மௌனம் கொள்ளும்
எனினும் கரிய இருளில் கருத்தரித்த
அந்தக் கவிதை மட்டும்
கண்மூடித் துயின்று கொண்டிருக்கும்.

**-போராளி யாழ்வீரன்**

# வெள்ளைப்பனி

ஒளி உருகி பாலை மர இலைகளில் கசிந்து கட்பாவைவழி ஊடுருவி விழிகளின் திரையில் உணர்ந்தது. அது பச்சை-யா, சிவப்பா, நீலமா என்று தெரியவில்லை. ஒன்றல்ல பல மரங்கள் ஒளி உருகிக் கிடந்தன. ஒளி உருவங்கள் மங்கிக் கலங்கிப் புலப்படாது போயின. இதயம் குருதியை கூடுதலாக உள்ளிழுத்து வெளித்தள்ளிக் கொண்டது. மூளைக்கட்டி கூடுதலாகத் தூண்டக் கால்களின் இயக்கம் வலுத்தது. ஏதோ ஒன்று முதுகின் பின்னால்— எதுவென்று புரியவில்லை— ஒளி உருகிக் க்சியும் பாலை மரங்கள் மட்டுமே புலப்பட்டன. கால்கள் விரைவாக இயங்கின. தரையில்லை, பாதங்கள் செயலாகின. ஆனால் நகர்ச்சி யில்லை. இதயம் வலுவாக— விரைவாக சுருங்கி விரிந்தது. சுவாசம் சிக்கலானது. எல்லாமே விழிப்புலனிலிருந்து விலகின. வெள்ளையாய் மங்கிய மாளிகையொன்று பிரகாசித்தது. சட்டென்று எல்லாமே போயிற்று. கறுப்பு மண்டிய இருள் மூச்சு வாங்கினேன். பல நிமிடங்களில் ஆசுவாசமானேன். உடல் குளிரெடுத்தது. நிலமிருந்து சூழல் நீரை வழித்தெடுத்து தன்னை நிரப்பிக் கொண்டிருந்தது. உடல் குளிர்ந்திருந்தது. கையால் தடவினேன். அருகே மனைவி, குழந்தை— உடமைகள் யாவுமே உறக்கம் கொண்டிருந்தன. உள அமைதியில்லை. எனக்கும் அவர்களுக்கும்— அவைகளுக்கும் இனி உறக்கம் வராது. இருளில் நட்சத்திரங்கள் சிறிதும் பெரிதுமாக ஒளிக்கிக் கொண்டிருந்தன. உறை இருளில் விழிக்குஞ்சுகள் எதையோ தேடின. எதைத் தேடின?— புரியவில்லை. மரங்கள் பூதங்களாக நிற்க நடுவே ஓடிய ஆற்றின் எச்சமாக வெண்மணல் கீற்று மங்கலாகத் தெரிந்தது. மரங்கள் பிசாசுகளாய் அசைந்தன. இராட்சதத் தலைகள்— கைக்கிளைகள் விரிந்து அச்சமூட்டின. அவை எதையோ நினைவுக்குக் கொண்டு வந்தன. பயமுடன் விழிகளை மூடினால் அந்த உருவமற்ற கனவுத் துரத்தல் கிலியூட்டியது. கண்கள் மூடமறுத்தன. மூடினால் கனவுத்துரத்தல் திறந்தால் சூழலின் பயமுறுத்தல்.



தூரத்தே கந்தகப் பொதிகள் எரிந்ததால் ஏற்பட்ட பேரொலிகள் அதிர வைத்தன. காலப்பிரமாணம் மெதுவாகவே நகர்ந்தது. யோசிக்க எதையெல்லாமோ தெரிவு செய்யும் அவற்றை மீட்க மனம் மறுத்து விட்டது. அது பரபரப்புடன் நிகழ் நிலையிலேயே நின்றுவிட்டது. அடுத்த பிரமாணம் குறித்துக் கவலைப்பட்டது. மீண்டும் இதயத்தின் படபடப்பு அதிகமாக நெஞ்சு கனத்தது. பகல் வேளை இயக்கத்தால் மனைவியும் குழந்தையும் உறங்கிக்கொண்டிருந்தனர். மர அடிவேரின் உயரத்தில் உடைமுடைகளின் தலையணை. சூழ்நிலை மறந்த ஆனந்தத் தூக்கம் அது. ஆனந்தத் தூக்கமா அது?— அவர்களின் மனம்தான் அதைத் தீர்மானிக்க வேண்டும். எனக்கு மட்டும்தானா நரகமானது தூக்கம்?

என் மனநிலைக்கு உடன்பாடில்லாமல் இருள் உருகிக் கொண்டிருக்க ஒளி உறையத் தொடங்கியது. நிலநீர் நிறைந்ததால் குளிரான சூழலால் உடல் கிட்டியது. சூழல் பனியில் ஒளி நிலைத்தது. பக்கத்திலிருப்பதைக் காண்பது கூட கடினமாக இருந்தது. பனி முழுக்க விரிந்து கிடந்தது. இதனுள்ளும் அமைதியான உறக்கமா அவர்களுக்கு? தட்டி எழுப்பினேன். குளிர் உபாதையால் பொய் உறக்கம் கொண்டிருந்தது. அவர்கள் விழித்த போது கொண்டிருந்த தெளிவு உணர்த்தியது. நீரோடி மரங்கள் வேர்களை அகத்தின் வெளியே கொண்டு வந்திருந்தன. சுற்றம் பனிநீரை இழக்கத் தொடங்கியது. ஒளியின் பிரகாசம் வலுத்தது. ஒளி உருகி பாலை மர இலைகளில் வழியத் தொடங்கியது. பாலை-மரங்கள் தேவ உலகமாக ஒளிரத் தொடங்கின. முக்கால் கட்டிய மிதிவண்டியின் வயிற்றிலும், முதுகிலும் உடமைகள் ஏறின. முன்கைகள் தாங்கிப் பிடிக்க மனைவி பின்னிருந்து உதைப்புக் கொடுக்க உடமைகளின் கோபுரத்தின் மேல் பிள்ளை கலசமாக இருக்க கால்கள் இயங்கத் தொடங்கின.

பின்னால் உலோக அமுக்கப் பொதிகள் வாய்பிரியும் அசைவுகள் துரத்திக் கொண்டு வந்தன. தூரத்தே மங்கிய ஒளியில் 'தறப்பாள்' வீடுகள் புலப்பட்டன.

**-தி.தவபாலன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வீரஅபிமன்யு

இதுதான் என்ரை கடைசிச் சண்டையாக இருக்கலாம் இப்படிக் கூறிவிட்டு என்னைத் திரும்பிப் பார்த்தான், அச்சத்தைக் காணவில்லை. விடுதலைப் புலிகளிடம் மட்டுமே காணமுடிந்த களத்தில் தோன்றும் புன்னகைதான் இருந்தது. காசி அண்ணாவின் 'பத்துத் தடவை பாடை வராது' என்ற கவிதையில் உள்ள, செத்து மடிதல் ஓரேயொரு முறைதான் சிரித்துக் கொண்டே செருக்களம் வாடா என்ற வரிகள்தான் ஞாபகத்திற்கு வந்தன. அந்தக் கணத்தில் தனது சாவு நிகழ்வதற்குள் எப்படியெப்படி எதிரி தரப்பில் மிகக் கூடியளவு சேதத்தை விளைவிக்கலாம் என்ற எண்ணமே மேலோங்கியிருந்தது.

ஆனையிறவுத் தாக்குதலுக்குத் திட்டமிடும் போதே வெற்றிலைக்கேணி, கட்டைக்காடுப் பகுதியில் மிகப்பெரும் போர் மூளும் என்பது எமக்குத் தெரியும். கடல்வழியால் தரையிறங்கக் காத்திருக்கும் சிறீலங்காப் படைகளுக்கு இது உங்களுக்குச் சொந்தமான நிலமல்ல உங்கள் இஸ்டப்படி கால் வைக்க என்ற செய்தியைச் சொல்லக் காத்திருந்தபோதே ஈழவன் இதுதான் என்ரை கடைசிச் சண்டையாய் இருக்கலாம் என்று கூறினான்.

என்னையும் ஈழவனையும் தவிர்ந்த மற்ற எல்லோரும் கடலையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் கவனமெல்லாம் அங்கே–தான். ஈழவனின் கூற்றுக்கு நான் பதில் சொல்லாமலிருக்கும் போது மீண்டும் சிரித்தபடி அவன் தொடர்ந்தான். மச்சான் உவன் சிங்களவன்ரை மோட்டுத்தனமான நடவடிக்கையைப் பார்க்க எனக்கு மகாபாரதக் கதை–தான் ஞாபகத்திற்கு வருகுது. அந்தக் கதையில பாண்டவருக்கு எதையும் கொடுக்க கௌரவர்கள் தயாராக இருக்கேல்ல. எந்த தூதுக்கும் அவன் மசியேல்லை. நாடு கேட்டு, ஊர் கேட்டு, ஐந்து வீடு கேட்டு, கடை–சியா ஒரு வீடு கேட்ட போதும் துரியோதனனுக்கு அதைக்குடுக்க மனம் வரவில்லை. ஒரு ஊசிமுனை நிலம்கூட தரமாட்டன் எண்டிட்டான். அதால கடைசியில போர் செய்தே பாண்டவர்கள் தங்களுடைய நிலத்தைப் பெற்றிச்சினம். அது போலத்தான் எங்கட நிலைமையும்– எங்கட முந்தையர்களின் தவறால எங்கட நிலமும் சுதந்திரமும் பறிபோன நிலையில் இப்ப நாங்கள் நடுத் தெருவில் அகதிகளாக நாடு விட்டு நாடு தாண்டி ஓடி சீ... இதனைச் சொல்லும்போது வேதனையின் தாக்கம் அவனுக்கு...

நான் ஒன்றும் பேசவில்லை. அவன் சொல்வதையே கேட்டுக் கொண்டிருக்கின்றேன். நான் இவனை நன்றாகப் புரிந்தவன். இதையெல்லாம் இவன், சொல்லும்போது எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது. அன்றொரு நாள் பிற்பகல் வேளை காவற் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான் இவன். திடீரென எதையோ உற்றுப் பார்த்தான். இந்தா மச்சான்! இதைப் பிடி ஏ.கேயை என்னிடம் திணித்துவிட்டு என்ரை அம்மா வாறா நான் ஒளியப் போறன். அவ கேட்டா நான் இல்லை வெளியில போட்டன் எண்டு சொல்லு என்று விட்டு ஓடி ஒழிந்து கொண்டான். இவன் அப்படி ஒளிவதற்கு பல காரணங்கள் உண்டு. அந்த முகாமில் தமிழீழத்தின் எல்லாத் திசைகளிலும் உள்ள போராளிகள் இருக்கின்றார்கள். அவர்களில் கணிசமானோர் தாய் தந்தையரைப் பார்க்கும் வாய்ப்பு இல்லாதவர்கள்.

தமது தாய், தந்தையர் எந்த அகதி முகாமில் இருக்கின்றார்கள் என்றோ ஏன் உயிரோடுதான் இருக்கின்றார்கள் என்றோ தெரியாதவர்கள். இவர்களோடு இருக்கும்போது தான் மட்டும் பெற்றோரைச் சந்தித்து மகிழ்ந்து கொண்டிருக்க இவன் மனம் ஒப்பவில்லை. அதனால் அப்படியான சந்திப்பை இவன் தவிர்க்க விரும்பினான். இதைவிடவும் பெற்றோரைச் சந்திப்பதால் இன்னொரு சங்கடம் ஏற்படும் என நினைத்தான். அது பெரும்பாலும் வடபகுதிப் போராளிகளுக்கு மட்டுமேயுள்ள சங்கடம். சொந்த நாட்டிலிருந்து பெற்றோரால் அகதி என்ற முத்திரையுடன் வெளிநாடுகளுக்கு துரத்தப்படுவது. அதுவும் போராட்டத்தின் பெயரால்.

> அந்தக் கணத்தில்
> தனது சாவு நிகழ்வதற்குள்
> எப்படியெப்படி எதிரி தரப்பில்
> மிகக்கூடியளவு சேதத்தை
> விளைவிக்கலாம் என்ற
> எண்ணமே
> மேலோங்கியிருந்தது.

தாயார் எமது முகாம் வாசலையடைந்தார். திணிக்கப்பட்ட காவல் கடமையில் இருந்த என்னிடம்தான் நேரே வந்தார். வண்ணார்பண்ணையிலிருந்து அந்த முகாம் வரை வந்து சேரத் தான் பட்ட சிரமத்தைச் சொன்னார். அவரது தோற்றமே அவரது களைப்பை உறுதிப்படுத்திற்று. ஈழவனை ஒருக்காப் பாக்கோணும். இந்த வார்த்தைகள் திரும்பத் திரும்ப ஒலித்தன. எனது கண்கள் அவன் ஒளித்திருந்த இடம் நோக்கித் திரும்பின. இல்லையெண்டு சொல்லு, அவனது சைகை சொல்லுகிறது. எனக்கு மனம் கேட்கவில்லை, அவனது தாயினுள் எனது தாயைக் கண்டேன். இருங்கோம்மா ஈழவனின் விருப்பத்திற்கு மாறான வார்த்தைகள் என்னிடமிருந்து ஒலித்தன.

உள்ளே சென்று சில நிமிடச் சண்டையின் பின் வலுக்கட்டாயமாக அவனை அனுப்பினேன். தயங்கித் தயங்கிச் சென்றான் அவன். அருகே வந்த மகனைக் கட்டியணைத்து முத்தமிட்டு தன் தவிப்பையெல்லாம் தீர்த்தார் தாயார். வழக்கமான உரையாடல்களுக்குப் பின் இந்தியன் ஆமிதான் போட்டாங்களே அப்பன், நீ இயக்கத்தை விட்டு வாவன். உன்ரை மூண்டு அண்ணன்மாரையும் வெளியில அனுப்பிப்போட்டன். நீ வந்து வீட்டை இரன். இவன் விரும்பாத வார்த்தைகள் தாயிடமிருந்து வந்ததும் எரிமலையானான். நீங்கள் இப்படிக் கேப்பீங்களெண்டால் நான் உங்களைச் சந்திக்க வந்திருக்கமாட்டன். தாயை, தகப்பனை, சகோதரத்தை இழந்த எத்தினை போராளிகளுக்கு மத்தியில் இருந்து உங்களைச் சந்திக்க வந்திருக்கிறன். உங்கடை மகனோட இருந்து செத்துப்போன பொடியளை நினைச்சுப் பாருங்கோ. அவங்களுக்கு எல்லாருக்கும் தாய், தகப்பன், சகோதரங்கள் வெளிநாட்டிலையா? அவங்களால தங்கட சொந்தம், பாசம் எண்டு இருக்கேலாதா?

இல்லாட்டி அவங்களால வெளிநாடு போகமுடியாதா? ஆரோ போராடிக் கொண்டிருக்க போராட்டத்தின்ரை பெயரால வெளிநாட்டில போய் அகதியெண்டு திரியிற வாழ்க்கைகாகவே என்னை வரச்சொல்லிக் கேக்கிறீங்கள். தொடர்ந்து பொரிந்து தள்ளுகிறான். தாய் பேசாமல் நிற்கிறார். கண்ணீர் மட்டும் கட்டுக்கடங்காமல் பாய்கிறது. ஒரு கணம் தனது பேச்சை நிறுத்திய அவன் அம்மா நான் வாழ்ந்தாலும் தமிழ் மண் செத்தாலும் தமிழ் மண் என்று சொன்னான். அவ்வார்த்தைகள் உணர்ச்சியில் தோய்ந்து ஒலித்தன. நான் மெய்சிலிர்த்து நின்றேன். புகலிடமற்ற அகதிகள் மேல்கொண்ட பாசத்தால் பொருளாதார அகதிகள் மீது பாயும் அவனது கோபம் நியாயமாகத்தான் தெரிந்தது எனக்கு.

இப்படியான குணங்கள்தான் அவனைப் போராளியாக்கின. அவனை இரவு பகல் எனப் பாராது உழைக்க வைத்தது. வெற்றிலைக்கேணிக் கடற்கரையில் அவன் என்னோடு பேசிக் கொண்டிருக்கையில் இவ்வாறான சிந்தனைகளே என்னுள் ஓடிக் கொண்டிருந்தன. அவன் பேசிக் கொண்டிருந்தான் நான் அவனது இயல்பை ரசித்துக் கொண்டிருந்தேன். இந்நிலையில் நாம் எதிர்பார்த்த அந்தச் சண்டை மிகச் சில நாட்களுக்குள் தொடங்கிவிட்டது. ஊன், உறக்கம் அனைத்தையும் மறந்த சண்டை அது. தாகம் மட்டும் எமக்கிருந்தது. அது தமிழீழத் தாயகம் பற்றியது. ஆகாயம் கடல் வெளி பெயரிலேயே அதன் தன்மையை வெளிப்படுத்தும் அப்போரில் புயல் வேகத்தில் பதியத் துடித்த சிங்களப்படைகளின் கால்கள் நத்தை வேகத்தில் ஊர்ந்தன. பல சமயத்தில் பின்னோக்கியும் சென்றன. பாலைவனப் போர் என வர்ணிக்கப்பட்ட இப்போரில் எஞ்சியிருந்த மரங்கள், வீடுகள் அனைத்துமே சேதமாகிவிட்டன. சேதமாகாதது எமது உறுதி மட்டுமே.

ஒரு திசையால் ஈழவனின் குழுவை நெருங்கியது சிங்கள இராணுவம். அந்த நிலையில் இரு படையினரது எண்ணிக்கை மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தில் இருந்தது. எதிரியின் வியூகத்திற்குள் ஈழவனின் படைகள் சிக்கிவிட்டன. உமிழ்ந்து கொண்டிருந்த ரவைகளின் இடைவெளி அங்குலக் கணக்கில்கூட இல்லை. வேட்டொலிகளையும் விமானக் குண்டுவீச்சையும் தவிர வேறெந்தச் சத்தமும் இல்லை. எப்படியோ வீரச்சாவடைந்தவர்களைத் தவிர காயமடைந்தவர்கள் மீட்டெடுக்கப்படுகின்றனர். இந்நிலையிலும் போர்க்களத்தை விட்டுப் பின்வாங்க இவன் மனம் ஒப்பவில்லை. ஒரு கட்டத்தில் தனியனாகவே களத்தில் நிற்க வேண்டியிருந்தது.

விடாதேங்கோ, விடாதேங்கோ இதுதான் அவனது இறுதி வாக்கியங்கள். இதுதான் நாம் அவனைத் தொலைத்த வரலாறு.

அடிக்கடி மகாபாரதக் கதைகளை ஞாபகப்படுத்திப் பேசும் ஈழவன் மகாபாரதப் போரில் இப்படித்தான் அபிமன்யுவை சுற்றி வளைத்தனர் என்பதை மறந்துவிட்டான். அதனால் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவனது பெயரைச் சுமந்தபடி ஒரு கல் எழுந்து நிற்கிறது.



மாவீரன் கப்டன் ஈழவன்
குமாரசாமி ரமேஸ்குமார்
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்
(09.10.1972 - 18.07.1991)

## கண்ணீர்ப்பூ

போராளி நாவலன்

www.tamilarangam.net



# தமிழகத்தில் தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்தநாள்



தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்தநாளை, இனிமையான திருநாளாக பெருமை பொங்கும் பெருநாளாக, ஈழத்தமிழினம் மாத்திரம் கொண்டாடவில்லை. தமிழர்களின் முகவரி தந்தவர் அவரே எனக்கூறி, தமிழகத் தமிழர்களும் கொண்டாடிவருகின்றனர். தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாட்டில் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. தமிழ்நாடு இளைஞர் பேரவை என்ற அமைப்பினால், "வீரம் அனைத்தும் தனதே உரித்தாக்கிய உலக மாவீரன் வாழியவே" என்று வாழ்த்தி எழுதப்பட்ட சுவரொட்டிகள், தமிழகம் எங்கும் ஒட்டப்பட்டிருந்தன. சைதாப்பேட்டை, சாந்தோம், திநகர் பகுதிகளில் அவை பெருமளவில் காணப்பட்டன.

புதுவையிலோ, தலைவரின் உருவப்படத்தை தாங்கியபடி வீதியுலா வந்த, பெரியார் இயக்கத் தொண்டர்கள் மகிழ்ச்சிகொண்டாடினர். இனிப்புகள், சுவைப்பண்டங்கள் வழங்கி, தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்தநாளை புதுவை இராவணன் பகுத்தறிவு இயக்க இளைஞர்கள் வீதியில் இறங்கிக் கொண்டாடினர்.




## மாவீரர்நாள் 2000

### ஜேர்மனி

25.11.00 சனிக்கிழமை ஜேர்மனியில் டோட்முண்ட் நகரில் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வு பிரமாண்டமான வகையில் நடந்தேறியது. இந்நிகழ்வில் 8000ற்கும் அதிகமான ஜேர்மன் வாழ் தமிழர்கள் கலந்து கொண்டனர்.







### டென்மார்க்

25.11.00 சனிக்கிழமை டென்மார்க்கில் இடம்பெற்ற மாவீரர்நாள் நிகழ்வில் 1300ற்கும் மேற்பட்ட மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சிறப்புப் பேச்சாளராக தமிழீழப் பற்றாளரும் கவிஞருமான திரு. அறிவுமதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.



### சுவிஸ்

27.11.2000 திங்கட்கிழமை அன்று சுவிற்சர்லாந்து பேர்ண் மாநகரில் 'பேயா' மண்டபத்தில் தமிழீழ மாவீரர்நாள் சிறப்புற நடைபெற்றது. 6000ற்கும் அதிகமான தமிழீழ மக்கள் உணர்வுபூர்வமாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.







**சுவிசில் மாவீரர்கள் நாதன், கஜன் ஞாபகார்த்த நிகழ்வு.**
சுவிற்சர்லாந்து ஜெனிவா நகரில் கடந்த மாதம் லெப்.கேணல் நாதன், கப். கஜன் நான்காம் ஆண்டு நினைவு நாள் சிறப்புற நடந்தேறியது. இருநூறிற்கும் அதிகமான மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.




**இத்தாலியில் விடுதலைக் கானச்சிட்டு 2000**
5.11.2000 அன்று விடுதலைக் கானச்சிட்டு நிகழ்ச்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக இத்தாலிக் கிளையினரால் பலர்மோ நகரில் நடாத்தப்பட்டது. மண்டபம் நிறைந்த மக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.




**பிரான்சில் குமரப்பா புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள் ஞாபகார்த்த எழுச்சி மாலை.**
22.10.2000 அன்று பிரான்சில் பாரிசின் புறநகர்ப் பகுதியான கிளிச்சிப் பகுதியில் பன்னிரு வேங்கைகள் ஞாபகார்த்த நிகழ்வு எழுச்சிகரமாக நடந்தேறியது.

| AUSTRALIA | CANADA | DENMARK | FRANCE | GERMANY | ITALY |
|---|---|---|---|---|---|
| TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | TCC<br>Postfach 101613,<br>46016 Oberhausen. | TCC<br>Via Paolo Balsamo-11<br>90100 Palermo. |
| **NETHERLANDS**<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | **NORWAY**<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | **SWITZERLAND**<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | **SWEDEN**<br>TCC<br>Glomminge Grand-25<br>3rd Floor,<br>16362 Spanga. | **UNITED KINGDOM**<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | **U.S.A**<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்